வெளியீடு 30-6-99 Issued 30-6-99

1084/99

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, மே 29, 1998 - தொகுதி 58 - எண் 2

**Friday the 29th May, 1998—Volume 58 - No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

...ssembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

[Price Rs. 3.00

D
V24, 31/4/98.
N98.58.2,1
219601

1084/99

## 29–05–1998

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்-விடைகள்-- | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 165-208 |
| 2. சிறப்புக் கவன ஈர்ப்பு-- | |
| (அ) கதர்த் துறையில் ஊழல் முறைகேடுகளால் கோடிக்கணக்கான ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக வந்துள்ள செய்தி | 209-211 |
| (ஆ) சென்னைக் கடற்கரையிலுள்ள காமராஜர் சிலை அருகில் மின் விளக்குப் போடுதல் | 212-214, 294-297 |
| 3. விதி 111-ன்கீழ் அமைச்சரின் அறிக்கை---- | |
| 10-4-1997 அன்று வினா எண் 3618-ன்மீது திரு. க. மணிவர்மா கேட்ட துணை வினாவிற்கான விடையில் திருத்தம் குறித்து வேளாண்மைத் துறை அமைச்சரின் அறிக்கை | 214-215 |
| 4. கவன ஈர்ப்பு-- | |
| (அ) நாகப்பட்டினம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளிக் கட்டடம் பழுது பார்க்க அனுமதி | 215-217 |
| (ஆ) சிம்சன் தொழிற்சங்கத் தேர்தல் விதிமுறைகளின்படி நடத்தப்படாமல் உள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை | 217-222, 223-224 |

பக்கங்கள்

5. தகவல் கோரல்--
உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை 222-223

6. அறிக்கைகள் அளித்தல்--
(அ) பொது நிறுவனங்கள் குழு 224
(ஆ) அவை உரிமைக் குழு 224

7. அறிவிப்புகள்--
(அ) தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டமுன்வடிவு, 1998 (ஆ.செ) 225
(ஆ) முதல்வர் அளிக்கும் விருந்திற்குச் செல்ல சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பேருந்து வசதி 315-316

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)-- 225-294, 298-315
(அ) தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டமுன்வடிவு, 1998 225-246
மாண்புமிகு திரு. துரைமுருகன் . 225,231, 238-244,246
*டாக்டர் க. கிருஷ்ணசாமி 225-228,233
*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 227,229,230, 232,235,236
*திரு. லா. சந்தானம் 228-229
திரு. ஆர். சொக்கர் 229
திரு. டி. மணி 230
திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் 230,231
திரு. ஜி.கே. மணி 231,232
திரு. ஜி. நிஜாமுதீன் 233-234
திரு. சி. ஞானசேகரன் 234-236
மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி 234-235
திரு. ஜி. பழனிசாமி 237-238

21940



V211,31'N98
D
N98 58.2;1

பக்கங்கள்

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)--தொடர்ச்சி
(ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 246-258
மாண்புமிகு திரு. ஆலடி அருணா 246,249-256,258
திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் 247-248
திரு. ஜி. நிஜாமுதீன் 248-249
திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் 255
திரு. மு. அப்பாவு 255-256
திரு. ஆர். சொக்கர் 256-257
*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 257
(இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 259-260
மாண்புமிகு திரு. ஆலடி அருணா 259,260
(ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 260-262
மாண்புமிகு திரு. ஆலடி அருணா 261,262
(உ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (தனி வகைமுறைகள் மற்றும் செல்லத் தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு, 1998 262-264
மாண்புமிகு திரு. ஆலடி அருணா 262-264
(ஊ) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 264-266
மாண்புமிகு திரு. ஆலடி அருணா 264-266
(எ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 266-268
மாண்புமிகு திரு. ஆலடி அருணா 266,268
(ஏ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (தனி வகைமுறை) சட்டமுன்வடிவு, 1998 268-270
மாண்புமிகு திரு. ஆலடி அருணா 268,269

| | பக்கங்கள் |
|---|---|
| 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)--தொடர்ச்சி | |
| (ஐ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 | 270-282 |
| மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 270,274, 280-282 |
| திரு. ஆர். சொக்கர் | 271,276-278 |
| திரு. ஜி. கே. மணி | 271-272 |
| திரு. ஜி. நிஜாமுதீன் | 272-273 |
| திரு. டி. மணி | 273 |
| திரு. ஜி. பழனிசாமி | 273-274 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 275-276, 278-280 |
| (ஒ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 | 282-284 |
| மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 282,284 |
| (ஓ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 | 284-286 |
| மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 284,286 |
| (ஔ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்றுதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 | 286-290 |
| மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 286,288, 289-290 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 287 |
| திரு. சி. ஞானசேகரன் | 287 |





| | பக்கங்கள் |
|---|---|
| 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)--தொடர்ச்சி | |
| (க) தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 | 290-294 298-302 |
| மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி | 290,291, 298-302 |
| *திரு. செங்கை சிவம் | 291-292 |
| திரு. ச. அழகிரி | 292-294 |
| (ங) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 | 302-307 |
| மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் | 302,304-307 |
| டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் | 303-304 |
| (ச) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகச் (திருத்த) சட்டமுன்வடிவு, 1998 | 307-310 |
| மாண்புமிகு திரு. ஆலடி அருணா | 308-310 |
| (ஞ) தமிழ்நாடு வன (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 | 310-313 |
| மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி | 310-313 |
| திரு. சி. ஞானசேகரன் | 311 |
| (ட) இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 | 314-315 |
| மாண்புமிகு திரு. இ. பெரியசாமி | 314,315 |
| 9. அரசினர் தீர்மானம்-- | |
| பேரவை விதி 32-ஐத் தளர்த்தல் | 316 |
| 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 317 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## வைகாசி 15, வெகுதான்ய--திருவள்ளுவர் ஆண்டு 2029

## 1998 மே 29, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. பரிதி இளம்வழுதி** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

*"கருமஞ் சிதையாமல் கண்ணோட வல்லார்க்(கு)*
*உரிமை உடைத்திவ் வுலகு".*

கடமை தவறாமையிலும், கருணை பொழிவதிலும் முதன்மையாக இருப்போருக்கு இந்த உலகமே உரிமையுடையது ஆகும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### குறிப்பிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் *661*, திரு. இ.ஜி. சுகவனம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**661--**

### தமிழில் மொழியாக்கம் செய்தல்

**2934*--**திரு. இ.ஜி. சுகவனம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

[1998 மே 29

(அ) இந்திய ஆட்சிப் பணித் தேர்வுகளைத் தமிழில் எழுதும் மாணவர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய பதினொன்றாம், பன்னிரெண்டாம் வகுப்பு அனைத்துப் பாடப் (என்.சி.இ.ஆர்.டி) புத்தகங்களையும் தமிழில் மொழியாக்கம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைப்படுத்தப்படும்?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இதுபோன்ற திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரை இந்திய அளவிலே இந்திய ஆட்சிப் பணித் தேர்வு முறைகளில் தேர்ச்சி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருக்கிறது. ஆகவே, அத்தேர்வுகளைத் தமிழில் எழுதக்கூடிய மாணவர்கள் எளிதில், புரிந்துகொள்ளக்கூடிய அளவிலே, 11-ஆம், 12-ஆம் வகுப்புகளில் உள்ள அனைத்துப் பாடப் புத்தகங்களையும் (என்.சி.இ.ஆர்.டி.) தமிழில் மொழி பெயர்க்கச் செய்தால், இதுபோன்ற தேர்வுகளை மாணவர்கள் சிறப்பாக எழுதி, அதிக அளவிலே தேர்ச்சி பெறுகின்ற வாய்ப்பு கிடைக்கும். ஆகவே, இந்திய ஆட்சிப் பணித் தேர்வுகளை தமிழில் எழுதி, தமிழகத்திலே உள்ள மாணவர்கள் அதிக அளவிலே தேர்ச்சி பெறுவதற்கு அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்.சி.இ.ஆர்.டி. என்பது தேசிய அளவில் பாடத் திட்டங்களை வகுத்து, உரிய பாடங்களை அந்த ப்ளஸ்-2 வகுப்புகளுக்குரிய பாடங்களை வழங்கும் நிறுவனமாகும். அதற்குச் சமமான நிலையில் தமிழ்நாட்டில் அதே அடிப்படையில் பாடத் திட்டங்கள் வகுக்கப்பட்டு, 11-வது, 12-வது வகுப்புகளுக்கும் அச்சிடப்பட்டு வழங்கப்படுகின்றன. அது சமநிலை உடையது. அது ஏற்கெனவே ஏற்றுக்கொள்ளப்பட்டு 100-க்கு 90 மாணவர்கள்



1998 மே 29]

தமிழில் படிக்கக்கூடிய நிலைமையும் கூட இருக்கிறது. இரண்டாவது, இந்திய ஆட்சிப் பணித் தேர்வை, பட்டதாரிகள்தான் எழுத முடியுமே தவிர ப்ளஸ்-2 படித்தவர்கள் எழுத முடியாது. பட்டம் படித்தவர்கள் தமிழில் எழுத விரும்பினால் அவர்கள் தமிழில் நல்ல தேர்ச்சி பெறுவதற்காக, குறிப்பாகத் தாங்கள் எடுத்துக்கொள்ளக்கூடிய சிறப்புப் பாடங்களில் தமிழில் தேர்வு எழுதக்கூடிய வாய்ப்புப் பெறுவதற்காக, பல்கலைக் கழகங்களிலேயும்கூட கல்லூரிப் பாடங்களைத் தமிழிலே நடத்த வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. தமிழில் பல கல்லூரிகளின் பாடப் புத்தகங்கள் வெளிவருவதற்கும் அரசு, பல்கலைக் கழகங்கள் மூலமாக தகுந்த முயற்சி எடுத்து, பல புத்தகங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு தமிழகத்திலே ஏற்கெனவே அகில இந்திய அளவில் எத்தனை தமிழர்கள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வில் வெற்றி பெற்றிருக்கிறார்கள்? சமீபகாலத்தில், தமிழர்கள் இந்தத் தேர்விலே வெற்றி பெறுவது என்பது கணிசமாகக் குறைந்திருக்கிறது. 1967 அல்லது 1970 ஆம் ஆண்டு வரை பார்ப்பீர்கள் என்றால் டெல்லி சென்றாலும் சரி, பஞ்சாப், அரியானா போன்ற எந்த மாநிலங்களுக்குச் சென்றாலும் சரி, அங்கெல்லாம் தமிழர்கள்தான் அதிகமாக ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக இருப்பதைக் கண்டோம். ஆனால், இப்போது அந்த நிலைமைகள் எல்லாம் மாறி, தமிழர்கள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்விலே குறைந்து வருகிறார்களே, அதற்குக் காரணம் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண்டறிந்து, அதற்காக ப்ளஸ்-2 தேர்வில் இருந்தே அவர்களைப் பக்குவப்படுத்தி, அவர்கள் எல்லோருக்கும், அதிக அளவிலே ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்விலே வெற்றி பெறுவதற்கு, பயிற்சி அளிக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்குப் பல விடைகள் சொல்லலாம். ஒன்று, தனிக் கேள்வி போட வேண்டும். இரண்டாவது, இது ஒரு பொதுப் பிரச்சினை. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுகளில் தமிழ்நாட்டு மாணவர்களில் மிக அதிக நுண்ணறிவு வாய்ந்த மாணவர்கள்

[1998 மே 29

அதிகம் சென்று போட்டியிட முனையவில்லை. அவர்களிலே பலர் மருத்துவக் கல்லூரிக்கோ, பொறியியல் கல்லூரிக்கோ செல்கிற வாய்ப்பு இருக்கிற காரணத்தினால், படித்தவுடன் இதிலே இருக்கிற வேலை உறுதி, தொழில் உறுதி, இந்த ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்.-ல் இருப்பதாகக் கருதி போட்டியில் ஈடுபட்ட அந்தப் பழைய ஆர்வம் குறைந்து போய் இருக்கிறது. மூன்றாவது, கடந்த இரண்டு ஆண்டுகளில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்வுகளில் நம்முடைய மாணவர்கள் அதிகமாக முன்னேறி அதிக வெற்றி பெற்று வருகிறார்கள். அது ஏடுகளில் எல்லாம் வெளிவந்திருக்கிறது. நான்காவது, மறறவர்களும் படிக்க ஆரம்பித்து விட்டார்கள். இது தவிர வேறு சில மாநிலங்களில் ஏற்கெனவே கல்வி நிலை சற்று தாழ்ந்து இருந்தது; அவைகள் இப்போது மேல்நிலை அடைந்திருக்கின்றன. ஐந்தாவது, நேரு பல்கலைக் கழகம் போன்ற மத்திய அரசால் நடத்தப்படுகின்ற சில பல்கலைக் கழகங்களில் அதிக உதவித் தொகைகள் கொடுத்து பல மாணவர்கள் பல மாநிலங்களிலிருந்து அங்கே சென்று படித்து அதன் காரணமாக அவர்கள்கூட இந்த வாய்ப்பை அதிகம் பெறுகிறார்கள். எனவே, இது ஒரு தொடர்ச்சங்கிலி போன்ற நடவடிக்கைகளால் விளைய வேண்டிய ஒன்றே தவிர, பிளஸ்-2 பாடங்களை, அதுவும் என்.சி.இ.ஆர்.டி. பாடங்களைத் தமிழிலே மொழி பெயர்த்து வெளியிடுவதால் மட்டும் இந்தத் தேர்வில் பெரிய வெற்றியைப் பெற்றுவிட முடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

*முற்பகல் 9-35*

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு தமிழகத்திலேயிருந்து ஐ.ஏ.எஸ். தேர்வில் அதிகமாகத் தேர்வு பெற்றவர்கள் தமிழை, தங்களுடைய தேர்வு மொழியாக ஏற்றுக்கொண்டு, தமிழில் பரீட்சை எழுதியவர்கள் தான் அதிகமாகத் தேர்வு பெற்று இருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறோம. அது உண்மைதானா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்கான விடைகள் என்னிடம் தற்போது இல்லை.



1998 மே 29]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் சிலரே சில ஜாதிச் சங்கங்களுக்குத் தலைவர்களாகவும், ஆலோசகர்களாகவும் இருக்கிறார்கள். - பதவி முடிந்த பிறகு அவர்கள் ஆலோசகர்களாகவும், தலைவர்களாகவும் இருந்துகொண்டு குறுகிய வட்டத்தில் ஜாதி வெறியை, மத வெறியை தூண்டக்கூடிய நிலையைக் கண்டுபிடித்து, அதற்கு அரசு தடை விதிக்க ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் விரும்பினால் பதில் சொல்லலாம். ஆனால் இந்தக் கேள்விக்கு விடை சொல்ல அவசியம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 3 தினங்களுக்கு முன்பு மையப் பணிகளுக்கான தேர்வுப் பட்டியல் ஒன்று பத்திரிகையில் விரிவாக வெளிவந்திருக்கிறது. நூற்றுக்கணக்கான பேர் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். அதிலே தமிழர்கள் 10 பேருக்கும் குறைவாகத்தான் தேர்வு பெற்று இருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம்? இந்தக் குறையை நீக்குவதற்கு ஏதாவது சிறப்புப் பயிற்சி மையங்களை அரசு ஏற்படுத்துமா? தமிழர்களின் எண்ணிக்கை நிரந்தரமாகக் குறைந்து கொண்டே வருகிறது. அதனால்தான் நான் எண்ணியே பார்த்தேன். 500 பேருக்கு மேலே உள்ள பட்டியலில் 10 பேர்தான் தமிழர்கள் இருக்கிறார்கள். எனவே, இந்தக் குறையைத் தீர்ப்பதற்கு அரசு என்ன சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ள இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் குறையைப் போக்குவதற்காகவே சில ஆண்டுகளாக ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற தேர்வுகள் எழுதுகிறவர்களுக்கு, எழுத விரும்புகிற மாணவர்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு ஒரு தனிப் பயிற்சி

[1998 மே 29

நடத்தப்படுகிறது. அதேபோல் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் ஒரு தனிப் பயிற்சி நடத்தப்படுகிறது. அந்தப் பயிற்சியை ஓர் ஆண்டுக்காலம் பெற்றவர்கள் இந்தத் தேர்வில் சற்று அதிகமாக முன்னேறி, தகுந்த வெற்றி பெறுகிறார்கள். அதுமட்டுமல்லாமல் பல்கலைக் கழகங்களும், மாநிலக் கல்லூரி போன்ற சில கல்லூரிகளும் இந்தத் தேர்வுக்காகத் தனியாக, சிறப்பாக பயிற்சி பெற விரும்புகிறவர்களுக்கு, பயிற்சிகளை வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அத்தகைய பயிற்சிகளை வழங்கி அவர்களை அதிலே ஈடுபடுத்துகிற ஒன்றைத்தான் நம்மால் செய்ய முடியும். மற்றும் ஒன்று, பெயர்ப் பட்டியலைப் பார்க்கிறபோது தமிழர்களாகத் தெரிய முடியாத அளவுக்குத் தமிழ்நாட்டில் வேறு பெயர்கள் நிரம்ப இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் உணருவார்கள் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த சில வருடங்களாகத் தமிழ்நாட்டிலிருந்து தேர்வுக்குச் செல்லக்கூடிய ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., பயிற்சி மாணவர்கள் அதிகமாகத் தேர்வு செய்யப்படாமல் இருக்கக்கூடிய நிலைமைக்குக் காரணம், நேர்முகத் தேர்வில் அமரக்கூடிய அந்தத் தேர்வாளர்கள் தமிழர்களைக் காழ்ப்புணர்வோடு பார்க்கக்கூடிய ஒரு மனப்போக்கு இருந்தது என்ற ஒரு புகார் எழுந்தது. அதைத் தமிழக அரசு அறியுமா? அதைப் போக்குவதற்குத் தக்க நடவடிக்கை எடுத்து, தமிழகத்தில் இருக்கக்கூடிய மாணவர்கள் அதிகமாக ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்வு பெறத் தக்க நடவடிக்கையை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற தேர்வுகளில் நேர்முகத் தேர்வுக்குச் செல்கிறபோது தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் விடை அளிப்பதும், உரையாடுவதும் சற்றுக் கடினமாக இருக்கிறது. வேறு சில மாநிலங்களில்கூட ஆங்கிலத்தில் படித்து விட்டு வருகிறவர்களுக்கு, ஆங்கிலத்தில் சரளமாகப் பேசக்கூடிய வாய்ப்பு இருக்கிற காரணத்தால், அவர்கள் அதிகமாகத் தங்களுக்குத் தகுதி இருப்பதாக அந்தக் குழுவை உணரச் செய்கிறார்கள். ஆகவே, ஆங்கில



1998 மே 29]

உரையாடலிலே நல்ல தேர்ச்சி இருக்குமானால் இன்னும் சற்று அதிகமாக முன்னேறலாம். இரண்டாவது, காழ்ப்புணர்ச்சியோடு தமிழ்நாட்டு மாணவர்களைப் பார்க்கிறார்கள் என்று சொல்வதற்குத் தகுந்த காரணம் இல்லை.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 662, திரு. ஜி. நிஜாமுதீன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**662--**

**வேளாண்மை அல்லது கைத்தொழிலைக் கட்டாயப் பாடமாக்குதல்**

*13638*--**திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பாடத் திட்டத்தில் வேளாண்மை அல்லது கைத்தொழிலைக் கட்டாயப் பாடமாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

பாடத் திட்டத்தில் வேளாண்மை அல்லது கைத்தொழிலைக் கட்டாயப் பாடமாக்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளிக்கூடங்களில் வேளாண்மை அல்லது கைத்தொழிலை, பாடமாக்குவதனால் எதிர்காலத்தில் அவர்களுக்குத் தொழில் தெரியக்கூடிய வாய்ப்பு அமைகின்றது. இன்று பல மாநிலங்களில் விளையாட்டைக்கூட, கட்டாயப் பாடமாக்கி வருகின்றார்கள். ஆகவே, வேளாண்மையையும், கைத்தொழிலையும், விளையாட்டையும் கட்டாயப் பாடமாக ஆக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கட்டாயப் பாடமாக்குவது என்று சொன்னால் அவர்கள் அதற்குமேல் படிப்பதற்கான வழியுள்ள

[1998 மே 29

பாடங்களிலே ஒன்றைத்தான் கட்டாயப் பாடமாக ஆக்க முடியும். அந்த முறையிலே வேளாண்மையைப் பயில்வது கட்டாயம் என்று சொன்னால் அதற்குமேல் மேல்படிப்புக்குச் செல்லுகின்ற வாய்ப்பு அவர்களுக்குச் சற்று தடைபடுகிறது. ஏனென்றால் பேசிக் சயின்ஸ் என்ற முறையில் கணிதம், வேதியியல், இயற்பியல், அதற்கு அடுத்து பயாலஜி இவைகள்தான் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. எனவே, வேளாண்மையை தொழில் பயிற்சி வழங்கப்படுகின்ற பள்ளிகளில் வழங்குவதற்கு ஏற்பாடு செய்தும்கூட, அந்தத் தொழில் பயிற்சியில், வணிகத் துறையில் காமர்ஸ் அன்ட் பிசினஸ் படிப்பை 1,126 இடங்களில் பயில்கிறார்கள்; என்ஜினியரிங் அன்ட் டெக்னாலஜி படிப்பை 543 இடங்களில் பயில்கிறார்கள்; ஆனால் வேளாண்மை படிப்பை 146 இடங்களிலேதான் பயில்கின்றனர். இந்தச் சிறப்புப் பயிற்சி வழங்கப்படுகிற இடத்திலேகூட 100-க்கு 7 மாணவர்கள்தான் வேளாண்மையை எடுத்துப் பயில்கிறார்கள். அப்படிப் பயில்கிற மாணவர்களுடைய மொத்த எண்ணிக்கை ஏறத்தாழ 6 ஆயிரம், 7 ஆயிரம் பேர் என்ற அளவில் நான் அந்த எண்ணிக்கையையும் வைத்திருக்கிறேன். எனவே, எல்லோரும் வேளாண்மையைப் படிக்க விரும்புகிறார்கள் என்ற நிலைமை இருக்குமானால் அப்பொழுது நாம் இதை அதிகமாக, பரவலாக நடத்துவதற்கு முயற்சிக்கலாம். மற்றொன்று, வேளாண்மை என்பது சுற்றுப்புறச் சூழலைப்போல, ஓர் இயற்கைச் சூழ்நிலையைப் புரிந்துகொள்வதற்கு ஒரு துணையாக இருக்கிற ஓர் அறிவுத் துறை என்ற காரணத்தால் பல்வேறு பாடங்களிலேயும்கூட இந்த வேளாண்மையைப் பற்றிய சில குறிப்புப் பாடங்கள் இடம் பெறுகின்றன. பொதுவான பாடம் என்ற முறையிலேதான் அதை இடம் பெறச் செய்யக்கூடிய வாய்ப்பு தற்போது இருக்கிறது.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளிகளிலே கைத்தொழில் ஆசிரியர் என்று முன்னால் இருந்தார்கள். இப்பொழுது அந்தப் பணி இடங்கள் காலியாக இருக்கின்றன. 1996-இலே மீண்டும் கைத்தொழில் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுவர் என்று இந்த அரசு தகவல் அளித்தது. அதன்படி மீண்டும் கைத்தொழில் ஆசிரியர்கள் பள்ளிகளிலே நியமிக்கப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கு ஒரு தனிக் கேள்வி போட



1998 மே 29]

வேண்டும். வேளாண்மை வேறு, கைத்தொழில் ஆசிரியர்களுக்கு வேலை கிடைப்பது என்பது வேறு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 663, திரு. பா. வேல்துரை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**663--**

**யானைக்கால் நோய் பரவுவதைத் தடுத்தல்**

*9505--**திரு. பா. வேல்துரை:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சியில் யானைக்கால் நோய் பரவியுள்ள அபாயம் அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இந்நோயினைக் கட்டுப்படுத்துவதற்காக, பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை பல்வேறு பரிசோதனை முகாம்கள் நடத்தி, நோய் பாதித்தவர்களுக்கு டி.இ.சி. மாத்திரைகள் வழங்கி, சிகிச்சை அளித்து வருகிறது. இந்நோய் பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் உருவாக்க, சுகாதாரக் கல்வி அளிக்கப்பட்டு, இந்நோய் வரும் முன்பே காக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வேல்துரை, இருக்கையில் இல்லை. திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே, தண்டராம்பட்டு தென்முடியனூர், அல்லப்பனூர், கீழ்வெளக்கம்பாடி, அரடாப்பட்டு,

[*1998 மே 29*

*சாத்தனூர் ஆகிய கிராமங்களில் உள்ளவர்களுக்கு 100-க்கு 25 பேர் வீதம் யானைக்கால் நோய் அதிகமான அளவிலே பரவியிருக்கிறது. அந்நோயைத் தடுப்பதற்குண்டான நடவடிக்கையிலே இன்று வரையிலே அரசு முழுமையாக ஈடுபடாமல் இருக்கிறது. எனவே, அங்கே யானைக்கால் நோய்த் தடுப்பு யூனிட் ஒன்றைத் தொடங்கி, பாதிக்கப்பட்டவர்களுக்குத் தீவிரமான சிகிச்சை அளித்து, அந்த யானைக்கால் நோயைக் குணப்படுத்த மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்நோய் இப்போது திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்திலேதான் அதிகமாகப் பரவியிருக்கிறது என்று அரசுக்குத் தகவல் கிடைத்து, உடனடியாக அதற்கான நடவடிக்கைகளிலே அரசு ஈடுபட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற திருவண்ணாமலை மாவட்டத்திலே அந்நோய் பரவியிருக்குமானால் அதுகுறித்தும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.*

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *வினா எண் 664, டாக்டர் வே. ஆல்பன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.*

**664--**

**சவக்கிடங்குகளில் தொற்றுநோய் பரவாமல் தடுத்தல்**

**13309*--**டாக்டர் வே. ஆல்பன்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை, தக்கலை போன்ற வட்ட மருத்துவமனைகளின் சவக்கிடங்குகளில், தொற்றுநோய் பரவாமல் தடுக்க, குளிர்சாதன வசதி செய்து தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*



*1998 மே 29*]

*தற்போது நாகர்கோவிலில் உள்ள அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனையில் குளிர்சாதன வசதி கொண்ட சவக்கிடங்கு உள்ளது. நாகர்கோவிலிலிருந்து தக்கலை மற்றும் குழித்துறை மருத்துவமனைகள் 16 கிலோமீட்டர் தொலைவில் உள்ளன. அரசின் கொள்கைப்படி, 9-வது ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள் அனைத்து மருத்துவமனைகளிலும் உள்ள சவக்கிடங்குகள் குளிர்சாதன வசதி கொண்ட சவக்கிடங்குகளாக மாற்றப்பட உள்ளன. இதன் அடிப்படையில், நிதி நிலையைக் கருத்தில் கொண்டு, வரவிருக்கும் பகுதி II திட்டத்தின்கீழ், அவசியம் ஏற்பட்டால் குழித்துறை, தக்கலை போன்ற வட்ட மருத்துவமனைகளில் உள்ள சவக்கிடங்குகளுக்குக் குளிர்சாதன வசதி செய்வது குறித்து பரிசீலிக்கப்படும்.*

**டாக்டர் வே. ஆல்பன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தக்கலை, குழித்துறை ஆகிய அரசு மருத்துவமனைகள் வட்டத் தலைநகரங்களில் அமைந்திருக்கக்கூடிய மருத்துவமனைகளாகும். மேலும், இந்த இரு மருத்துவமனைகளும் நகரத்தின் மையப் பகுதியிலே அமைந்திருக்கின்றன. சுற்று வட்டாரத்தில் பொதுமக்களும் வசித்து வருகிறார்கள். சவக்கிடங்கு குளிர்சாதன வசதி செய்யப்படாத காரணத்தினால், பிணப் பரிசோதனை செய்வதில் சில நாட்கள் தாமதமானாலும் அந்தப் பிணங்கள் அழுகி துர்நாற்றம் எடுத்து, தொற்று நோய் பரவ ஏதுவாக இருக்கிறது. மேலும் குழித்துறையிலிருந்து நாகர்கோவில் சுமார் 45 கிலோமீட்டர் தொலைவில் இருக்கிறது. எனவே, அரசு மறுபரிசீலனை செய்து இந்த இரு மருத்துவமனைகளின் சவக்கிடங்குகளுக்கும் குளிர்சாதன வசதி செய்து தரப்படுமா என அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள எல்லா தாலுகா மருத்துவமனைகளிலும் உள்ள சவக்கிடங்குகளுக்கு, குளிர்சாதன வசதி செய்து கொடுக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய திட்டம். அதற்காக, மத்திய அரசாங்கத்திடம் நிதியைக் கேட்டிருக்கிறோம். அந்த நிதி வந்தாலும், வராவிட்டாலும் பகுதி II திட்டத்தின்கீழ், மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிடுகின்ற குழித்துறை, தக்கலை போனற வட்ட மருத்துவமனைகளில் குளிர்சாதன வசதி செய்து கொடுப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.*

[1998 மே 29

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குழித்துறை மருத்துவமனையிலே இருக்கக்கூடிய சவக்கிடங்கு என்பது அங்கேயிருக்கக்கூடிய பிரசவ வார்டோடு சேர்ந்திருக்கிறது. இதைத் துரிதமாக இன்னொரு பகுதியிலே மாற்றியமைப்பதன் மூலமாகத்தான் இங்கே சொல்லப்படுகின்ற, குறிப்பிடப்படுகின்ற இந்த விஷயங்களைத் தடுத்து நிறுத்த முடியும். பக்கத்திலே, நேராகப் பின்புறம் இருக்கிறது, 6 அடி தூரம் கூட இருக்காது. குடியிருப்புகள் வேறு இருக்கின்றன. அதனால், அவசரமாக அந்தச் சவக்கிடங்கை இன்னொரு பகுதிக்கு மாற்ற அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குளிர்சாதன வசதி செய்து தரும்போது இதையும் அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 665, திரு. கே. தங்கமணி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**665--**

### திருப்புவனம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

*835--**திரு. கே. தங்கமணி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை, திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து கிராமங்களுக்கும் விரிவாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,



1998 மே 29]

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்புவனம் ஒன்றியத்தில் உள்ள கிராமங்களிலே இருக்கக்கூடிய நீர் அமைப்புகள் இப்போது அந்தப் பகுதி மக்களுக்குப் போதுமான அளவில் இல்லை. அதோடு மட்டுமல்லாமல் அங்கே இருக்கக்கூடிய எல்லாக் கிராமங்களிலும் உப்புத் தண்ணீர்தான் அதிகமாக இருக்கிறது. இப்போது திருப்புவனம் அருகில் வைகையிலிருந்து அருப்புக்கோட்டைக்கும், அதேபோல, மணலூருக்குப் பக்கத்திலிருந்து மதுரைக்குமாக குடிநீர் எடுத்துச் செல்லப்படுகிறது. எனவே, திருப்புவனம் ஒன்றியத்தில் இருக்கக்கூடிய கிராமங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக, தண்ணீர் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க மறுபரிசீலனை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக வைகை ஆற்றில் தண்ணீர் வராத காலங்களில், எல்லா இடங்களிலும் நீரூற்று கிடைப்பதில்லை. பல இடங்களில், பல நேரங்களில் வற்றிவிடுகின்றன. அதுபோல, திருப்புவனம் ஒன்றியத்திலேயுள்ள அனைத்து கிராமங்களையும் திருப்புவனம் குடிநீர்த் திட்டத்தில் இணைத்து பெரிய அளவில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை. ஆனால், இன்றையநிலை, 1-4-1998 நிலவரப்படி, திருப்புவனம் ஒன்றியத்திலே உள்ள மொத்த கிராமங்கள் 146. அவற்றில் முழுமையாகக் குடிநீர் வசதி பெற்றவை 112. பகுதியாகக் குடிநீர் வசதி பெற்றவை 34. இந்த 34 கிராமங்களில் 1998-99 நிதியாண்டில் பொதுவாக அரசு எடுத்திருக்கின்ற கொள்கையின்படி 10 லிட்டருக்கும் குறைவாகக் குடிநீர் வசதி பெறும் 14 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்க, திட்டங்கள் நிறைவேற்றப்படவிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆத்தூர்-மேட்டூர் குடிநீர்த் திட்டத்திலே, இருவாசம்பட்டி ஊராட்சியிலே, 8 மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டும், அந்தத் தொட்டிகளில் இதுவரை நீர் ஏற்றம் செய்யப்படாமல் இருக்கின்ற

நிலையுள்ளது. இவற்றுக்கு நீர் ஏற்றம் செய்ய அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி திருப்புவனம் தொகுதியைப் பொறுத்தது. எனவே, தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்டவாரியாக, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளையும், குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளையும் அழைத்து ஒரு கலந்துரையாடல் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார்கள். அது நல்ல பலனைத் தந்தது. கிராமப் பகுதிகளிலே திட்டங்கள் சிறப்பாகச் செயல்பட உதவிகரமாக இருந்தது. ஆகவே, நடப்பு ஆண்டிலேயும் அதுபோன்ற ஒரு திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செயல்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற கலந்துரையாடல் கூட்டம் நடத்தாத மாவட்டங்கள் பாக்கியிருக்கின்றன. அதை இந்த மாத இறுதியில் தொடங்கலாம் என்று இருக்கிறேன். அதை முடித்துவிட்டு அடுத்த மாதத்திலிருந்து, அதாவது ஜூலை மாதத்திலேயிருந்து அந்தப் பணியை மேற்கொள்ளலாம் என்று இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 666, திரு. வி.ஜி. தனபால், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**666--**

### குடியாத்தம் நகரில் பாதாளச் சாக்கடை

*4874--**திரு. வி.ஜி. தனபால்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--





(அ) குடியாத்தம் நகரில் பாதாளச் சாக்கடை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**திரு. வி.ஜி. தனபால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் நகரம் வளர்ந்து வரும் ஒரு நகரம் ஆகும். கடந்த 120 ஆண்டுகளாக நகராட்சியின்கீழ் இயங்கும் இந்த நகரத்திற்கு, பாதாளச் சாக்கடைத் திட்டம் அவசியமாகும். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வதுடன், ஏற்கெனவே உள்ள கழிவுநீர்க் கால்வாய்களின் மேல் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும், அடைப்புக்களை நீக்கி தூர் எடுக்கவும் நகராட்சிக்குச் சிறப்பு நிதியை அளிக்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு என்று அரசிடம் ஒரு கொள்கை உள்ளது. குறிப்பாக, மாவட்டத் தலைநகரங்கள் மற்றும் ஓர் இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகை உள்ள இடங்கள் ஆகிய இவைகளைத் தேர்வு செய்ய வேண்டும். அதிலேயும், குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் சாக்கடைத் திட்டத்தை அமல்படுத்தி, எப்படியாவது சாக்கடை நீரை வெளியே கொண்டு வந்து, அசுத்தத்தைப் போக்க வேண்டும் என்ற ஓர் எண்ணத்தை நாம் வைத்துக்கொள்ள வேண்டுமே தவிர, சாக்கடையைச் சுத்தம் செய்வது என்றாலே பாதாளச் சாக்கடைத் திட்டம்தான் என்று உறுப்பினர்கள் இதயத்திலே ஏற்றுக் கொள்ளக்கூடாது. குறிப்பாக, ஈரோட்டில் நடைபெறுகிற அந்தத் திட்டம் முடிவடைய எத்தனை ஆண்டுகள் ஆகும் என்பதையும் கணக்குப் பண்ணிப் பார்க்க வேண்டும். அதோடுகூட, நிதியாதாரத்தைத் தேடுவது என்பது தற்போது மிகவும் துர்லபமாக இருக்கிறது. எப்படியும் கழிவு நீரை அகற்றுவதற்கு நாம் முயற்சிக்க

[1998 மே 29

வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்த அரசு இருக்கிறது. அதைப் பற்றிப் பரிசீலிக்கலாமே தவிர, பாதாளச் சாக்கடைத் திட்டத்தை மனதில் வைத்துக்கொண்டு பரிசீலிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 667, திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**667--**

### கடல் அரிப்பைத் தடுத்தல்

*618--**திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார், தரங்கம்பாடியைச் சுற்றியுள்ள கடற்கரை ஓரப்பகுதிகள் கடல் அரிப்பால் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருத்திய விடையினைப் படிக்க தாங்கள் அனுமதிக்க வேண்டுகிறேன்.

(அ) ஆம்.

(ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடியில் கற்குவியல் கடற்சுவர் கட்டும் பணிக்கு ரூ. 56.06 இலட்சத்திற்கு அரசு 5-5-1997-ல் ஒப்புதல் வழங்கியுள்ளது. இப்பணி இவ்வாண்டு மார்ச் மாதம் முதல் நடைபெற்று வருகிறது. நாகப்பட்டினம் மாவட்டம் பூம்புகாரில் கற்குவியல் கடற்சுவர் கட்டும் பணிக்கு ரூ. 86.54 இலட்சத்திற்கு அரசால் 24-9-1997-ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இவ்வேலைக்காக முதல் ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பந்தக்காரர்கள் எவரும் முன்வராததால், இரண்டாவது ஒப்பந்தப்புள்ளி இவ்வாண்டு மார்ச் திங்களில் கோரப்பட்டு, அதற்கான ஒப்பந்தங்கள் பரிசீலனையில் உள்ளன. விரைவில் அரசின் ஒப்புதல் அளிக்கப்படும்.



1998 மே 29]

**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிக்கு நன்றி. பூம்புகார், தரங்கம்பாடி போன்ற பகுதிகளில் மிக நீண்ட தூரம் கடல் அரிப்பு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, மாஸ்டர் பிளான்-ஆக, அதிக நிதியை மத்திய அரசிடமிருந்தோ அல்லது உலக வங்கி மூலமாகவோ பெற்று, அங்கு ஏற்பட்டுள்ள கடல் அரிப்பைத் தடுப்பதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலேயிருந்து எண்ணூர் வரையிலே நிறைய இடங்களில் இந்தக் கடல் அரிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் கடலோரப் பகுதிகளிலே இத்தகைய கடல் அரிப்பு ஏற்படுகிறது. அதையெல்லாம் தொகுத்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல, ஒட்டுமொத்தமாக அவைகளைச் சீர் செய்வதற்காக அரசு ஒரு திட்டத்தை வகுத்துக் கொண்டிருக்கிறது. இதிலே இருக்கிற பிரச்சினை என்னவென்றால், ஓர் இடத்திலே நாம் கடற்சுவரைக் கட்டி அந்த அரிப்பைத் தடுத்தால், அலை வேறு இடத்திலே மோதி, அரிப்பை ஏற்படுத்துகிறது. ஆகவே, கடல் அரிப்பு என்பது ஒரு தொடர் கதையாக Chronic-ஆன ஒன்றாக மாறிவிட்ட நிலையில் இருக்கிறது. இருந்தாலும், அரசு கடல் அரிப்பை நிரந்தரமாகத் தடுத்து நிறுத்துவதற்கு வழிவகை காணும்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மா. இராமச்சந்திரன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டிருந்த பூம்புகார் அறவே அழிந்துவிட்டது. கழகத் தலைவர் கலைஞர் அவர்கள்தான் என்னுடைய தொகுதியிலே பூம்புகாரை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். நாகப்பட்டினம் மாவட்டத்தில் இருக்கிற பூம்புகார் பகுதியில் கடல் அரிப்பு அதிகம் என்பதற்குச் சரித்திரச் சான்றுகள் உள்ளன. ஆகவே, அந்தப் பகுதியில் கடல் அரிப்பைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க முன்னுரிமை அளிக்க வேண்டியது ஒன்று. வீராணம் திட்டத்திற்காக வாங்கப்பட்ட குழாய்கள் எல்லாம் பயன்படுத்தப்படாது பாழ்பட்டுக் கொண்டிருக்கின்றன என்றும், அவற்றை கடற்கரை ஓரத்திலே எடுத்துவந்து போட்டால்

[1998 மே 29

அலைகளினுடைய வேகத்தைத் தடுத்து, கடல் அரிப்பைத் தடுக்க முடியும் என்றும் ஒரு யோசனையைக்கூடச் சொன்னார்கள். அதைக் குறித்து அரசு ஆராய்ந்து ஆவன செய்யுமா? பூம்புகார் பகுதி என்பது நமது முதல்வரால் உருவாக்கப்பட்டது. எனவே, அந்தப் பகுதியைப் பாதுகாத்து, கவனிக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல கடல் கொள்ளப்பட்ட ஊர் பூம்புகார் என்கின்ற காவிரிப்பூம்பட்டினம். அங்கு மீண்டும் ஒரு பூம்புகாரை உருவாக்கியவர் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள். ஆனால் இடையிலே ஆட்சியிலே இருந்தவர்கள் அங்குள்ள கலைச் சிற்பங்கள், கவின்மிகுக் காட்சிகள் எல்லாவற்றையும் கவனிக்காது, கடல் கொண்டால்கூட பரவாயில்லை என்று விட்டுவிட்டார்கள். மீண்டும் இந்த ஆட்சி வந்த பிறகுதான் அங்கு கடல் அரிப்பைத் தடுக்க 86 இலட்சம் ரூபாய் பணத்தை கலைஞர் அவர்கள் ஒதுக்கி, அங்கே தடுப்புச் சுவர் கட்ட வைத்திருக்கிறார்கள். நானும் சென்று பார்த்தேன். பூம்புகார் கலைஞர் கட்டிய காலத்தில் கடல் வெகுதூரத்தில் இருந்தது. இப்போது நெடுங்கல் மன்றம் வரையில்கூட வருகிற அளவுக்குக் கடல் நெருங்கி வந்துவிட்டது. கலைச் செல்வங்கள் என்பது ஓர் ஆட்சிக்குச் சொந்தமானது அல்ல. வள்ளுவர் கோட்டம், பூம்புகார், கட்டபொம்மன் கோட்டை என்று இப்படியெல்லாம் கட்டியிருப்பது வரலாற்றுச் சின்னங்களைத்தான். அந்த வரலாற்றுச் சின்னங்களை, கட்சி மனமாச்சரியங்களை மனதில் வைத்துக்கொண்டு, இவை கலைஞர் காலத்தில் கட்டப்பட்டவை என்பதற்காக, காலத்தால் அழிந்துபோகட்டும் என்று விட்டுவிட்டார்கள். ஆனால் ஒன்று, கலை என்றைக்கும் அழியாது; கலைஞருடைய உள்ளமும் என்றைக்கும் அழியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கடல் அரிப்பினால் கோவளத்திலே 5 நாட்களுக்கு முன்னால் கொஞ்சம் வீடுகள் அழிந்துபோயின. வருடா வருடம் பெரிய அலைகளால் ஏற்படுகிற பாதிப்பைத் தடுக்க 2 அடி அல்லது 3 அடிக்குக் கற்கள் போடப்படுகின்றன. அதற்குமேல்



1998 மே 29]

உயரமாகக் கற்களைப் போடுவது கிடையாது. கையால் தூக்கித்தான் கற்களைப் போடுகிறார்கள். அது 2 வருடம் கூட நிற்காது. அமுங்கிப்போய் விடுகிறது. 8 அடி அல்லது 10 அடிப் பாறைகளைக் கூரைகளில் போட்டால் கடல் அரிப்பைக் கட்டுப்படுத்த முடியும். அப்படிச் செய்தால் கடல் அலையைத் தடுத்து, அரிப்பினுடைய வேகத்தை நிறுத்த முடியும். அதோடு தடுப்புச் சுவரைக் கட்டினால் அலையினுடைய வேகத்தைக் கட்டுப்படுத்தி அரிப்பை தடுக்க முடியும். ஏற்கெனவே கேரள மாநிலத்திலே கொல்லத்திற்குப் பக்கத்திலே நீண்ட கரைப் பகுதியில் தடுப்புச் சுவரைக் கட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடல் அலையைத் தடுப்பது, கடல் அரிப்பைத் தடுப்பது என்பதிலே ஒன்றைக் கவனிக்க வேண்டும். எல்லா இடங்களிலும் கடல் அரிப்பு என்பது ஒரே மாதிரியாக இருப்பதில்லை. தடுப்புச் சுவரைக் கட்டினால் கடல் அலை தணிந்து போகிறது. அங்கு மீண்டும் கடல் அரிப்பு ஏற்படுவது இல்லை. சில இடங்களில் மேலும் சீற்றம் கொண்டு பக்கத்தில் இருக்கிற பகுதிகளில் கடல் அரிப்பை ஏற்படுத்திவிடுகிறது. கூடுமானவரையில் இந்தப் பணிகளைச் செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் 1997-98ஆம் ஆண்டு ரூபாய் 1 கோடியே 18 இலட்சம் நிதியை ஒதுக்கி இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே 2 கோடியே 50 இலட்ச ரூபாய் என திருத்திய மதிப்பீட்டில் நிதியை அதிகரித்துத் தந்திருக்கிறார்கள். பூண்டியிலே இருக்கிற நீர் ஆராய்ச்சி நிறுவனம், இந்தக் கடல் அரிப்பை எப்படி நிரந்தரமாகத் தடுக்க முடியும் என்பதைப் பற்றிய ஆய்வை நடத்தி வருகிறது. பூனாவிலே ஓர் ஆராய்ச்சி நிறுவனம் உள்ளது. அவர்களையும் இந்தப் பகுதிகளுக்கு அழைத்து வந்து காட்டி, ஆலோசனைக் கட்டணத்தைக் கொடுத்து அறிக்கையைக் கேட்டிருக்கிறோம். இதற்கிடையில் நெதர்லாந்து நாட்டு நிபுணர்கள் சென்ற மாதம் இங்கு வந்து நம்முடைய பொதுப்பணித் துறை அதிகாரிகளோடு உட்கார்ந்து பேசி ஒரு முடிவு எடுத்திருக்கிறார்கள். இப்படி ஒரு தடுப்புச் சுவர் கட்டுவதைவிட 'கிரேயர்ஸ்' என்று சொல்கிற சுவர்களைக் கடலில் நேருக்கு நேராக கட்டினால் கடல் அரிப்பைத் தடுக்க முடியும் என்று அவர்கள் சொல்கிறார்கள். எனவே, அதுகுறித்து ஆராய

[1998 மே 29

பூண்டியில் உள்ள நீர் ஆராய்ச்சி நிறுவனத்தினர், நெதர்லாந்திலிருந்து வந்துள்ள நிபுணர்கள், ஐ.ஐ.டி.-யைச் சேர்ந்த நிபுணர்கள், பூனாவில் இருக்கிற நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு, அவர்களுடைய அறிக்கையை அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தரங்கம்பாடியில் தொல்பொருள் துறையின் சார்பில் ஒரு காட்சியகம் உள்ளது. சீகன்பாபு போன்றவர்களுடைய வரலாற்றுக் குறிப்புகளெல்லாம் அங்கே இருக்கின்றன. அவை முழுமையாகப் பராமரிக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா? அதன் பராமரிப்பைச் செம்மைப்படுத்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது என் துறையின்பாற்பட்டதில்லை என்றாலும், ஆர்வத்தின் காரணமாக நான் தரங்கம்பாடிக்குச் சென்றிருந்தபோது, சீகன்பாபுவினுடைய கல்லறையைப் போய்ப் பார்த்தேன். சீகன்பாபு என்பவர் ஜெர்மன் நாட்டு அறிஞர். அவர் தமிழ்நாட்டிற்கு வந்து, தமிழைக் கற்று, தமிழிலே முதன்முதலாக ஒரு டிக்ஷனரியை உருவாக்கியவர். முதன்முதலாகத் தமிழிலே அச்சுக் கலையைக் கொண்டு வந்தவர். இங்கு இருக்கிற திருக்குறளை ஜெர்மன் நாட்டிக்குக் கொண்டு போய், அங்கிருந்து அச்சடித்துக் கொண்டு வந்தவர். முதன் முதலாகத் தமிழ் எழுத்துக்கள் அச்சேற்றப்பட்டதற்கு உரியவர் சீகன்பாபு அவர்கள்தான். ஆனாலும், அவருடைய புகழ், அவருடைய பெருமை, வழக்கமாகத் தமிழ்நாட்டினுடைய சாபக்கேடு காரணமாக அவற்றை அறிய முடியாத காரணத்தால், அவருடைய கல்லறைகூட பாழடைந்த நிலையிலே இருந்தது. இது என்னுடைய துறை சார்ந்ததாக இல்லாவிட்டாலும், நம்முடைய சர்க்காருடைய துறை என்ற காரணத்தால், பொதுப்பணித் துறை அதிகாரிகளைக் கொண்டு அந்த இடத்தைச் சுத்தம் செய்து, ஓர் அழகான அறிவிப்புப் பலகையும் வைக்க வேண்டுமென்று நான் உத்தரவிட்டு



1998 மே 29]

வந்திருக்கிறேன். அதனைச் செய்திருக்கிறார்களா என்று என்னைப் போன்ற ஆர்வமுள்ள திரு. கல்யாணம், பார்த்துத் தெரிவிக்கலாம். இல்லாவிட்டாலும், நாளை மறுதினம் நான் அந்தப் பகுதிக்குப் போவேன். அப்பொழுது நான் பார்த்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 668, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**668--**

## பேருந்துகளை மீண்டும் இயக்குதல்

*6228--**திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை, அரசு விரைவுப் பேருந்து போக்குவரத்துக் கழகப் பணிமனையிலிருந்து பாண்டிச்சேரி, தஞ்சாவூர், நாகப்பட்டினம் ஆகிய நகரங்களுக்கு இயக்கப்பட்டு, கடந்த ஆட்சியின்போது நிறுத்தப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், சென்னை (கோட்டம்-2), செங்கோட்டைப் பணிமனையிலிருந்து பாண்டிச்சேரி, தஞ்சாவூர், நாகப்பட்டினம் ஆகிய நகரங்களுக்குப் பேருந்துகளை மீண்டும் இயக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செங்கோட்டைக்கு அருகில் குற்றாலம், தென்காசி போன்ற சுற்றுலாத் தலங்கள் இருக்கின்றன. இந்தச் சுற்றுலாத் தலங்களுக்கு, தஞ்சாவூர், பாண்டிச்சேரி, நாகப்பட்டினம் போன்ற இடங்களிலிருந்து பொதுமக்கள் வருவதற்கு ஏதுவாக நேரடியான போக்குவரத்து வசதி ஏதுமில்லை. எனவே, கடந்தகால ஆட்சியில் நிறுத்தப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

[1998 மே 29

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் இயங்கிக் கொண்டிருந்த பேருந்துகளில், 68 விழுக்காட்டிற்குக் குறைவாகப் பயணிகள் பயணம் செய்த பேருந்துகள் 31-10-1995-லிருந்து நிறுத்தப்பட்டன. செங்கோட்டையிலிருந்து தஞ்சாவூருக்குச் சென்றுகொண்டிருந்த வழித்தடம் எண் 522, 30-3-1994 முதல் நிறுத்தப்பட்டது. பயணிகள் அதிகம் இல்லை என்ற காரணத்தினால்தான் அந்த வண்டியை நிறுத்தியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல பயணிகள் அதிகம் இருக்கின்ற சூழ்நிலை இருக்குமானால், மீண்டும் அதைப் பரிசீலிக்க அரசு தயாராக இருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோ. நயினா முகமது.

**திரு. கோ. நயினா முகமது:** மாண்புமிகு பேர்வைத் துணைத் தலைவர் அவர்களே, செங்கோட்டையிலிருந்து சென்னைக்கு, பி.பி. விரைவுப் பேருந்து தினசரி இயக்கப்படுகிறது. அப்படி இயக்கப்படுகின்ற பேருந்துக்ள் பழுதடைந்த, பழையப் பேருந்துகளாக இருக்கின்றன. இதனால், அடிக்கடி 'ப்ரேக் டவுன்' ஆகின்ற சூழ்நிலை ஏற்படுகின்றது. அந்த வழித்தடத்தில் சென்று கொண்டிருந்த புகைவண்டிகள் தற்போது இரத்து செய்யப்பட்டுள்ளதால், அதிகமான பயணிகள் தற்போது பேருந்துகளில் பயணம் செய்வதால், பயணம் தடையில்லாமல் இருக்க, உடனடியாக பழைய பேருந்துகளை மாற்றி, புதிய பேருந்துகளை விடுவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புகைவண்டிகள் நிறுத்தப்பட்டவுடன் ஏறத்தாழ 50-க்கும் மேற்பட்ட புதிய பேருந்துகள் அந்த வழித்தடங்களிலே விடப்பட்டன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, உடனடியாகப் புதிய பேருந்துகளாக மாற்றுவதற்கு இயலாது. படிப்படியாக இந்த அரசு மாற்றிக் கொண்டிருக்கிறது. சென்ற ஆண்டு 3,600 பேருந்துகள் மாற்றப்பட்டன. இந்த ஆண்டும் 3,600 பேருந்துகளை மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. படிப்படியாக அனைத்துப் பேருந்துகளுக்கும் புதிய பேருந்துகள் மாற்றித் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.



1998 மே 29]

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெல்லை, தூத்துக்குடி ஆகிய இரண்டு பகுதிகளிலேயிருந்தும், சென்னைக்கு வந்துகொண்டிருந்த புகை வண்டிகள் நிறுத்தப்பட்டதாலும், தற்போது மே மாதம் விடுமுறைக் காலமாக இருப்பதாலும், கடுமையான கூட்டம் இருக்கின்றது. நெல்லை, நாகர்கோவில், தூத்துக்குடி, தென்காசி, கோவில்பட்டி போன்ற பகுதிகளிலிருந்து கடுமையான கூட்டம் வருகிறது. கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னால்கூட நான் சென்னைக்கு வரும்போது, நெல்லையிலிருந்து 7-00 மணிக்குப் புறப்பட்ட 'பை-பாஸ் ரைடர்' பஸ்ஸிலே 15 பேர் இரண்டு சீட்டுகளுக்கும் இடையிலே நின்று கொண்டும், உட்கார்ந்து கொண்டும் வருகின்ற அவல நிலை இருந்தது. எனவே, இந்தத் தென் மாவட்டங்களிலுள்ள பயணிகளின் நலனைக் கருத்தில்கொண்டு, நெல்லை, குமரி, தூத்துக்குடி, நாகர்கோயில், தென்காசி, கோவில்பட்டி ஆகிய பகுதிகளிலிருந்து சென்னைக்கு அதிகமான பேருந்துகளை, மாலை நேரங்களில் இயக்குவதற்கு ஏற்பாடுகள் செய்வீர்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புகைவண்டிகள் நிறுத்தப்பட்டவுடன் முன்னெச்சரிக்கையாக, ஐம்பதுக்கும் மேற்பட்ட பேருந்துகள் விடப்பட்டன. ஆனால், அவற்றில் பயணம் செய்யும் பயணிகளின் எண்ணிக்கையைப் பார்க்கிறபோது குறைவாக இருக்கிறது. புகை வண்டிகளில் பயணம் செய்பவர்களுடைய எண்ணிக்கையை எதிர்பார்த்துதான் அந்த அளவுக்குப் பேருந்துகளின் எண்ணிக்கையே அதிகமாக்கப்பட்டது. ஆனால், பயணிகளின் எண்ணிக்கைக் குறைவின் காரணமாக, வருமானமும் குறைவாகவே வந்து கொண்டிருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைக் கருத்திலே கொண்டு இன்றையதினமேகூட மீண்டும் அவர்களை அழைத்துப் பேசி, அதுபோன்ற நிலை இருக்குமானால், உடனடியாகப் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 669, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் மற்றும் திரு. ச. அழகிரி, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

[1998 மே 29

**669--**

### தமிழை ஆட்சிமொழியாகவும், அலுவலக மொழியாகவும் நடைமுறைப்படுத்துதல்

*7543--**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**
**திரு. ச. அழகிரி:**

*மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*தமிழை ஆட்சிமொழியாகவும், அலுவலக மொழியாகவும் நடைமுறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் ஆட்சிமொழிச் சட்டம், 1956-லே கொண்டு வரப்பட்டது. இன்றைக்கு, ஆட்சிமொழி, அலுவல் மொழி இரண்டிலுமே, தமிழை அமல்படுத்துவதில் ஏராளமான இடர்பாடுகள் இருப்பதாக, மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அவர்களே ஒருமுறை அறிவித்திருக்கிறார்கள். தமிழிலேயிருந்து தோன்றியதாகச் சொல்லப்படுகின்ற, தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளைப் பேசுகின்ற மாநிலங்களிலேகூட, தங்களுடைய மொழியை, அலுவலக மொழியாக, ஆட்சி மொழியாக ஆக்குவதிலே அவர்கள் தீவிரம் காட்டுகிறார்கள்; அக்கறை காட்டுகிறார்கள். ஆனால், நம்முடைய அமைச்சர் அவர்கள் பேசியதுகூட ஒருமுறை பத்திரிகையிலே வெளிவந்தது. நேரடியாக, கேள்வி-பதிலிலேயே சொல்லியிருக்கிறார்கள். தமிழ் தொடர்பான ஓர் அலுவலகத்திலே, கையொப்பம்கூட, 90 சதவிகிதம் பேர் ஆங்கிலத்திலேயே போட்டதாகக்கூட சொல்லி வருத்தப்பட்டார்கள். ஆகவே, தமிழக அரசையும், மாண்புமிகு அமைச்சர் பெருமகனாரையும் நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வது என்னவென்று சொன்னால், இதில் ஒரு கட்டாயத்தை, ஒரு



1998 மே 29]

கெடுபிடியை நாம் செய்தால்கூடத் தவறில்லை. தமிழை அலுவல் மொழியாகவோ, ஆட்சி மொழியாகவோ ஏற்க மறுக்கிற அதிகாரிகள், கீழ்மட்டத்திலேயிருந்து மேல்மட்டம் வரையிலும் யாராக இருந்தாலும், தயவுதாட்சண்யம் இல்லாமல் அவர்கள்மீது நடவடிக்கை எடுத்து, தமிழை ஆட்சிமொழியாக்க அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினாவிற்கு, விரிவாகவும் விடை சொல்லலாம்; நிறையப் பேருக்கும் விடை சொல்லலாம். குறிப்பாக, 1956ஆம் ஆண்டில் ஆட்சி மொழிச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. 27-1-1957 முதல், அதற்கு அரசாணை பிறப்பிக்கப்பட்டு நடைமுறைக்கு வந்தது. ஆனால், இந்த 40 ஆண்டுகாலமாக, அதிலே பெரிய அளவிலே முன்னேற்றம் இல்லை என்பதனால்தான், தமிழ் ஆட்சிமொழித் துறையைத் தனியாகப் பிரித்து, அதற்கு தனிக் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்--இந்த அறிவிப்பை--ஏற்பாட்டைச் செய்தார்கள். ஆனாலும்கூட, பல நிலைகளில், இவற்றிற்காகப் பிறப்பிக்கப்பட்டிருக்கிற அரசு ஆணைகளைப் பொதுமக்கள் கடைப்பிடிக்கிறார்கள்; ஆனால், அரசு அலுவலர்களும், பெரிய அளவிலே ஊதியம் வாங்குகிற பெருமக்களும் கடைபிடிப்பதில்லை என்பதுதான் உண்மை. ஒரு பல்கலைக் கழகத்தினுடைய தமிழ்த் துறையில், சம்பளம் வாங்குகிற அந்தப் பட்டியலிலேகூட, 14 பேராசிரியர்களிலே, தமிழ்ப் பேராசிரியர்களிலே; மறந்துவிடக் கூடாது--14 பேராசிரியர்களிலே 12 பேர்கள் ஆங்கிலத்திலேதான் கையொப்பமிட்டிருக்கிறார்கள். ஆனால், அரசாணை 1978லேயே, அரசு ஊழியர்கள் அனைவரும் தமிழிலேதான் கையொப்பமிட வேண்டும்; தமிழில் மட்டுமே கையொப்பமிட வேண்டும்; They should sign in Tamil only என்ற அளவிற்கு அந்த அரசாணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால், பலபேர் அதைக் கடைப்பிடிக்கவில்லை. இரண்டாவது, அரசு அலுவலர்கள் பலர் பல மாற்றங்களைச் செய்துகொள்ள வேண்டியிருக்கிறது. குறிப்பாகத் தலைமைச் செயலகத்தில், இந்த ஆட்சி இப்போது பொறுப்பேற்றுக் கொண்ட இந்த இரண்டாண்டுகளுக்கு முன்னால் இருந்த நிலைமை 25 விழுக்காடுதான் தமிழ் ஆட்சிமொழி, நடைமுறையில் இருந்தது. ஆனால், சட்டப்படி 65 விழுக்காடு இருக்க வேண்டும். அதற்காக,

அவர்கள் சொன்ன காரணம், தட்டச்சுப் பொறிகள் தமிழில் இல்லை; அதனால் நாங்கள் ஆங்கிலத்திலே அனுப்ப வேண்டியிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். உடனே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அதற்கென ரூபாய் 40 இலட்சத்தை ஒதுக்கி, 500 தமிழ் தட்டச்சுப் பொறிகளை வாங்கி தலைமைச் செயலக துறைகளுக்குக் கொடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு அனைத்துப் பிரிவுகளுக்கும், 65 விழுக்காடு என்ற அடிப்படையிலே, தமிழ்த் தட்டச்சுப் பொறிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கட்டாயப்படுத்த முடியுமா என்றும் கேட்டார்கள். அரசாணை என்பதே, கட்டாயப்படுத்துவதுதான். அரசாணை என்றாலே, அதைக் கட்டாயப்படுத்துவதுதான். அரசாணையை மீறுவது குற்றம் என்பதுதான் நடைமுறை உண்மை. எனவே, இதைக் கையாளுகிற இன்னும் சொல்லப்போனால், யார் அரசாணையைப் பிறப்பிக்கிறார்களோ, அவர்களே சிலநேரம் அதைக் கடைப்பிடிப்பது இல்லை. இன்னும் சொல்லப்போனால், ஆங்கிலத்திலே, 3 அல்லது 4 வரைமுறைகளைத் தவிர, வேறு எதிலும் ஆங்கிலத்திலே கையாளக்கூடாது என்பதுதான் ஆட்சி மொழிச் சட்டம். ஆனாலும், பெரும்பாலும் ஆங்கிலத்தைக் கையாளுகின்ற மனப்பாங்கு இருக்கிறது. இந்த மனப்பாங்கை மாற்றினாலே, அரசாணை முழுவதுமாகச் செயல்படும் என்று நான் கருதுகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1956ஆம் வருடம் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தமிழை ஆட்சி மொழியாகவும், நிர்வாக மொழியாகவும் கொண்டு வந்தார்கள். ஆனால் அதன்பிறகு இந்த 40 ஆண்டு காலத்தில் அதிலே ஏற்பட்டிருக்கின்ற முன்னேற்றங்கள் மிகவும் குறைவாக இருக்கின்றன என்பதனை நாங்கள் சொல்வதைவிட சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு அமைச்சருக்கு வருகின்ற கோப்புகள் எல்லாம் முழுமையாக ஆங்கிலத்திலே இருக்கின்றன. கையெழுத்திடுகிற 'நோட்'-ஐ மட்டும் தமிழிலே தட்டச்சு செய்து அமைச்சரிடம் கையெழுத்து வாங்குகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு





வழங்கப்படும் தணிக்கை அறிக்கைகள் அவ்வளவும் ஆங்கிலத்திலேதான் இருக்கின்றன. அவைகள் தமிழிலே வருவதில்லை. மாண்புமிகு உறுப்பினர் தீரன் அவர்கள் அவைகளை நடைமுறைப்படுத்தாத அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்டார்கள். எனக்கு ஒரு சந்தேகம். நடைமுறைப்படுத்தாதது அதிகாரிகளா அல்லது ஆட்சியாளர்களா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும். தமிழினைச் சொல்லி ஆட்சிக்கு வந்த ஓர் அரசாங்கம் தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டு வர........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதை நடைமுறைப்படுத்த என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதுதான் கேள்வி. அமைச்சர் விளக்கங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறாரே ஒழிய நடைமுறைப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி என்ன என்று சொல்லவில்லை. உங்களால் நடைமுறைப்படுத்த முடியுமா, முடியாதா? முடியும் என்றால், எவ்வளவு காலத்தில் நடைமுறைப்படுத்துவீர்கள் என்பதனை அமைச்சர் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் ஒரு நீண்ட உரையாற்ற விரும்பி கேள்வியாக முடித்திருக்கிறார். அதே கதைதான் தமிழ் ஆட்சிமொழிக் கதையும். ஏற்கெனவே எந்தக் கோப்பாக இருந்தாலும், 20 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த ஆணை, 10 ஆண்டுகளுக்கு முன்னால் தெரிவிக்கப்பட்ட ஆணை, இன்னும் சொல்லப் போனால் எழுதி வைக்கப்பட்ட குறிப்பு அவ்வளவும் சேர்ந்து இப்போது திரும்பவும் அந்தக் கோப்பு வருகின்றது. எனவே கடைசி கட்டத்தில் தமிழில் சில குறிப்புகளை எழுதுகிறார்கள். ஏற்கெனவே நீதிமன்றத் தீர்ப்பு கிடைத்திருக்குமானால் அந்தத் தீர்ப்பின் அடிப்படையிலே தெரிவிக்கின்ற கருத்தை ஆங்கிலத்திலே எழுதுகிறார்கள். இன்னும் transformation stage-ல்தான் இருக்கிறது. ஏற்கெனவே உள்ள எந்தக் கோப்பை எடுத்துக் கொண்டாலும் 100-க்கு 95 பக்கம் ஏற்கெனவே எழுதப்பட்ட பழைய தாளாகிவிட்ட கோப்புக் கருத்துகள்தான்.

[*1998 மே 29*

இன்னும் சொல்லப்போனால் வேலையில் சேர்ந்ததில் இருந்து உள்ள கோப்புகள்-- ஒருவரை வேலையிலிருந்து நீக்கி 1991-வது ஆண்டு ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டால், அவருடைய அப்பீல் எல்லாம் சேர்ந்து திரும்ப இப்போது வருகின்றபோது இடையிலே டிரிஃபியூனல் கருத்து எல்லாம் சேர்ந்து வருகிறபோது ஆங்கிலத்திலே இருக்கிறது. எங்களுடைய வேண்டுகோளுக்காக செயலாளர்கள், துணைச் செயலாளர்கள் கடைசி இரண்டு பக்கங்களைத் தமிழிலே எழுதி எங்களுக்கு அனுப்புகிறார்கள். இது வளர வேண்டிய ஒன்று. அதே நேரத்தில் ஆங்கிலத்தில் reference இல்லாமல் தமிழில் எழுதக்கூடிய நிலை இன்றைக்கும் இல்லை. எனவே, நானே ஒரு குறிப்பு எழுதுகிறபோதுகூட ஆங்கிலத்தில் இரண்டு வார்த்தைகளை இடையிலே சேர்த்து எழுதி, அந்த அடிப்படையிலே இதைச் செய்யலாம் என்று சொல்ல வேண்டிய நிலை இன்னும் இருக்கிறது. வளர்ச்சிக் கட்டத்தில் நாம் இருக்கிறோம். இன்னும் ஒரு 10 ஆண்டுகாலம் இதைச் செம்மைப்படுத்துவதற்கு அக்கறையோடு நாம் பணியாற்றினால் நிறைவேற்ற முடியும் என்று நான் நம்பிக்கை தெரிவிக்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 670, திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்,

**670--**

### நில உடைமையாளர்களுக்கு உதவி

*2164-**திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திண்டுக்கல் தொகுதியில் தோல் தொழிற்சாலைக் கழிவுநீரால் பாதிக்கப்பட்ட நில உடைமையாளர்களுக்கு உதவிடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திண்டுக்கல் தொகுதியில் தோல் தொழிற்சாலைக் கழிவுநீரால் பாதிக்கப்பட்ட நில



*1998 மே 29*]

உடைமையாளர்களுக்கு உதவிடும் திட்டம் அரசின் பரிசீலனையில் எதுவுமில்லை.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுகளுக்கு முன்பாக பட்டை, கடுக்காய் போன்ற இயற்கைப் பொருட்களை வைத்துத்தான் அங்கே தோல் பதனிடும் தொழிற்சாலை நடைபெற்று வந்தது. ஆனால் 20 ஆண்டுகளாக இரசாயனப் பொருட்களை உபயோகப்படுத்தி தோல் தொழில் நடைபெறுவதன் காரணமாக திண்டுக்கல் தொகுதியிலுள்ள பள்ளப்பட்டி, குரும்பப்பட்டி, அடியூத்து போன்ற ஊராட்சிப் பகுதிகளில் உள்ள விளை நிலங்கள் எல்லாம் பாதிக்கப்பட்டு, அங்குள்ள ஏழை விவசாய மக்கள் விவசாயத் தொழிலையே செய்ய முடியாத நிலையில் இருக்கின்றார்கள். உதாரணமாக, கடந்த காலங்களில் நெல், மலர், காய்கறிகள் போன்ற பயிர்களை விவசாயம் செய்து வந்த மக்கள் இப்போது அந்த வேலைகளை எல்லாம் விட்டுவிட்டு நகர்ப்புறங்களுக்குக் கூலி ஆட்களாக வேலைக்குப் போகக்கூடிய அவல நிலை இருக்கிறது. எனவே, இந்த அரசாங்கம் கருணையோடு பரிசீலித்து, அவர்களுக்கு ஏதாவது ஒருவகையில் உதவி செய்வதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் இல்லை என்று சொன்னது, அரசின் சார்பிலே கொடுக்கக்கூடிய நஷ்டஈடு பற்றியதாகும். ஆனால், உச்ச நீதிமன்றம் 31-10-1996-ல் ஒரு தெளிவான தீர்ப்பை, தமிழகத்தில் இருக்கின்ற அனைத்துந் தோல் பதனிடும் ஆலைகளுக்கும் வழங்கியுள்ளது. அதன்படி ஒவ்வோர் ஆலையும் ரூ.10 ஆயிரத்தை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் செலுத்திவிட வேண்டும். அது சுற்றுப்புறச் சூழல் நிதி என்று பெயரிடப்பட்டு, நிலத்திற்கு பங்கம் ஏற்பட்டிருந்தால், அதற்கு வேண்டுகின்ற, தேவையான நிதியை அதிலிருந்து பெறுவதற்கு, சம்பந்தப்பட்டவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தொடர்புகொண்டு தங்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற நஷ்டத்தைத் தெளிவாக எடுத்துத் தெரிவித்தால், அதற்குத் தக்கபடி அந்த நிதியிலிருந்து வழங்குவதற்கு உச்ச நீதிமன்றத்தின் உத்தரவு இருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[1998 மே 29

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 671, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**671--**

**சுற்றுச்சூழல் ஆய்வகம் அமைத்தல்**

*6802--**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஈரோடு மாவட்டம், ஈரோட்டிலுள்ள சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் பொருட்டு சுற்றுச்சூழல் ஆய்வகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஈரோடு மாவட்டம், ஈரோட்டில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் சுற்றுச் சூழல் ஆய்வகம் அமைக்கும் திட்டம் தற்சமயம் அரசிடம் எதுவுமில்லை.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஈரோடு, ஈரோட்டைச் சுற்றியுள்ள பவானி, குமாரபாளையம், பள்ளிபாளையம் போன்ற பகுதிகளிலும் மற்றும் ஈரோடு மாவட்டத்தில் உள்ள பல்வேறு பகுதிகளிலும் உள்ள குடிநீர் மற்றும் நிலங்களில் தொழிற்சாலைகள் மூலமாக மாசு ஏற்படக்கூடிய சூழ்நிலையில், அவற்றைப் பரிசோதனை செய்வதற்காக சேலத்தில் உள்ள ஆய்வகத்திற்கும், கோவையில் உள்ள ஆய்வகத்திற்கும் செல்லக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதை மாற்றுகின்ற வகையில்--மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஈரோடு சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில்--ஈரோட்டில் தயவுசெய்து ஒரு சுற்றுச்சூழல் ஆய்வகம் அமைக்க வேண்டும். அவ்வாறு அமைத்துக் கொடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



1998 மே 29]

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, தமிழகத்திலே இருக்கின்ற 12 ஆய்வகங்களில் சேலத்திலே ஒரு பெரிய ஆய்வகம் இருக்கிறது. அது சாதாரண செலவில் அமைக்கப்பட்ட ஆய்வகம் அல்ல. பெரிய அளவில் அமைக்கப்பட்டு 24 மணி நேரமும் அது செயல்படுகிறது. அந்த ஆய்வகம் பயனுடன் நல்லமுறையில் செயல்பட்டால்தான் அதிலிருந்து நல்ல பலன்களைப் பெற முடியும். சேலத்தில் இருக்கின்ற ஆய்வகத்திலேயே வேண்டிய அளவுக்கு ஆய்வுகள் செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. எதிர்காலத்தில் மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், தொடர்ந்து தன்னுடைய பிராந்திய அலுவலகங்களை விஸ்தரிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால், ஈரோட்டிலும் ஓர் ஆய்வகம் அமைக்க தக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலமாக நடமாடும் ஆய்வகங்கள் தமிழகத்தில் உள்ளனவா? எத்தனை உள்ளன? அவை எங்கெங்கு அமைந்துள்ளன என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 3 நடமாடும் ஆய்வக ஊர்திகள் இருக்கின்றன. மணலியில் ஒன்றும், திண்டுக்கல்லில் ஒன்றும், ஓசூரில் ஒன்றுமாக 3 நடமாடும் ஆய்வகங்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 672, திரு. செங்கை சிவம், திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத் மற்றும் திரு. ஐ. கணேசன். மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சா.

672--

வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம்

*6812--திரு. செங்கை சிவம்:
திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:
திரு. ஐ. கணேசன்:

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வேடந்தாங்கலில் உள்ள பறவைகள் சரணாலயத்திற்கு வருகின்ற வெளிநாட்டுப் பறவைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) இந்த எண்ணிக்கையை உயர்த்த அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்திற்கு, கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் ஆண்டுதோறும் சுமார் 20,000 முதல் 30,000 வரை வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பறவைகள் வந்து செல்வதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் மொத்தம் 36,000 பறவைகள் வந்து சென்றுள்ளன. இதில் வெளிநாட்டுப் பறவைகள் எவ்வளவு வந்துள்ளன என்ற கணக்கீடு தனியாக இல்லை. எனினும் 20 வகையான வெளிநாட்டுப் பறவைகள் வந்து செல்வதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

(ஆ) பறவைக்கு பாதுகாப்பான சூழ்நிலையை ஏற்படுத்துவதுடன், மரம் நடுதல், நீர்வரத்தினை அதிகரிக்கக் கால்வாய்களைத் தூர் எடுத்தல் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சிப் பணிகள் ஆண்டுதோறும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முற்பகல் 10-20

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எங்கெங்கே இப்படிப்பட்ட பறவைகள் சரணாலயங்கள் உள்ளன? இந்தச் சரணாலயங்களுக்கு



ஆண்டுதோறும் வரும் சுற்றுலாப் பயணிகளுடைய எண்ணிக்கை எவ்வளவு? இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளில் அயல் நாட்டவர்களும் அடங்குவார்களா? மேலும் சுற்றுலாப் பயணிகளின் மூலம் ஆண்டுதோறும் அரசுக்குக் கிடைக்கும் வருமானம் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம், வேட்டக்குடி பறவைகள் சரணாலயம், சித்ரக்குடி பறவைகள் சரணாலயம், கஞ்சிரங்குளம் பறவைகள் சரணாலயம், கரிக்கிளி பறவைகள் சரணாலயம், புலிக்காட் ஏரி பறவைகள் சரணாலயம், உதயமார்த்தாண்டபுரம் பறவைகள் சரணாலயம், கூத்தங்குளம்-காடங்குளம் பறவைகள் சரணாலயம், கரைவெட்டி பறவைகள் சரணாலயம், வெள்ளோடு பறவைகள் சரணாலயம், மேலசெல்வனூர்-கீழசெல்வனூர் பறவைகள் சரணாலயம், வடுவூர் பறவைகள் சரணாலயம் என்று மொத்தம் 12 இடங்களில் பறவைகள் சரணாலயங்கள் அமைக்கப்பட்டு பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இங்கெல்லாம் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் வந்து செல்கின்றனர். ஒவ்வோர் இடங்களிலும் எவ்வளவு பேர் வந்து செல்கிறார்கள் என்ற கணக்கு இப்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அன்பில் பொய்யாமொழி.

**திரு. அன்பில் பொய்யாமொழி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்திற்கு 36000 பறவைகள் வந்தன என்று துல்லியமாகச் சொல்கின்றாரே, இது எப்படி கணக்கிடப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துல்லியம் என்று சொல்லவில்லை. சுமாராக என்று தான் சொன்னேன். இந்தப் பறவைகள் கணக்கெடுப்பு என்பது தொண்டு நிறுவனங்கள் மூலமும், பள்ளிக் குழந்தைகள் மூலமும், கூட்டமாக அவர்களை கரையோரங்களில் நிறுத்தி வைத்து ஏதாவது ஒரு நாளில் கணக்கெடுப்பு நடத்துகிறார்கள். இவையெல்லாம் சுமாரான

கணக்கெடுப்புதான். மேலும் ஓர் ஊரிலே காக்கைகள் எவ்வளவு என்று கேட்டால்கூட அதைச் சொல்ல முடியாது. சுமாராகத்தான் சொல்ல முடியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பா.மு. முபாரக்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்திற்கு 36,000 பறவைகள் இந்த ஆண்டு வந்து போனதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சுமார் 36,000 பறவைகள்.

**திரு. பா.மு. முபாரக்:** அல்ல 36,000 என்று தான் சொன்னார்கள். துணைக் கேள்விக்கு சுமார் என்று தன்னுடைய பதிலில் சொன்னார்கள். அதோடு இந்தக் கணக்கெடுப்பானது பள்ளி மாணவர்களை நிறுத்தி வைத்து அவர்கள் வாயிலாகக் கணக்கெடுப்பதாகச் சொன்னார்கள். மேலும் தன்னுடைய பதிலை நிறைவு செய்யும்போது ஓர் ஊரில் காக்கைகள் எத்தனை இருக்கின்றன என்று கேட்டால் என்று சொல்லி, தன்னுடைய பதிலை நிறைவு செய்தார்கள். ஒரு கதையே இருக்கிறது. அதன்படி எடுக்கப்பட்டதா ....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதற்கெல்லாம் நேரம் இல்லை. கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. பா.மு. முபாரக்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் ஊரில் ஒரு மாணவனிடம் ஓர் ஆசிரியர் இந்த ஊரிலே எத்தனை காக்கைகள் இருக்கின்றன என்று கேட்டதற்கு, அந்த மாணவன் 787 காக்கைகள் இருக்கின்றன என்று சொன்னான். ஆசிரியர் உடனே எப்படிச் சொல்கிறாய் என்று கேட்டார். அதற்கு அந்த மாணவன் சந்தேகம் இருந்தால் நீங்கள் போய் எண்ணிப் பார்த்துக் கொள்ளுங்கள். அதிகமாக இருந்தால் காக்கைகள் வெளி ஊரிலே இருந்து வந்திருக்கும், குறைவாக இருந்தால் வெளியூருக்குப் போயிருக்கும் என்று சொன்னான். (சிரிப்பு) அது மாதிரியான கணக்கா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொறடா அவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு)





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 673, திரு. எஸ்.வி. கிருஷ்ணன், மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**673--**

### சமூகக் காடு வளர்ப்புத் திட்டம்

*7875--**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நாங்குநேரி, பெரியகுளத்தில், சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் (வனத் துறை) வளர்க்கப்படும் கருவேல மரத்தின் விதைகள் மூலம் முட்செடிகள் பரவுவதால் பொதுமக்களும், விவசாயிகளும் பாதிக்கப்படுவது குறித்து அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், வருங்காலத்தில் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் கருவேல மரங்கள் வளர்ப்பதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) நாங்குநேரி, பெரியகுளத்தில், சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் வளர்ந்து வரும் கருவேல மரங்களின் விதைகள் மூலம் முட்செடிகள் பரவுவதால் பொதுமக்களும், விவசாயிகளும் பாதிக்கப்படுவதில்லை.

(ஆ) கருவேல மரங்கள் குளம்/ஏரிகளின் படுகைகளில் தற்போது நடப்படுவதில்லை.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி, பெரியகுளத்தில் சமூகக் காடுகள் வளர்ப்பதன் மூலம் அந்த மரத்தின் விதைகள் மூலம் தண்ணீரில் பரவி, குளங்களிலும் கரைகளிலும் பாசனக் கால்வாய்களிலும்

[1998 மே 29

முட்செடிகள் பரவி உள்ளன. அதுமட்டுமல்லாமல் நாங்குநேரியில் வானமாமலை பெருமாள் கோயில் இருக்கிறது. அங்கு வருகின்ற பக்தர்கள் அந்தக் குளத்தில் குளிக்கின்ற காலங்களில் அந்த முட்கள் தண்ணீரில் பரவியிருப்பதால் அவர்களுக்குப் பாதிப்பு ஏற்படுகிறது. குளங்களிலும் முள் பரவி இருக்கிறது. அந்தக் குளம் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமானது. எனவே, அந்தக் குளங்களிலுள்ள முட்களை அப்புறப்படுத்துவதற்கு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா? மேலும், இத்தகைய சமூக நலக் காடுகளை இனிமேல் வளர்க்காமல் இருப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான ஏரிகளில் சமுதாயக் காடுகளை ஏற்படுத்தக்கூடாது என்று அமைச்சரவையில் முடிவு எடுத்து, அரசு ஆணையும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. காரணம், ஏரியைத் தூர்வாரவும் முடிவதில்லை; அதிலிருந்து தண்ணீர் பயிருக்கும் செல்ல முடியாமல் மரங்கள் சாய்ந்து தடுத்து விடுகின்றன. எனவே, அந்த மரங்களை நடுவதன் மூலம் பொதுப் பணித் துறையின் ஏரிகள் எல்லாம் பலவீனப்பட்டு விடுகின்றன என்பதை எல்லாம் தெரிவித்த பிறகு, அமைச்சரவை அந்த முடிவை எடுத்திருக்கிறது. அரசு உத்தரவும் வெளியிடப்பட்டுள்ளது. இருக்கின்ற மரங்களை இனிமேல் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியனில் வெட்டிக்கொள்வார்கள். இனிமேல் யாரும் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான ஏரிகளில் சமூக நலக் காடுகளை அமைக்கும் விதத்தில் மரங்களை நடமாட்டார்கள். அப்படி நட்டால், பொதுப் பணித் துறை அவற்றை அகற்றிவிடும்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண். 674, திரு. ந. பாண்டுரங்கன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.



1998 மே 29]

**674--**

### பெரிய கொழப்பலூரில் சார் பதிவாளர் அலுவலகம்

*6258--**திரு. ந. பாண்டுரங்கன்:**

*மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், பெரிய கொழப்பலூரில் புதிய சார் பதிவாளர் அலுவலகம் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரிய கொழப்பலூர் கிராமத்திலே இருக்கிற மக்கள் தங்களுடைய ஆவணங்களைப் பதிவு செய்து கொள்வதற்காக 3 பேருந்துகள் மாறிச் செல்கின்றார்கள். அரசு எதிர்பார்க்கின்ற அத்தனை தகுதிகளும் அந்தக் கிராமத்திற்கு இருக்கின்றன. எனவே, அந்தப் பகுதியில் புதிய சார் பதிவாளர் அலுவலகம் தொடங்க அமைச்சர் அவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பெரிய கொழப்பலூரில் புதிதாக சார் பதிவகம் அமைக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அங்கே சார் பதிவகம் அமைக்க வேண்டுமென்றால், ஏற்கெனவே சேத்துப்பட்டில் இருக்கின்ற சார் பதிவகத்திலிருந்து 7 கிராமங்களைத்தான் பிரிக்க வேண்டியிருக்கும். மற்ற சார் பதிவகங்களில் இருந்து பிரிக்க முடியாது. சேத்துப்பட்டில் மொத்தமாக ஓர் ஆண்டிற்கு 1433 ஆவணங்கள்தான் பதிவாகின்றன.

[1998 மே 29

ஒரு புதிய சார் பதிவகம் அமைக்க வேண்டுமென்றால், குறைந்தபட்சம் 2000 ஆவணங்கள் அங்கே பதிவாக வேண்டும் என்பது அரசினுடைய கொள்கை. ஆகவே, அங்கே சார் பதிவகம் அமைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 675, டாக்டர் ஆ. ஞானசேகரன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**675--**

### சத்துணவுக் கட்டடம் கட்டுதல்

*13496--**டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மேல்மலையனூர் தொகுதி, செஞ்சி ஒன்றியம், சே.பேட்டை கிராமத்திற்கு சத்துணவுக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

செஞ்சி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சே.பேட்டை என்னும் ஊரில் செயல்படும் பள்ளி, நிதி உதவி பெறும் பள்ளியாக இருப்பதனால் சத்துணவுக் கூடம் அரசு சார்பில் கட்டித் தர இயலாது.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஆண்டில் தயவு செய்து, அந்தக் கட்டடத்தைக் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பினால், அவருடைய நிதியிலிருந்து கட்டிக் கொடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 676, திரு. வ. வேலுசாமி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.



1998 மே 29]

**676--**

### கூர்நோக்கு இல்லம்

*8228--**திரு. வ. வேலுசாமி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மதுரையிலுள்ள பாலர் உதவிச் சங்கத்தின்கீழ் இயங்கும் கூர்நோக்கு இல்லத்தினை (மைனர் ஜெயில்)--மற்ற இடங்களில் நடப்பதைப் போன்று--அரசே எடுத்து நடத்த முன்வருமா?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மதுரையில் பாலர் உதவிச் சங்கத்தின்கீழ் இயங்கும் கூர்நோக்கு இல்லத்தை ஏற்று நடத்துவது தொடர்பான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. இது இளம் குற்றவாளிகளைப் பாதுகாத்து வரக்கூடிய, அரசு மானியம் பெறும் தனியார் நடத்தும் கூர்நோக்கு இல்லம் ஆகும். இதில் பணி புரியக்கூடிய ஊழியர்களுக்கு, அரசாணை எண் 429, சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறை, நாள் 28-8-1990-ன்படி, ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி, ஊதியமும் மற்றும் இதர படிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இவர்கள், அரசு கூர்நோக்கு இல்லங்களில் பணிபுரியும் பணியாளர்களைப் போலத்தான் வேலை செய்கிறார்கள். ஆனால், இவர்களுக்கான சலுகைகளான, பணிக்கொடை, வருங்கால வைப்பு நிதி, ஓய்வூதியம், பொங்கல் கருணைத் தொகை, குடும்ப சேம நல நிதி போன்ற சலுகைகள் வழங்கப்படுவதில்லை. ஊதியமும், மாதா மாதம் வழங்காமல், மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு ஒருமுறைதான் வழங்கப்படுகின்றது. மேலும், அங்கே இருக்கக்கூடிய இளம் குற்றவாளிகளுக்கு, 12 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு ரூ. 3/-ம், 12 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு ரூ. 4.50/-ம் படி வழங்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களோடு சென்று, நேரடியாக நாங்கள்

[1998 மே 29

பார்த்திருக்கிறோம். ஆகவே, இதை, சீக்கிரமாக அரசே ஏற்று நடத்துமா? எப்போது ஏற்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரையில் இயங்குகின்ற கூர்நோக்கு இல்லத்தைப் பராமரிப்பு செய்து வருகின்ற பாலர் உதவிச் சங்கத்தினுடைய நிதி நிலைமை மிகவும் குறைவாக இருக்கிறது என்று அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது. இந்த இல்லத்தை அவர்கள் பராமரிக்க வேண்டுமென்று சொல்லி அவர்களுக்கு அனுமதி வழங்குகின்றபோது, அரசினுடைய மானியத்தை மட்டும் எதிர்பார்க்காமல், பிற இடங்களில் நன்கொடைகளைப் பெற்றும், அந்தக் குழந்தைகளைப் பராமரிக்க வேண்டுமென்று எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நானே இரண்டுமுறை சட்டமன்ற உறுப்பினர்களுடன் அங்கே சென்று பார்த்தபோது அந்த நிர்வாகம் சரியான முறையிலே குழந்தைகளைப் பராமரிக்கவில்லை என்பதைக் கண்டறிந்தோம். எனவே, அந்தக் குழந்தைகளை நல்லமுறையிலே பராமரிக்க வேண்டுமென்று, அவர்களுக்கு மீண்டும் உத்தரவு பிறப்பித்திருக்கிறோம். எனினும், இருக்கின்ற நிதிநிலைமையை வைத்து அந்தக் குழந்தைகளைத் தொடர்ந்து அவர்களால் பராமரிக்க இயலவில்லை என்பதை அறிந்தபோது, அரசே அதனை ஏற்று நடத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று குறிப்பு தரப்பட்டிருக்கிறது. அரசே ஏற்று நடத்துகிறபோது, உறுப்பினர்கள் கூறிய பல்வேறு கருத்துகளும் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 677, திரு. ரா. ஈஸ்வரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.



1998 மே 29]

**677--**

### ஆதிதிராவிடர் தொடக்கப் பள்ளி ஆரம்பித்தல்

*8562--**திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வாசுதேவநல்லூர் பேரூராட்சியில் கலைஞர் காலனியில் ஓர் ஆதிதிராவிடர் தொடக்கப் பள்ளி ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாசுதேவநல்லூர் பேரூராட்சியில் கலைஞர் காலனியில் சுமார் 300 வீடுகள் உள்ளன. அங்கே ஆரம்பப் பள்ளி தொடங்குவதற்கான ஏற்பாட்டை நடைமுறைப்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிய தொடக்கப் பள்ளிகள் தற்போது கல்வித் துறையின் மூலம் மட்டுமே தொடங்கப்படுகின்றன. அங்ஙனம் தொடங்கப்படும் பள்ளிகளில் 18 விழுக்காடு ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு அருகிலே தொடங்கப்பட வேண்டுமென்பது அரசின் கொள்கையாக இருக்கிறது. அதன்படி கடந்த ஆண்டுகூட தொடங்கப்பட்ட 168 தொடக்கப் பள்ளிகளில், 14 பள்ளிகள் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு அருகில் தொடங்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு 300 தொடக்கப் பள்ளிகளும், அடுத்த ஆண்டு 400 தொடக்கப் பள்ளிகளும் தொடங்கப்பட உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் கல்வித் துறையை

அணுகினால், சாத்தியக்கூறுகள் இருப்பின், எதிர்வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் *678*, திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**678--**

### அறிவியல் ஆய்வுக் கூடம் அமைத்தல்

***11616--திரு. மு. பன்னீர்செல்வம்:**

*மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*சீர்காழி தொகுதியிலுள்ள கொண்டல் ஆதிதிராவிடர் மேல்நிலைப் பள்ளியில் அறிவியல் ஆய்வுக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, கொண்டல் கிராமத்தில் ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் நடத்தப்படும் மேல்நிலைப் பள்ளிக்கு ஆய்வுக்கூடம் அமைக்கப் போவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த ஆண்டே அது நடைமுறைப்படுத்தப்படுமா? இதற்காக எவ்வளவு நிதி ஒதுக்கப் பட்டிருக்கிறது? ஏனென்றால் அந்த மாணவர்கள் செய்முறைத் தேர்வுகளுக்காக 'சயன்ஸ் லேப்'க்குச் செல்ல வேண்டுமென்றால் கொண்டல் கிராமத்திலிருந்து, சீர்காழி வந்து, சீர்காழியிலிருந்து சிதம்பரம் செல்ல வேண்டும். கிட்டத்தட்ட 28 கிலோமீட்டர் சென்றுதான் செய்முறைத் தேர்வுகளில் கலந்துகொள்ள வேண்டும். எனவே, இந்த ஆண்டே செய்முறைத் தேர்வுக்கான ஆய்வுக் கூடத்தை அமைத்துக் கொடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதியில் கொண்டல் மேல்நிலைப்பள்ளிக்கு ஆய்வுக்கூடம் கட்டுவதற்கு கடந்த



ஆண்டு ஒப்பந்தம் போடப்பட்டது. இந்த ஆண்டு ஆய்வுக் கூடத்திற்கான கட்டடப் பணி தொடங்கப்பட்டிருக்கிறது. வருகின்ற ஜூன் 15ஆம் தேதிக்குள் கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் *679*, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**679--**

### சுற்றுலா சிறப்புப் பேருந்துகள் இயக்குதல்

***12533--திரு. ஐ. கணேசன்:**

*மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*தமிழகத்தில் அனைத்து சுற்றுலா மையங்களுக்கும் சென்றுவர ஒவ்வொரு மாவட்டத்தின் தலைமையிடத்தில் இருந்தும் சுற்றுலா சிறப்புப் பேருந்துகள் இயக்கி அதன்மூலம் அரசுக்குக் கிடைக்கும் வருமானத்தைப் பெருக்க ஆவன செய்யப்படுமா?*

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தமிழகத்திலுள்ள அனைத்து சுற்றுலா மையங்களுக்கும் சென்று வர ஒவ்வொரு மாவட்டத் தலைமையிடத்திலிருந்தும் சுற்றுலா சிறப்புப் பேருந்துகள் இயக்கும் கருத்துரு தற்போது இத்துறையில் இல்லை.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு, இதை மீண்டும் பரிசீலனை செய்து ஒவ்வொரு மாவட்டத்தின் தலைமையிடத்தில் இருந்தும் சுற்றுலா சிறப்புப் பேருந்து, அனைத்து சுற்றுலா மையங்களுக்கும் சென்றுவர முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறையின் சார்பாக சென்னையை மையமாகக் கொண்டு பல சுற்றுலா வழித் தடங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. மாவட்டத்தைத் தலைமையிடமாகக் கொண்டு சுற்றுலா சிறப்புப் பேருந்து இயக்குவதற்கு, மறுபரிசீலனை செய்யவேண்டிய அவசியம் இல்லை என்று சுற்றுலாத் துறை கருதுகிறது.

[1998 மே 29

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 680, திரு. கொ.வீ. நன்னன், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

**680--**

### குயிலம் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு நிலையம்

*11559*--**திரு. கொ.வீ. நன்னன்:**

*மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

*(அ)* செங்கம் தொகுதி, குயிலம் கிராமத்திலுள்ள கதர் கிராமிய நூற்பு நிலையம் மற்றும் குயிலம் ஆதிதிராவிடர் காலணிகள் மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு நிலையம் பல ஆண்டுகளாக இயங்காமல் இருப்பதை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): குயிலம் ஆதிதிராவிடர் காலணிகள் மற்றும் தோல் பொருள்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கமானது 1993-94 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு இலவசமாக வழங்குகின்ற காலணிகளை சப்ளை செய்ததில் ஊழல் நடைபெற்று 10 லட்சம் ரூபாய் அளவிற்கு முறைகேடுகள் நடைபெற்றதால், இப்போது அந்தக் கூட்டுறவுச் சங்கமானது புலனாய்வுத் துறையின் விசாரணையில் இருக்கிறது. அதனால் அந்தச் சங்கம் செயல்படுவதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



1998 மே 29]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) கதர்த் துறையில் ஊழல் முறைகேடுகளால் கோடிக்கணக்கான ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக வந்துள்ள செய்தி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, சிறப்புக் கவன ஈர்ப்பு. கதர்த் துறையில் ஊழல் முறைகேடுகளால் கோடிக் கணக்கான ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக வந்துள்ள செய்தி குறித்து, மாண்புமிகு உறுப்பினர் நா. பெரியசாமி மாண்புமிகு கதர்த் துறை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1996-ல் திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்ததற்குப் பிறகு, பல்வேறு துறைகளிலும் ஊழலற்ற தூய்மையான நிர்வாகத்தை பொது மக்களுக்குத் தருகிற வகையில் ஒரு வெளிப்படையான அரசு நடந்து வருகிறது. கடந்த ஆட்சிக் காலத்திலே நடைபெற்ற எல்லா ஊழல்களையும் அம்பலப்படுத்தி, பொது மக்களுடைய வரிப் பணத்தை, செல்வ ஆதாரங்களை யார் கொள்ளையடித்தார்கள் என்பதைப் பற்றியும் ஆராய்ந்து, இந்த அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து மக்கள் மன்றத்திலே அதைத் தெளிவாக்கி வருகிறது. இருந்தாலும், கடந்த காலத்தில் நடைபெற்ற ஊழல் சம்பவங்களைக்கூட இந்த ஆட்சிக் காலத்திலே நடைபெறுகிற சம்பவங்களைப் போல சித்தரித்து சில பத்திரிகைகளில் செய்தி வருகிற காட்சியை நாம் தினந்தோறும் பார்க்க முடிகிறது. குறிப்பாக 'தினமலர்' பத்திரிகையில் கதர்த் துறையைப் பற்றி மிகப் பெரிய அளவிற்கான ஒரு செய்தி--300 கோடி ரூபாய் அளவிற்கு ஊழல், பீகாரில் நடைபெற்ற மாட்டுத் தீவன ஊழல் வழக்கை மிஞ்சக்கூடிய ஊழல் என்றெல்லாம் தலைப்பிட்டு--பரபரப்பாக வெளியிடப்பட்டு இருக்கிறது. இதுகுறித்து அரசு அந்தத் துறையின் சார்பாக என்ன விளக்கத்தை அளிக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெருந்துறை சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு பெரியசாமி அவர்கள் குறிப்பிட்ட அந்த நாளிதழில் வெளிவந்த செய்தியின் தொடர்ச்சியாக, நான் சார்ந்து இருக்கிற கதர்த் துறையில் ஊழல், முறைகேடுகளால் கோடிக் கணக்கான ரூபாய்க்கு இழப்பு ஏற்பட்டு இருப்பதாக இந்த மாமன்றத்தில் தெரிவித்து இருக்கின்றார்கள். ஆனால், ஒரு குறிப்பிட்ட

[திரு. அந்தியூர் ப. செல்வராசு] [1998 மே 29

நாளிதழில்--மற்ற எல்லாப் பகுதிகளில் இருந்தும் வருகிற நாளிதழ்களில் குறிப்பிடப்படவில்லை--குறிப்பாக மதுரையிலே இருந்து வெளிவருகிற 'தினமலர்' நாளிதழில், 1993, 1994, 1995 ஆம் ஆண்டுகளில் கதர் வாரியத்தில் கொள்முதல் செய்யப்பட்ட பொருள்கள், விற்பனை செய்யப்பட்ட பொருள்கள் குறித்து செய்தி வந்திருக்கிறது. சமீபத்தில்கூட, மே மாதம் 17 ஆம் தேதி, "பீகார் கால்நடை தீவன ஊழலை மிஞ்சுகின்ற அளவிற்கு தமிழக காதித் துறையில் ஊழல்" என்று தலைப்பிட்டு ஒரு செய்தி வந்திருக்கிறது. இந்தச் செய்திக்கும், இன்றைக்கு இருக்கின்ற அரசாங்கத்திற்கும் சம்பந்தமே இல்லை. ஆனால், இதைப் படிக்கின்றபோது ஏதோ இந்த ஆட்சிக் காலத்தில்தான் இவ்வளவு பெரிய ஊழல் நடைபெறுவதாக மக்கள் மனதில் ஐயப்பாடு ஏற்படுவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. ஆனால், அந்தச் செய்தியில் உள்ளதைப் படிக்கும்போது, 1993, 1994, 1995 ஆம் ஆண்டுகளில் இந்த வாரியத்தில் இலவம் பஞ்சு கொள்முதல் செய்த வகையில், வேப்ப எண்ணெய் கொள்முதல் செய்த வகையில், காலணிகள் கொள்முதல் செய்த வகையில், அதே மாதிரி பஞ்சு கொள்முதல் செய்த வகையில், இந்த வாரியத்திற்கு பல கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டு இருக்கிறது. ஆனால், அந்த ஆண்டுகளில் நடைபெற்ற முறைகேடுகள் எல்லாம் இந்த அரசு வந்ததற்குப் பிறகு நடைபெற்றதாக ஒரு மையக் கருத்து கொண்டு, அந்தமாதிரி செய்திகள் வெளிவருவது இந்த வாரியத்தின்மீது ஓர் ஐயப்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்பை உண்டாக்கும். இந்த வாரியத்தைப் பொறுத்தவரையில், சுமார் ஒரு இலட்சம் கைவினைஞர்கள் இந்த வாரியத்தை நம்பி வாழ்கிறார்கள். கிராமங்களில் கிடைக்கின்ற மூலப் பொருள்களை வைத்து, அந்தந்தப் பகுதிகளில் இருக்கிற தொழில்களைச் செய்கின்ற ஓர் உன்னதமான வாரியம் இந்த கதர்த் துறை வாரியம். ஆனால், இதுசம்பந்தமாக 7-5-1998 ஆம் தேதி நான் அனைத்து பத்திரிகையாளர்களையும் அழைத்து, அந்தப் பத்திரிகையாளர்கள் கூட்டத்திலே இதுபற்றி விரிவாக எடுத்துக் கூறி இருக்கின்றேன். 1993 ஆம் ஆண்டும், 1994 ஆம் ஆண்டும், 1995 ஆம் ஆண்டும் இந்த வாரியத்தில் எவ்வளவு பஞ்சு கொள்முதல் செய்யப்பட்டது என்றும், அதனால் எவ்வளவு இழப்பு ஏற்பட்டது என்றும்--85 லட்சம் ரூபாய் இந்த வாரியத்திற்கு இழப்பு ஏற்பட்டது-- இந்த அரசு வந்ததற்குப் பிறகுதான் பஞ்சு வியாபாரம் செய்தவருக்கு 8 லட்சம் ரூபாய் நிலுவைத் தொகைகூட நிறுத்தி வைக்கப்பட்டது என்றும் தெரிவித்தேன்.



1998 மே 29] [திரு. அந்தியூர் ப. செல்வராசு]

முற்பகல் 10-40

அதே மாதிரி சுடுகாட்டு ஊழல். சேலம், அயோத்தியாபட்டிணம் தச்சு கொல்லுப்பட்டறை கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக, சுடுகாட்டுக் கொட்டகைகளைக் கட்டுவதில் ஊழல் செய்யப்பட்டு, அதன்மூலம் பல கோடி ரூபாய் இந்தக் கதர் வாரியத்திற்கு இழப்பை ஏற்படுத்தியது முந்தைய அரசு என்பதை இந்த நாடே அறியும். இரண்டு நாட்களுக்கு முன்புகூட அதுகுறித்த செய்திகளைப் பத்திரிகைகளில் பார்த்தோம். அந்தத் துறைகளை வைத்திருந்த முன்னாள் அமைச்சர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று வந்ததைப் பத்திரிகைகளில் பார்த்தோம். ஆனால் இந்தமாதிரியான செய்திகளை இப்போது வெளியிட்டு, வாரியத்திற்கும், இந்த அரசுக்கும் கெட்ட பெயரை உருவாக்க வேண்டுமென்ற உள்நோக்கத்தோடு 'தினமலர்' நாளிதழ், மதுரையிலிருந்து வெளிவரும் தனது பதிப்பில் இப்போது செய்தி வெளியிட்டிருக்கிறது. எந்த நோக்கத்திற்காக அந்தப் பத்திரிகை இதுமாதிரி ஒரு செய்தியை வெளியிடுகிறது என்பது தெரியவில்லை. இந்தமாதிரி செய்திகள் வெளிவந்தால், அந்த வாரியத்தில் இருக்கிற ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை வாய்ப்பை இழக்கும் சூழ்நிலை ஏற்படும்.

அரசுத் துறைகளில் ஏதாவது முறைகேடுகள் முக்கியமாக நடைபெற்றால் அதை வெளியிடுவதற்குப் பத்திரிகைகளுக்குச் சுதந்திரம் உண்டு. அதற்கான பத்திரிகை தர்மம் இருக்கிறது. அத்தகைய பத்திரிகை தர்மத்தின் அடிப்படையில் இந்தத் துறையில் ஏதாவது தவறுகள் நடந்திருந்தால் அதைச் சுட்டிக்காட்டுவது பத்திரிகைகளின் கடமை என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொண்டு, உண்மையான செய்திகளாக இருந்தால் அதை வெளியிடலாம். ஆனால் தவறான செய்திகளை வெளியிட்டு மக்கள் மனதில் ஓர் ஐயப்பாட்டை அந்தப் பத்திரிகை உருவாக்க வேண்டாம் என்று கேட்டு, இந்த மாமன்றத்தில் என் விளக்கத்தைக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதை எடுத்துக்கூறி, நன்றி கூறி அமர்கிறேன்.

[1998 மே 29

## (ஆ) சென்னைக் கடற்கரையிலுள்ள காமராஜர் சிலை அருகில் மின் விளக்குப் போடுதல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்த சிறப்புக் கவன ஈர்ப்பு சென்னைக் கடற்கரை காமராஜர் சாலையில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் சிலை இருளில் மூழ்கியுள்ளது குறித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, படிக்காத மாமேதை, கர்மவீரர் காமராஜர் அவர்கள் ஒன்பதாண்டுக் காலம் தமிழக முதல்வர் பதவியை அலங்கரித்த நேரத்தில், அந்தப் பதவியில் அவர்கள் இருந்தபோது, தமிழக மக்களின் கல்விக் கண்ணைத் திறக்க வேண்டுமென்று தமிழகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் பள்ளிக்கூடங்களைத் திறந்துவைத்து தமிழர் வாழ்வில் ஒளியேற்றியவர் ஆவார்கள். அந்தப் பெருந்தலைவருடைய சிலை, சென்னை கடற்கரை காமராஜர் சாலையில் அகில இந்திய வானொலி நிலையத்திற்கு எதிரில் அமைந்திருக்கும் அந்தச் சிலை, இரவு நேரங்களில் இருளில் மூழ்கியிருக்கிறது. காரணம், அங்கே போடப்பட்டிருக்கக்கூடிய விளக்குகளில் ஒன்று சிலைக்கு எதிர்ப்புறமும், இன்னொரு விளக்கு கடலை பார்த்தபடியும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த விளக்குகள் கர்மவீரர் காமராஜருடைய சிலையைப் பார்த்தவண்ணம் இல்லாத காரணத்தால் ஃபோகஸ் லைட் அங்கே இல்லாத காரணத்தால், இரவு வேளைகளில் அந்தச் சிலை இருளில் மூழ்கியிருக்கிறது.

நமது முதலமைச்சர் அவர்கள் பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்கு கன்னியாகுமரியில் மணிமண்டபத்தைக் கட்டுவதற்கு ஆணையிட்டிருக்கிறார்கள். அதேபோல, காமராஜர் சாலை என்று பெயர் வைக்கப்பட்டுள்ள அந்தச் சாலையில் இருக்கிற பெருந்தலைவருடைய சிலைக்கு அவர்கள் உடனடியாக ஃபோகஸ் லைட்டுகளைப் போட வேண்டும் என்பது தமிழ் மாநில காங்கிரசின் கோரிக்கை. அரசே அதைச் செய்யலாம். ஒருவேளை அரசு அதைச் செய்யாவிட்டாலும், எங்களுடைய தலைவர் மூப்பனார் அவர்களுடைய தலைமையில் இருக்கிற தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்கு நீங்கள் அனுமதி கொடுத்தால், நாங்களே அந்த விளக்குகளை அமைத்துக்கொள்கிறோம். அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதியளிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



1998 மே 29]

**திரு. இரா. தாமரைக்கனி:** தமிழ்நாடே இருளில் மூழ்கியிருக்கிறது. அதற்கு யாரும் ஒன்றும் சொல்லவில்லையே?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தமிழ்நாடு இருளில் மூழ்கியிருப்பது, தாமரைக்கனிக்குக் கொண்டாட்டம்தானே?

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** துணைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள், முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பை திரு. ஞானசேகரன் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கின்றார்கள்.

சிலையைப் பொறுத்தவரையில்-- அந்தச் சிலைக்குச் சொந்தக்காரரான-- பெருந்தலைவர் காமராஜர் இந்த மாநிலத்திற்கு மாத்திரமல்லாமல், இந்தியத் திருநாட்டிற்கே மிக முக்கியமான ஒரு பெருந்தலைவர் என்பதை யாரும் அணுவளவும் மறுத்துக் கூற இயலாது.

கடற்கரையில் இருக்கின்ற சிலைக்கு அமைக்கப்பட்டிருக்கின்ற ஒளி விளக்கு போதாது, அதற்கு ஒரு ஃபோகஸ் லாம்ப் பொருத்தப்பட வேண்டும் என்ற ஓர் எண்ணத்தை இங்கே அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். காமராஜர் அவர்களிடத்திலே--இந்த அரசுக்கு இன்று நேற்றல்ல, இந்த அரசு உருவாவதற்கு முன்பே, சென்னை மாநகராட்சி மன்றம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கைக்கு வந்த அந்தக் காலகட்டத்திலேயே, உயிரோடு இருப்பவர்களுடைய சிலைகளைத் திறப்பதில்லை என்று உறுதி எடுத்துக்கொண்டிருந்த பண்டித நேரு அவர்களுடைய உள்ளத்தையே மாற்றி, அவர்களை அழைத்து வந்து--திராவிட முன்னேற்றக் கழகம்தான்--சென்னை மாநகராட்சி மன்றத்தில் காமராஜருடைய சிலையைத் திறந்து வைத்தவர்களே நாங்கள்தான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) திரு. சி. ஞானசேகரன் அவர்கள் மறந்திருக்கமாட்டார் என்று கருதுகின்றேன். காமராஜருடைய புகழை, சிலையின் மூலமாக மாத்திரமல்ல, அவர்கள் விட்டுச் சென்ற பணிகளையும் நாம் ஏற்று நடந்தால்தான் அது காமராஜருக்கு

நாம் செய்கின்ற தொண்டு, அவருக்கு அளிக்கின்ற காணிக்கை ஆகும். திரு. ஞானசேகரன் அவர்கள் சொன்னார்கள், 'உங்களால் முடிந்தால் செய்யுங்கள், இல்லையென்றால் நாங்களே எங்கள் கட்சியின் சார்பாகச் செய்கின்றோம்' என்று. அதைச் சொல்லாமல் இருந்திருந்தால், நான் இப்போது சொல்லப் போவதைச் சொல்லியிருக்கமாட்டேன்.

முற்பகல் 10-45

காமராஜர் சாகிற வரையிலும், அவரோடிருந்து, பணியாளராக இருந்தவர் வைரவன் என்ற ஒருவர். காமராஜர் சாகிற வரையிலும் இருந்தார். காமராஜர் இறந்துபோன பிறகு அந்த வைரவனைக் கவனிக்க அந்தக் கட்சியிலே நாதியே இல்லை என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வைரவனை, காமராஜர் நினைவு இல்லத்தைப் பார்த்துக்கொள்கின்ற காவலாளியாக நியமித்து, மாதம் 1,000 ரூபாய் சம்பளம் கொடுத்ததும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு வீடு ஒன்று அமைத்துக் கொடுத்ததும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் என்பதையும், காமராஜருடைய பணியாளருக்கே வெளிச்சம் கொடுத்த இந்த ஆட்சி, பெருந்தலைவர் காமராஜருடைய சிலைக்கா வெளிச்சம் தராமல் போய்விடும் என்பதைச் சொல்லி, உடனடியாக அதைக் கவனிக்குமாறு-- பொதுப்பணித் துறையோ அல்லது மாநகராட்சி மன்றமோ--அந்தத் துறைகளை நான் கேட்டுக்கொள்கின்றேன். உடனடியாக அது செயல்படுத்தப்படும்.

## 3. விதி 111-ன்கீழ் அமைச்சரின் அறிக்கை

### 10-4-1997 அன்று வினா எண் 3618-ன் மீது திரு. க. மணிவர்மா கேட்ட துணை வினாவிற்கான விடையில் திருத்தம் குறித்து வேளாண்மைத் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 111-ன்கீழ் திருத்த அறிக்கை அளித்தல். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 111-ன்கீழ் திருத்த அறிக்கை ஒன்றை இந்த அவைமுன் வைக்க விரும்புகிறேன்.



10-4-1997 ஆம் நாளன்று, திரு. க. மணிவர்மா அவர்களது வினா எண் 3618-க்கான துணை வினாக்களுக்கு சட்டமன்றப் பேரவையில் விடையளிக்கும்போது,

"ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் சொந்தமான இடத்தில் இருக்குமிடங்களில் அந்தப் பொருளீட்டுக் கடன் பெறக்கூடியவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாயிலிருந்து 35 ஆயிரம் ரூபாயும், அதைப்போல தனியாரிடத்தில் வாடகைக்கு உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் இருந்தாலும்கூட அங்கே பொருளீட்டுக் கடனாக 25 ஆயிரம் ரூபாய் வழங்கலாம் என்றும் அறிவித்து இருக்கிறோம். ஆகவே, 270 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலும் விவசாயிகளுக்குப் பொருளீட்டுக் கடன் கொடுக்க இந்த அரசாங்கம் ஆணையிட்டு இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்" என்பதற்குப் பதிலாக கீழ்க்கண்டவாறு திருத்திக்கொள்ள வேண்டுகிறேன்:

"சொந்தக் கட்டடங்களில் இயங்கும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பொருளீட்டுக் கடன் தொகை ரூ. 25,000/-லிருந்து 35,000/- ரூபாயாக உயர்த்துவது குறித்தும், தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பொருளீட்டுக் கடன் ரூ. 25,000/- வரை வழங்குவது குறித்தும், மாநிலத்திலுள்ள 270 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலும் பொருளீட்டுக் கடன் வழங்குவது குறித்தும் அரசின் பரிசீலனைக்குப் பின்னர் தக்க ஆணைகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்".

## 4. கவன ஈர்ப்பு

### (அ) நாகப்பட்டினம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளிக் கட்டடம் பழுது பார்க்க அனுமதி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஜி. நிஜாமுதீன் அவர்கள் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஜி. நிஜாமுதீன்.

[1998 மே 29

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"நாகப்பட்டினம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் முதல் மாடி பழுதடைந்து இடியும் நிலையில் உள்ளது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

**விவர அறிக்கை**

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தின்கீழ் நாகப்பட்டினம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி கட்டடத்தைப் பழுதுபார்க்க நிர்வாக அனுமதி அளித்துள்ளார். இந்தப் பணி பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தப் பணிக்கான மொத்த மதிப்பீடு ரூ. 6.70 இலட்சம் ஆகும். இம்மதிப்பீட்டுத் தொகைக்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதல் கோரப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒப்புதலளிக்கப்பட்டபின், பழுதுபார்க்கும் பணி பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்படும்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அந்தப் பள்ளிக்கூடம் கடந்த 5 ஆண்டுகாலத்தில் கவனிக்கப்படாமல் கீழ்த்தளம், முதல் மாடி ஆகிய இரண்டும் மிகவும் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் வகுப்பறைகளுக்குச் செல்ல மாணவ மாணவியர்கள் அஞ்சக் கூடிய நிலையில் இருந்தது. இந்த அரசு பொறுப்பேற்றவுடன் கீழ்த்தளத்தை ஓரளவுக்குப் பழுதுபார்த்து, இன்று அங்கே மாணவர்கள் படிக்கக்கூடிய நிலையை ஏற்படுத்தி இருக்கின்றார்கள். அதுபோல, அந்தப் பள்ளியினுடைய தலைமை ஆசிரியை ஊழல் புரிந்தவராக இருந்ததால், அந்தத் தலைமை ஆசிரியையைக் கைது செய்ய உத்தரவு பிறப்பித்து இந்த அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகின்றது. இந்நிலையில் இறுதியாக எஞ்சியுள்ள பகுதி முதல் மாடிதான்.



1998 மே 29]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளியின் முதல் மாடி மிகவும் பழுதடைந்துள்ளது. அதை ஒழுங்குபடுத்துவதற்காக, 6,70,000 ரூபாய் மதிப்பீட்டில் செலவு செய்வதாக அறிக்கையில் விவரம் அறிவித்திருக்கிறார்கள். இப்பழுதினை வருகின்ற மழைக் காலத்திற்குள் செப்பனிட்டுத் தந்தால் மிகவும் நன்றாக இருக்கும். இல்லையென்றால், மழைக் காலத்தில் முதல் மாடி விழக்கூடிய அபாயம் ஏற்படும். ஆகவே, செய்திருக்கின்ற காரியங்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். செய்ய வேண்டிய காரியங்களை வருகின்ற மழைக் காலத்திற்குள் செய்து, பள்ளியின் முதல் மாடியைப் புதுப்பித்துத் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவருடைய அனுமதியைப் பெறுவது கொஞ்சம் கடினமாக இருந்ததற்குக் காரணம் மாவட்ட ஆட்சித் தலைவர் மாற்றப்பட்டு புதிய மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுப்பேற்று சில நாட்கள்தான் ஆகின்றன. அவர் உத்தரவிட்டவுடனேயே பொதுப் பணித் துறை அந்த வேலையைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்.

**(ஆ) சிம்சன் தொழிற்சங்கத் தேர்தல், விதிமுறைகளின்படி நடத்தப்படாமல் உள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் ஆ. நடராசன், சி. ஞானசேகரன், ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் ஆகியோரில் ஒருவர், ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஆ. நடராசன்.

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சிம்சன் தொழிற்சங்கத் தேர்தல், விதிமுறைப்படி குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் நடத்தப்படாமையால் ஏற்பட்டுள்ள நிலை" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

**விவர அறிக்கை**

சிம்சன் குரூப் தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் சார்பாக சிம்சன் குரூப் கம்பெனிஸ் ஓர்க்கர்ஸ் யூனியன் மற்றும் சிம்சன் குரூப் கம்பெனிஸ் ஸ்டாஃப் யூனியன் ஆகிய இரண்டு தொழிற்சங்கங்கள் திரு. ஆர். குசேலர் தலைமையில் செயல்பட்டு வருகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளாக மேற்குறிப்பிட்ட சங்கங்களின் தேர்தல் நடத்தப்படவில்லை. தற்போது அமலில் உள்ள ஒப்பந்தம் ஜூன் 1998-ல் காலாவதியாகிறது. மேற்குறிப்பிட்ட இரு தொழிற்சங்கங்களின் சார்பாக 14 தொழிற் சங்க நிர்வாகிகள், 80 குரூப் லீடர்கள் மற்றும் கமிட்டி உறுப்பினர்கள் 8-7-1997-ல் நடத்திய செயற்குழுக் கூட்டத்தில் புதிய ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு தொழிற்சங்கத் தேர்தலை நடத்த தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளது. செப்டம்பர் 1997 மற்றும் மே 1998 மாதங்களில் திரு. ஆர். குசேலர் நடத்திய கருத்துக் கணிப்பிலும் இக்கருத்தே வெளிப்பட்டது. நிர்வாகத் தரப்பில் திரு. ஆர். குசேலர் தலைமையிலான தொழிற்சங்க நிர்வாகிகளுடன் ஊதிய உயர்வு மற்றும் இதர கோரிக்கைகள் சம்பந்தமாக பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாகவும், சுமூக ஒப்பந்தம் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன எனவும் தெரிவித்துள்ளது. ஆனால் தேர்தலை உரிய காலத்தில் நடத்தாமல் திரு. ஆர். குசேலர் தலைமையிலான தொழிற்சங்கங்களுடன் நிர்வாகம் பேச்சுவார்த்தை நடத்துவதை எதிர்த்து சிம்சன் குரூப் தி.மு.க. அணி, சிம்சன் குரூப் தொழிலாளர்கள் மற்றும் குமாஸ்தாக்கள் அணி ஆகிய அமைப்புகள் தொடர்ந்து ஆட்சேபணைகளை எழுப்பி வருவதாகவும், இதனைப் பொருட்படுத்தாமல் தொழிலாளர்கள் உற்பத்தி பாதிப்பு ஏதுமின்றி அமைதியாக புதிய ஒப்பந்தத்தை எதிர்நோக்கி பணிபுரிந்து வருவதாக நிர்வாகத் தரப்பில் இருந்து





அறியப்பட்டது. மேலும், திரு. கே. குருமூர்த்தி மற்றும் திரு. சி. கோவிந்தராஜுலு தலைமையிலான சிம்சன் குரூப் தொழிலாளர்கள் மற்றும் குமாஸ்தாக்கள் அணி சார்பில் தொழிற்சங்கத் தேர்தலை உடன் நடத்தக் கோரி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள உரிமை மனு தற்போது டிவிசன் பெஞ்சின் விசாரணையில் உள்ள நிலையில் தொழிலாளர்கள் நேரடி நடவடிக்கைகளில் ஈடுபடாமல் தொழில் அமைதியுடன் நிறுவனம் நடைபெற்று வருவதைக் கருத்திற்கொண்டு டிவிசன் பெஞ்சின் வழக்கு முடிவினை தேர்தல் நடத்தப்படுவது குறித்து எதிர் நோக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 21-6-1996 அன்று சங்கத் தேர்தல் நடைபெற்று ஓர் ஆண்டு முடிந்து 21-6-1997-ல் தேர்தல் நடத்தியிருக்க வேண்டும். ஆனால், 8-7-1997-ல்தான் செயற்குழுவைக் கூட்டி அதன்மூலம் தேர்தல் நடத்துவதை ஒத்திப்போட்டு இருக்கிறார்கள். 1998 ஜூன் மாதம் ஏற்பட இருக்கின்ற ஒப்பந்தத்தைக் காரணம் காட்டி, ஓர் ஆண்டுக்கு முன்னாலே தேர்தலை ஒத்திப்போட்டது. முறையாக இருக்காது. எப்படி அரசியல் கட்சிகளை பதிவு செய்வதற்கு, உட்கட்சித் தேர்தலை நடத்த வேண்டுமென்று முறைப்படுத்தி இருக்கிறோமோ, அதேபோல சங்கத் துணை விதிகளுடன் பதிவு செய்யும் தொழிற்சங்கங்களும் ஆண்டுதோறும் முறைப்படி தேர்தல் நடத்த வேண்டுமென்று அரசாங்கம் விதிமுறை கொண்டுவர வேண்டும். அதற்கான நடைமுறைகளைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) கடந்த 1972 ஆம் ஆண்டு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள், இதே சிம்சனினுடைய தேர்தலை--அங்கே தொழிலாளர்களுக்கிடையே ஏற்பட்ட குழப்பம் காரணமாக--தொழிலாளர் நலத் துறை அதிகாரிகள் மூலம் நடத்தினார்கள். அதைப்போல இந்தத் தேர்தலை உடனடியாக நடத்தி, ஒரு முறையான ஒப்பந்தத்தை ஏற்படுத்தினால் 7,000 தொழிலாளர்கள் இருக்கக்கூடிய அந்தத் தொழிற்சாலையிலே நல்லமுறையில் தொழில் அமைதி நிலவும்; அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிம்சன் நிறுவனத்திலே 5,587 தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். 'ஸ்டாஃப் யூனியன்' என்றும் 'தொழிலாளர் சங்கம்' என்றும் இரண்டு சங்கங்கள் இருக்கின்றன.

இதனுடைய தலைவராக திரு. குசேலர் அவர்கள் இருக்கிறார்கள். 21-6-1996-லே தேர்தல் நடைபெற்று, மீண்டும் தேர்தல் நடைபெறாமல்--1997-லே சங்கத் தேர்தல் நடைபெற்றிருக்க வேண்டும்--இன்னும் அந்தத் தேர்தலே நடைபெறாமல் தொடர்ந்து போய்க்கொண்டிருக்கிறது. இது Unlabour practice என்பதிலே சந்தேகம் கிடையாது. இது ஜனநாயக விரோதப் போக்கு, தொழிலாளர் விரோதப் போக்கு என்பதிலே எவ்விதக் கருத்து வேறுபாடும் கிடையாது. ஆகையினால் உடனடியாகத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதிலே இந்த அரசு மிகுந்த அக்கறையோடு இருக்கிறது. 1926 ஆம் ஆண்டு பிரிட்டிஷ்காரர்கள் காலத்திலே கொண்டுவரப்பட்ட 'ட்ரேட் யூனியன்' சட்டத்திலே, 'தேர்தலை நடத்தித் தீரவேண்டும். நடத்தவில்லையென்றால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, நடத்துவதற்கு வழிவகை செய்ய வேண்டும்' என்ற பிரிவு இல்லாமல் இருப்பது மிகவும் துரதிருஷ்டவசமானது. இது மத்திய அரசினுடைய சட்டமாக இருந்தாலும், தொழிலாளர் நலனிலே அக்கறையுடைய நம்முடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையிலே நடைபெறுகிற இந்த அரசு, இத்தகைய ஜனநாயக விரோதப் போக்கு இந்தத் தொழிற்சங்கத்தில் நடைபெறுவதை நிச்சயமாக அனுமதிக்காது. ஆகையினால் இது மத்திய அரசினுடைய சட்டம் என்ற காரணத்தினாலே, மத்திய அரசோடு கலந்து, தேர்தலை உடனடியாக நடத்துவதற்கான சட்டத் திருத்தத்தை கொண்டுவருகிற முயற்சியில் இந்த அரசு ஈடுபடும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 30-4-1998 அன்று இந்த சிம்சன் குரூப்பிலே கருத்துக் கணிப்பு என்று ஒன்றை நடத்தியிருக்கிறார்கள். சிம்சன் குரூப்பினுடைய அந்தச் சங்க விதிமுறைகளின்படி, ஆண்டுக்கு ஒருமுறை தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஆனால், அந்தத் தேர்தல் நடத்தப்படவில்லை. அதுவே ஒரு பெரிய குறை. இன்னும்கூட ஒன்றை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். சிம்சன் குரூப்பினுடைய சங்க விதிமுறைகளில்



துணை விதி 26(ஏ)-ன்கீழ் கம்யூனிஸ்ட் கட்சியினராக இருந்தாலோ அல்லது இருப்பதுபோல சந்தேகப்பட்டாலோ, அவர்களை, அந்தத் தொழிற்சங்கத்திலே சேர்க்கக்கூடாது என்றுகூட விதிமுறைகள் இருந்தன. அத்தகைய விதிமுறைகள்கூட தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய முயற்சியால், 1974-லேதான் மாற்றியமைக்கப்பட்டன என்பதையும் நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். நான் என்ன கேட்க விரும்புகிறேன் என்றால், சட்ட விதிமுறைகளையும் பின்பற்றாமல், தொழிலாளர்களுக்கு விரோதமாகவும், ஜனநாயகத்திற்குப் புறம்பாகவும், தேர்தலை நடத்தாமல் இருக்கக்கூடிய அந்த நிலையை உடனடியாக மாற்றி, இந்தத் தொழிற்சங்கங்களும்--ஒரு கட்சி இருக்கிறது என்று சொன்னால், அது உட்கட்சித் தேர்தலை நடத்தி, அதைத் தேர்தல் ஆணையத்திடம் முறைப்படி பதிவு செய்தால்தான் அதற்கு அங்கீகாரமே தரப்படுகிறது. தேர்தலில் நிற்க உரிமை தரப்படுகிறது. அதேபோல், இந்தத் தொழிற்சங்கங்களும்--ஆண்டுதோறும் தங்களுடைய விதிமுறைகளுக்கு உட்பட்டு தேர்தலை நடத்தவில்லை என்று சொன்னால், அவற்றுக்கான அங்கீகாரத்தை ஏன் அரசு ரத்து செய்யக்கூடாது, உடனடியாகத் தேர்தலை நடத்துவதற்கு ஏன் முறைப்படி நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதை இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இது தொடர்பாக உயர் நீதிமன்றத்திலே வழக்கு இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகவலிலே கொடுத்திருக்கிறார்கள். எனவே, உடனடியாக சிம்சன் தொழிலாளர்களுக்கான தேர்தலை நடத்த அரசு முன்வர வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், Trade Union Act, 1926 என்ற சட்டத்தின் எல்லாப் பிரிவுகளையும் படித்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். அதிலே ஒரு ட்ரேட் யூனியனை ரிஜிஸ்டர் செய்வதற்கான விதிகள் சொல்லப்பட்டு இருக்கின்றன. அதேநேரத்தில் அந்த ரிஜிஸ்ட்ரேஷனைக் கேன்சல் செய்வதற்கான நிபந்தனைகளும் சொல்லப்பட்டு இருக்கின்றன. அதிலே பல நிபந்தனைகள் சொல்லப்பட்டு இருக்கிறதே தவிர, துரதிருஷ்டவசமாக தொழிற்சங்கங்கள் குறிப்பிட்ட நேரத்தில் தேர்தலை நடத்தாவிட்டால், அந்த ட்ரேட் யூனியனுடைய ரிஜிஸ்ட்ரேசஷனைக் கேன்சல் செய்யலாம் என்ற பிரிவு இல்லை.

எனவே, இதுபோன்ற திருத்தங்களைக் கொண்டுவர வேண்டியுள்ளது. அதோடு சென்னை உயர்நீதிமன்றத்திலே குருமூர்த்தி மற்றும் கோவிந்தராஜுலு ஆகியோர் அடங்கிய சிம்சன் குரூப் தொழிலாளர்கள் மற்றும் குமாஸ்தாக்கள் அணி சார்பில் தொழிற்சங்கத் தேர்தலை உடன் நடத்திட ஆணையிடக் கோரி தாக்கல் செய்த உரிமை மனு இன்றைக்கு டிவிஷன் பெஞ்சிலே இருக்கிறது. உயர்நீதிமன்றம் இதற்கான உத்தரவைப் பிறப்பிக்கக்கூடும். அம்பத்தூரில் உள்ள 'பிரிட்டானியா இண்டஸ்ட்ரீஸ்' தொழிற்சாலையிலே இதுமாதிரி தேர்தல் நடத்தாமல் இருந்த சூழ்நிலையில் உயர்நீதிமன்றம் தலையிட்டு உத்தரவிட்டிருக்கிறது. எனவே, சட்டத் திருத்தமும் கொண்டு வர அரசு முயற்சி செய்யும், நல்ல சூழ்நிலை ஏற்படவும் வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 5. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் உங்களை இங்கே தனியாக அழைத்து, கனிவாகவே சொல்லிவிட்டேன். நாம் இப்போது நார்மல் பிசினசுக்கு வந்தபிறகு, நீங்கள் ஜீரோ ஹவரிலே எழுப்ப வேண்டியதை எல்லாம் இப்போது எழுப்ப முடியாது என்று நான் உங்களிடம் சொல்லிவிட்டேன். உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் இருவரும் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். நான் கேட்டுச் சொல்ல வேண்டும் அல்லவா? (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நானும் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். விளக்கம் கேட்க வேண்டும்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், நீங்கள் எங்கேயோ பார்த்துப் பேசிக் கொண்டிருந்தால் நான் என்ன செய்வது?

**THIRU C. GNANASEKARAN:** Hon. Deputy Speaker, Sir, I am not at all speaking to anybody.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேற்றுகூட இப்படித்தான் கேள்வி கேட்டுவிட்டு, இங்கே வந்து பேசிக்கொண்டு இருந்தீர்கள். மறுபடியும் போய்ப் பேசினீர்கள்.

## 4. கவன ஈர்ப்புகள்--தொடர்ச்சி

### (ஆ) சிம்சன் தொழிற்சங்கத் தேர்தல், விதிமுறைகளின்படி நடத்தப்படாமல் உள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை--தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. சி. ஞானசேகரன்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிம்சன் குரூப்பிலே உள்ள தொழிற்சங்கத் தகராறைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டு இருப்பதாகச் சொன்னார்கள். ஏற்கெனவே, 1972 ஆம் ஆண்டு, இந்தச் சண்டை முற்றிப்போய், துரை பிரதாப் சந்திரன் மற்றும் கண்ணன் என்ற இருவர்--2 தொழிலாளர்கள்--அப்போது படுகொலை செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் எல்லாம் அரசுக்கு நன்றாகத் தெரியும் என்று கருதுகிறேன். ஏற்கெனவே முன்னாள் மத்திய அமைச்சர் திரு. என்.வி.என். சோமு அவர்கள் அப்போது இருந்தகாலத்திலே முறையாகத் தேர்தல் நடத்தப்பட்டது. பிறகு நடந்த தேர்தலிலே சில முறைகேடுகள் நடந்த பிறகு, இன்னும் 2 ஆண்டுகாலமாக தேர்தல் நடைபெறாமல் இருக்கிற காரணத்தாலே, 7 ஆயிரம் பேர்கள் வேலை செய்யக்கூடிய சிம்சன் குரூப் தொழிலாளர்கள் மத்தியிலே கொந்தளிப்பு ஏற்படக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. ஏற்கெனவே 3 தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். 10 தொழிலாளர்களிடமிருந்து இன்று காரணம் கேட்டு நோட்டீஸ் விடப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட கொந்தளிப்பான நிலையைத் தவிர்க்க வேண்டும். அசம்பாவிதங்கள் எதுவும் நடக்கக்கூடாது என்று சொன்னால், அரசு இதிலே உடனடியாகத் தலையிட்டு எப்படியாவது நியாயமான முறையில், முறையாகத் தேர்தல் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கருத்தை அரசு கவனத்தில் கொண்டு, உரிய நடவடிக்கையை, உரிய நேரத்தில் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 6. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அறிக்கைகள் அளித்தல். குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர், திரு. சி.டி. தண்டபாணி.

**திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1997-98 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக தமிழ்நாடு வனத் தோட்டக் கழகச் செயல்பாடு மற்றும் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகச் செயல்பாடு குறித்த 64 மற்றும் 65 ஆவது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன். மேற்படி அறிக்கைகள், போதிய அவகாசமின்மையால் அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக படி எடுத்த பிரதிகளாக அளிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகளின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் அவை பேரவை உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பி வைக்கப்பெறும்.

### (ஆ) அவை உரிமைக் குழு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, அவை உரிமைக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு பேரவை முன்னவர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை உறுப்பினர், டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள் எழுப்பிய உரிமை மீறல் பிரச்சினை மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கையை உரிமைக் குழுவின் சார்பில் பேரவைக்கு அளிக்கிறேன்.



## 7. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டமுன்வடிவு, 1998 (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டமுன்வடிவைப் (தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/1998) பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/1998), மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/1998) @ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கடந்த ஆண்டு எழுப்பிய உரிமை மீறல் பிரச்சினை சம்பந்தமாக குழு அளித்த ஓர் அறிக்கை....

---

@ 27-5-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அதிலே பேசுவதற்குத்தான் உங்களைக் கூப்பிட்டேன். நீங்கள் காலையில் வந்து என்னிடம் சொன்னீர்கள் அல்லவா? இன்றைக்குத்தான் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதைப் படித்துவிட்டு நாளைக்குப் பேசுங்கள். இப்போது பில்லில் பேசுங்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *அதைப் பற்றிக் கருத்துச் சொல்வதற்கு நாளை எனக்கு நேரம் கொடுக்க வேண்டும்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *இப்போது பில்லில் உங்களைப் பேசுவதற்குக் கூப்பிட்டிருக்கிறேன். நாளைக்குக் கொடுக்க முடியுமா, முடியாதா என்பதை நாளைக்குத்தான் சொல்லமுடியும்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *நான் படித்துவிட்டுத்தான் முழுமையாகச் சொல்ல முடியும்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *திரு. லா. சந்தானம்.*

**திரு. லா. சந்தானம்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே......(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *சரி. டாக்டர் க. கிருஷ்ணசாமி, பேசுங்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒப்பந்தப்புள்ளிகள்* 'Transparency-A Bill to provide for transparency in the public procurement and to regulate the procedure in inviting and accepting tenders and matters connected therewith or incidental thereto' *என்பது பற்றிய புதிய தமிழகத்தினுடைய கருத்துகளை நான் முன்வைக்க கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி ஒரு முன் முயற்சி எடுத்திருப்பது பாராட்டக்கூடிய அம்சம். கடந்த பல ஆண்டு காலமாக அரசு மற்றும் பொது நிறுவனங்கள், அதனுடைய சார்பு நிறுவனங்களில் டெண்டர் முறைகள் இல்லாத காரணத்தினால் கோடிக்கணக்கான ரூபாய் ஊழல் நடந்து, மக்களுடைய சொத்துக்கள் எல்லாம் கொள்ளையடிக்கப்பட்ட செய்திகள் ஏற்கெனவே தெரிந்தவைகள்தான். எனவே அவற்றை எதிர்காலத்திலே நிரந்தரமாகப் போக்கிடவும்,*



*பொது வாழ்விலே தூய்மையைக் கொண்டுவரவும் எடுத்திருக்கக்கூடிய இந்த நடவடிக்கையை, இந்த முன் முயற்சியை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இதிலேயும் ஒரு சிக்கல் இருக்கிறது. எப்படி ஏலத்திலே சிண்டிகேட் அமைத்துக் கொள்கிறார்களோ, அதேபோல் டெண்டர் எடுப்பதிலேயும் சிண்டிகேட் அமைத்துக் கொள்ளக்கூடிய நடைமுறைகள் எல்லாம் தற்போது இருந்து வருகின்றன. எனவே, டெண்டர் பதிவு செய்திருக்கக்கூடிய அந்த ஒப்பந்ததாரர்களுக்கு மட்டுமல்லாமல், பொதுவாக எல்லோருக்கும் தெரியக்கூடிய வகையிலே எல்லாப் பத்திரிகைகளிலேயும் விளம்பரம் கொடுப்பது என்பதுதான் சரியாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அது சிறிய அளவிலே இருந்தாலும், பெரிய அளவிலே இருந்தாலும் வழக்கமாக ஒரு பகுதியிலே 20 இலட்சம் ரூபாய், 30 இலட்சம் ரூபாய், 40 இலட்சம் ரூபாய் என்று ஏ, பி, சி என்று ஒதுக்கியிருக்கக்கூடிய அந்த ஒப்பந்ததாரர்களுக்கு மட்டும் தகவல் கொடுக்காமல் ஒட்டுமொத்தமாக.... (குறுக்கீடு)*

*முற்பகல் 11–05*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தினுடைய முக்கிய அம்சமாக ஒப்பந்தப்புள்ளிகளில் வெளிப்படையான தன்மையைக் கொண்டு வரும் இச்சட்டம் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முதன்முதலாக இயற்றப்படுகிறது. மற்றொன்று, இதுவரை ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள் செய்தித்தாள்களில் மாத்திரம் வெளியிடப்பட்டு வந்தன. ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்களை செய்தித்தாள்களில் மாத்திரமல்லாமல், 'ஒப்பந்தப்புள்ளி செய்தி வெளியீடு' என்ற ஒரு தனி வெளியீட்டிலும் மாவட்ட அளவில், மாநில அளவில் வெளியிடவும் இந்தச் சட்டம் வகை செய்கிறது என்பதை டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதை நான் வரவேற்கிறேன். மேலும் எல்லா பத்திரிகைகளிலும், சிறிய பத்திரிகையானாலும், பெரிய பத்திரிகையானாலும், அதை விளம்பரமாக அல்லாமல் தொடர்ச்சியாக செய்தியாகக்கூட அளிப்பதன் மூலமாக எல்லோருக்கும் படிப்பதற்கு*

வாய்ப்பு இருக்கும். விளம்பரம் என்பதைப் பொதுவாக மக்கள் படிக்காமலேயே தள்ளிவிட வாய்ப்பு இருக்கிறது. செய்தியாக இருப்பதன் மூலமாக இன்னும் கொஞ்சம் அதிகமாகக் கவனம் செலுத்த வாய்ப்பிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே இன்னொரு கருத்து. முக்கியமாக, இதுபோன்ற டெண்டர்களில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், வசதியின்மை காரணமாக அதிகமாகப் பங்கேற்க முடிவது கிடையாது. தொழில் ரீதியாக முன்னேற வேண்டும், வியாபார ரீதியாக முன்னேற வேண்டும் என்ற நோக்கத்தோடு விரும்பக் கூடியவர்கள், பெரிய வசதி படைத்தவர்களோடு போட்டியிட முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, ஒருசில பகுதிகளிலேயாவது இந்தக் குறிப்பிட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், மிக, மிக பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அதிலே முன்னேறி வருவதற்கு--இதுபோன்ற வேலைவாய்ப்புகளை உருவாக்கக்கூடிய அந்தப் பகுதியிலே--முன்னேறிச் செல்வதற்கேற்ப ஒதுக்கீடு செய்ய வேண்டும். அதற்கு தகுந்த நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுக்கு லாபம் ஈட்டுகின்ற முறையிலே இந்தச் சட்டம் அமைந்திருக்கிறது. இருந்தாலும்கூட, இந்த டெண்டர் எடுக்கின்ற நேரத்திலே வலுவானவர்கள் சிலபேர் தங்களுடைய அடியாட்களையெல்லாம் பயன்படுத்திக்கொண்டு, பலம் இல்லாதவர்கள் டெண்டர் எடுக்க முடியாத அளவிற்கு சில ஆக்கிரமிப்புத் தன்மையை அங்கே ஏற்படுத்துகின்றார்கள். இதை அரசு கவனத்தில் கொண்டு, ஆள் இல்லாத அளவிற்கு நல்லமுறையிலே வேலைகளைச் செய்து கொடுக்கின்ற ஒப்பந்ததாரர்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்துகின்ற வகையிலே அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பைக் கொடுப்பது என்பது அந்தத் துறைகளிலே சிறப்பாக வேலைகளை எடுத்துச் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும். மேலும் பொதுப் பணித் துறையின் மூலமாகச் செய்கின்ற பணிகளை அந்தந்த ஆயக்கட்டுதாரர்களே எடுத்துச் செய்தால்-தங்களுக்கென்று உறுதுணையாக இருக்கின்ற வேலை



என்கின்ற காரணத்தினால், அது தங்களுக்குப் பயன்படுகின்ற வேலை என்கின்ற காரணத்தினால்--அவர்கள் கவனத்தோடு செய்வார்கள் என்ற ஒரு நிலையையும் அரசு கவனத்தில் கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்கிறேன். நேற்றைக்குப் பல்வேறு வரிச் சலுகைகளை நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். நான்கூட ஒரு வரிச் சலுகையைக் கோர வேண்டுமென்று எழுகின்ற நேரத்திலே தாங்கள் அதைத் தடுத்து விட்டீர்கள். இன்றைக்கு இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அன்றாடம் பொது மக்கள் உபயோகிக்கின்ற பருப்பு வகைகளுக்கு வரிவிலக்கு அளித்திருக்கிறார்கள். அந்தவகையிலே, மொச்சைப் பயிர், தட்டைப் பயிர் என்று எங்களது தென் மாவட்டங்களிலே இருக்கின்றன. (குறுக்கீடு) இதைச் சொல்ல வேண்டிய அவசியம் நேற்றுத்தான் எனக்கு ஏற்பட்டது. இந்தச் சட்டத்தைப் பற்றியும் பேசிவிட்டு, இதையும் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்தப் பயிறு வகைகள் எங்கள் மாவட்டங்களிலே புஞ்சையிலே நிறைவாகப் பயிர் ஆகின்ற வகைகள், அங்கிருக்கின்ற ஏழை மக்கள் தங்களுடைய குடும்ப விசேஷங்களுக்கு......(குறுக்கீடு)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனுபவம் வாய்ந்த ஓர் உறுப்பினரே இப்படிக் கோடு தாண்டி, பிரச்சினையைப் பேசினால், புதியதாக வந்துள்ள உறுப்பினர்களும் இதைப் பின்பற்றத் தலைப்பட்டு விடுவார்கள். கேட்டால், தடுத்தால், திரு. சந்தானத்திற்கு மாத்திரம் தந்தீர்களே, எங்களுக்கும் இடம் தரக்கூடாதா? என்று பல பேர் கேட்பார்கள். எனவே, திரு. சந்தானம் அவர்கள் வேறு பிரச்சினையைப் பற்றிப் பேச வேண்டும், இந்த பில்லைப் பொறுத்தவரையில்.

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது ஒப்பந்தப்புள்ளியைப் பற்றியதுதான். டெண்டர் முறையிலே மொச்சைப்பயிறு, தட்டைப் பயிறு எல்லாம் வாங்கலாம். ஆகவே, அப்படி வாங்கக்கூடிய பொருட்களுக்கு வரிச்சலுகை கேட்கிறாரோ என்னமோ எனக்குத் தெரியவில்லை.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படி அவர் பேசுவதற்கு உங்களுக்குள்ளே ஓர் ஒப்பந்தம் இருப்பது எனக்குத் தெரியாது. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தின் மூலமாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகின்றபோது காலதாமதம் என்பது சில நேரங்களிலே ஒரு மாதம், அதற்கும் மேலே 2 மாதம், 3 மாதம் என்று போய் விடுவதால் நாம் எடுத்துக்கொள்ளும் வேலை குறிப்பிட்ட காலத்தில் முடிவது இல்லை. தவிர 3 மாதம் தாண்டுகின்றபோது அதில் பயன்படுத்துகின்ற பொருட்களுடைய விலை ஏறிவிடுகிறது. அதனால் அரசுக்கு ஒரு பக்கத்தில் நஷ்டம் வருகிறது. இல்லையென்றால் அந்தப் பணி என்பது, வேலை என்பது, தரமற்றதாகப் போய்விடுகிறது. ஆகவே, இந்த ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகின்றபோதே கறாராக ஒரு மாதத்திற்குள் முடித்துக்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா? அதைக்கூட இதிலே சேர்த்துக் கொள்ளுவது பொருத்தமாக இருக்கும் என்று சொல்லி முடிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒளிவின்மை டெண்டர் முறையிலே-- திறந்த முறை டெண்டர் முறையிலே--இருக்கக்கூடிய இந்தச் சிறப்பான முறையை நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இதிலே குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் குறிப்பிட்டதைப்போல மிகப் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களும் இந்த டெண்டர் முறையிலே பங்கு பெறக்கூடிய அளவுக்கு தனி இட ஒதுக்கீட்டு முறையைப் பின்பற்ற வேண்டியது அவசியம் என்பதை நான் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் காலம் கடத்தி வேலைகளை சில நேரங்களில் செய்வதனால் அந்தந்த ஆண்டு முடிவிற்குள்ளாக, சில நேரங்களில் முழுத் தொகையையும் செலவிட முடியாமல் போகின்ற சூழ்நிலை இருக்கிறது. எனவே, ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குள்ளாக



அந்தத் திட்டங்களைத் தொடங்குவதற்கு ஏற்ப டெண்டர் முறையை அமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஒப்பந்தப்புள்ளி கோருவதிலே ஒளிவுமறைவு இல்லாத ஒரு முறை இந்த சட்டத் திருத்தத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. இதற்குக்கூட சற்று கால அவகாசம் நீட்டித்துக் கொடுக்க வேண்டும். விண்ணப்ப ஒப்பந்தப்புள்ளி கோருகின்ற நாட்கள் முதற்கொண்டு குறிப்பிட்ட கால அவகாசம் இருந்தால்தான் ஒப்பந்ததாரர்கள் எல்லாம் பங்கு ஏற்பதற்கு வாய்ப்பாக இருக்கும். அதே நேரத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி வேலைகள் எல்லாம் முடிக்கப்பட்ட பிறகு, அதன் தரக் கட்டுப்பாடு சரியாக இருக்கிறதா என்பதை ஆராய்வதற்கு குவாலிட்டி கன்ட்ரோல் என்ற ஓர் அமைப்பைக்கூட கொண்டுவருவது சாத்தியமாக இருக்கும். அதற்கு 5 சதவிகிதம் செலவிடுவதற்குக் கூட அரசு முன்வரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டதா, யாருடைய ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டிருக்கிறது என்பதை எல்லாம்கூட வெளியிட வேண்டும். இவர்களுடைய ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது; இவர்களுடைய ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்படவில்லை; என்ன காரணத்திற்காக ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது போன்ற.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பில்லைப் படித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். காரணம் அதிலே ரொம்ப க்ளியராகப் போட்டிருக்கிறோம். எந்தெந்த ஒப்பந்தப்புள்ளிகளைப் பெற்றிருக்கிறார்கள்; பெற்றதில் எந்தெந்த ஒப்பந்தபுள்ளிகளை ஏற்றுக்கொண்டார்கள்; ஏற்றுக் கொள்வதற்கான காரணம் என்னென்ன, மறறவர்களுடையதை ஏன் ஏற்கவில்லை; அவற்றை ஏற்காததற்கான காரணங்கள் என்ன என்பதை எல்லாம் தெளிவாக அந்த புல்லட்டீனில் நாங்கள் அறிவிப்போம் என்று குறிப்பிட்டிருக்கிறோம்.

[1998 மே 29

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. பில்லில் இருக்கிறது. அதைப் படித்தேன். இருந்தாலும் கூட இந்தக் கால அவகாசம் நீட்டித்துக் கொடுப்பது என்பது அங்கே குறிப்பிடப்படவில்லை. அதிலே 15 நாட்கள் என்று சொன்னால் இன்னும் 5 நாட்களைக் கூட்டிக் கொடுத்தால் பொருத்தமாக இருக்கும். விளம்பரத்தை 4 நாட்கள், 10 நாட்கள் முன்னால் வெளியிடாமல் அதை 15 நாட்கள் முன்னதாகச் செய்தால் ஒப்பந்ததாரர்கள் பங்குகொள்வதற்கு வாய்ப்பு இருக்கும். அந்த அளவில் இந்தக் கால அவகாசம் நீட்டித்துக் கொடுக்க வேண்டும். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னதுபோல இதிலே தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் பங்கு ஏற்கக்கூடிய அளவுக்கு அவர்களுக்கு இட ஒதுக்கீட்டு முறையைக் கொண்டு வருவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டு, அமைகிறேன்.

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சரவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த டெண்டர் விடுவதில்--ஒப்பந்தப்புள்ளி கோருவதில் இட ஒதுக்கீட்டு முறையைக் கொண்டு வர வேண்டும் என்று டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும் சொன்னார்கள், திரு. மணி அவர்களும் சொல்கிறார்கள். எப்படி முடியும்? அதற்கான ஒரு சட்ட வரைவை அவர்கள் தருவார்களேயானால்--மாநில அளவிலே அல்ல--மத்திய அரசிலே வைத்துத்தான் அதைச் செய்ய முடியும். இப்பொழுது அதற்கு வாய்ப்பாக நம்முடைய பா.ம.க.வினுடைய தலைவர்களிலே ஒருவர் மத்தியிலே அமைச்சராக இருக்கிறார். நம்முடைய மணி அவர்களுடைய இந்தக் கோரிக்கையை ஏற்று, இந்தச் சூழ்நிலையில் இப்படி ஒரு பில்லை அங்கே பாஸ் செய்து அனுப்புவாரேயானால், அதைக் கடைப்பிடிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன். (குறுக்கீடு) டாக்டர் க. கிருஷ்ணசாமி, என்ன சொல்லப்போகிறீர்கள்?



1998 மே 29]

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதாவது, மொத்தமாக தாழ்த்தப்பட்ட, மிகமிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இதுமாதிரி டெண்டரிலே பங்கேற்க முடிவது இல்லை. மத்திய அரசு இதுபோன்ற சட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்பு, மாநில அரசுக்கு இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதுதான், ஒரு "மாதிரி சட்ட வரைவு" தயார் பண்ணிக்கொடுங்கள் என்று கேட்கிறார்கள் முதலமைச்சர் அவர்கள். உட்காருங்கள். திரு. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒப்பந்த முறையிலே ஒளிவுமறைவின்றி ஏலம் போவதற்காக இந்தச் சட்டத்தை அரசு தாக்கல் செய்திருக்கிறது. உண்மையிலேயே இது இந்த அரசின் மகத்தான சாதனையாகும். ஏனென்றால் கடந்த காலங்களிலே ஒப்பந்தத்தை வைத்துத்தான் அரசியல் நடத்த வேண்டும் என்று இருந்த சூழ்நிலையை மாற்றி, டெண்டரிலே ட்ரான்ஸ்பரன்சி என்ற நிலையை ஏற்படுத்தியிருப்பதை நான் இந்திய தேசிய லீகின் சார்பாக வரவேற்கிறேன்.

அதே நேரத்திலே இதில் மேலும் சில ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நெடுஞ்சாலைத் துறையிலே 'turn key basis' என்ற முறையிலே ஒரு திட்டத்தை வைத்துச் செயல்படுத்தி வருகின்றார்கள். அதைப்போல பெரிய ஒப்பந்தக் கட்டுமானப் பணியாளர்களைக் கொண்டு இன்னும் சிறப்பாகத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு இந்த அரசு வழிவகை செய்ய வேண்டும்.

அதுபோல, ஒரு வேலையைச் செய்வதற்கு ஒப்பந்தக்காரர்களே மதிப்பீடு செய்து வழங்கினால் அது நல்லதாக இருக்கும். ஏனென்றால், எந்த இடத்திலே அவர்கள் வேலை செய்ய வேண்டுமென்று தெரியாத நிலையிலே, அரசு வெளியிடுகின்ற விளம்பரத்தைக் கொண்டு, அவர்கள் ஒப்பந்தத்தைத் தயாரித்துக் கொண்டு வந்து கொடுத்து, ஏதோ ஏனோதானோ என்று வேலை செய்கிறார்கள். அவர்களே மதிப்பீடு செய்து வழங்கினால் அரசு அதிலே எந்த மதிப்பீடு குறைந்திருக்கிறதோ அதற்கு வேலை வழங்குவது நயம்பட இருக்கும். ஆகவே, அதையும் இந்த அரசு

ஏற்று தக்க மாற்றத்தைச் செய்ய வேண்டும். அதையும் இந்த அரசின் சாதனைகளில் ஒன்றாக ஏற்றுக் கொண்டு செயல்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு, நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரசு கொள்முதலில் ஒளிவுமறைவின்றிச் செயல்படுவதற்கும், ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்று ஏற்றுக்கொள்வதை முறைப்படுத்துவதற்கும், கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய இந்தச் சட்டமுன்வடிவைத் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாம் சட்டத்தை இயற்றுகிறோம். அதைச் சட்டமாக்கிய பின்னால், அதைச் செயல்படுத்துகிறோமா என்று பார்த்தால் இல்லை என்பதை நாம் நிச்சயமாக ஒப்புக்கொண்டேயாக வேண்டும்.

இப்பொழுதுகூட மாண்புமிகு முதல்வரவர்கள் சுதந்திரமான ஒரு ஏலமுறை மதுக்கடை ஏலத்திலே நிச்சயமாக நடத்தப்படும் என்று சொன்னார்கள். ஆனால் எது ட்ரான்ஸ்பரென்டாக இருந்தது என்று சொன்னால், ஒரு கூட்டணியை, சிண்டிகேட்டை வைத்துக்கொண்டு சிலபேர் அதிலே கொள்ளையடித்து கோடீஸ்வரர்களானார்கள் என்பதுதான் அங்கே ட்ரான்ஸ்பரென்டாகத் தெரிந்தேயொழிய சுதந்திரமாக ஏலம் எடுத்தார்களா என்பது உண்மையாகத் தெரியவில்லை. ஆகவே, அரசாங்கம் சொல்வது ஒன்று, செய்வது ஒன்றாக இருக்குமேயானால், நாம் அறிவிக்கக்கூடிய திட்டங்களிலே மக்களுக்கு நம்பிக்கையே சத்தியமாக வராது. ஆகவே, நான் .... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் ஒரு அப்செட் பிரைஸ் என்று நிர்ணயிக்கின்றது. அதற்குமேலே ஒரு 10 சதவீதம் அரசு எதிர்பார்க்கிறது. அதற்குக் குறைவாக இருந்தால் மறுபடியும் ரீடெண்டர் நாம் வைக்கிறோம். இப்படித்தான் வைக்க முடியும். 200, 220 கோடி ரூபாய் இருந்த வருமானத்தை 500 கோடி ரூபாய் அளவிற்கு இன்றையதினம் உயர்த்தியிருப்பதை மாண்புமிகு உறுப்பினர் குறை சொல்கிறார். இதிலே என்ன ஒளிவுமறைவு? எனவே, எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்திலே ஏலத்தின் மூலமாக வருவாயை எப்படி ஈட்ட முடியுமோ அந்த அளவிற்கு முயற்சி செய்து ஈட்டியிருக்கிறார்கள். அதற்கு வேறு கருத்துக்கள் சொன்னால் உதவியாக இருக்குமே தவிர, எடுத்ததெற்கெல்லாம் குறை சொன்னால் அதற்குப் பிறகு எந்தக் காரியமும் நடக்காது.





**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நீங்கள் ஒரு குறுந் தொகை வைத்துவிட்டு அதிலே 10 சதவீதம், 5 சதவீதம் வந்தால் போதும் என்று சொல்கிறீர்கள். ஆனால் அது சுதந்திரமான ஏலத்திற்குப் பொருள் அல்ல. உண்மையிலேயே நீங்கள் சொல்வது அங்கே நடக்கிறதா என்று பார்க்க வேண்டும். நீங்கள் 500 கோடி ரூபாய் அரசுக்கு வருவாய் கொண்டு வந்திருக்கிறீர்கள், பாராட்டுகிறேன். அதையே 1000 கோடியாய்க் கொண்டு வந்திருந்தால் இன்னும் பாராட்டியிருப்போம். ஆனால் உண்மையிலேயே நடப்பது என்ன?

முற்பகல் 11-20

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, தவறு நடந்த இடங்களைச் சுட்டிக்காட்டி நம்முடைய திரு. ஞானசேகரன் அவர்கள் அந்தப் பட்டியலைத் தருவாரேயானால், நான் இந்த மாமன்றத்திலே உறுதியளிக்கின்றேன்-- அந்த இடங்களைப் பற்றி ஆராய்ந்து, பரிசீலித்து மறு ஏலத்திற்கு விடத் தயாராக இருக்கின்றேன். சென்னையிலேகூட, அப்படி இரண்டு, மூன்று இடங்களை திரு. ஞானசேகரன் குறிப்பிட்டுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே எல்லா இடங்களிலும் இருக்கிறது. உங்களுக்கு என்று அரசாங்கம் இருக்கிறது. ஒரு நிருவாகம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் சொல்கிறீர்கள். குறிப்பிட்டுச் சொல்லுங்கள் என்று கேட்கிறார்கள். நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக இருக்கும். இல்லையென்றால் நீங்கள் அடுத்த சப்ஜெக்டுக்கு வாருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்டு என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதே அவையிலே தெரிவித்தபோது, இதிலேகூட கூட்டணி இருக்கிறது என்பதை அவர்களே தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். ஏதோ நான் இல்லாத ஒன்றைச் சொல்வதாக அல்லது உண்மைக்குப் புறம்பான செய்தியைச் சொல்வதாக அர்த்தமல்ல. எல்லா பத்திரிகைகளும் எழுதுகின்றன.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டணி இருந்து அவர்கள் ஜெயித்துவிட்டால், இது தவறான கூட்டணி, ஆகவே, தேர்தல் செல்லாது என்று எந்தத் தேர்தல் கமிஷனும் சொல்ல முடியாது. இப்போதுகூட கூட்டணி இருந்து பாரதிய ஜனதா கட்சி மத்திய அரசிலே ஆட்சிக்கு வந்திருக்கிறது. இது தவறான கூட்டணி, ஆகவே இந்த ஆட்சி செல்லாது என்று யாரும் சொல்ல முடியாது. ஏதோ கூட்டணி இருந்திருக்கிறது. எங்கள் ஆள், உங்கள் ஆள் எல்லோரும் இருந்திருக்கிறார்கள. அது வேறு விஷயம். அதனால், அந்தக் கூட்டணியால் எங்கே லாஸ் ஏற்பட்டது, எவ்வளவு லாஸ் சர்க்காருக்கு ஏற்பட்டது என்பதை நீங்கள் சொன்னால், அந்த இடத்தில் மறு ஏலம் வைக்கத் தயார்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம்--இதுபோன்ற ஒரு சட்டத்தை--ஏற்கெனவே, நீங்கள் சொன்னீர்கள், சுதந்திரமான ஏலம் என்று. இதிலேகூட, சுதந்திரமாக, 'ட்ரான்ஸ்பரென்ட்டாக' கொண்டு வருகிறோம் என்று சொல்கிறீர்கள். ஆனால், ஒவ்வொரு டெண்டர் நடக்கிறபோதும் 'சுமோவிலே' வந்து இறங்குகிறார்கள். பெட்டியை வைத்துக்கொள்கிறார்கள். வெளியிலே பேசி முடித்துக்கொண்டு, டெண்டர் போடுகின்ற ஒரு சிலர்தான் உள்ளே போய் போடுகிறார்கள். இதில் சுதந்திரமாக எல்லா கான்ட்ராக்டர்களும் செயல்படக்கூடிய ஒரு நிலையை நீங்கள் தமிழகத்திலே உருவாக்கித் தர வேண்டும். நாம் அதைவிட்டு.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. சி. ஞானசேகரன்:** பேசி முடித்துவிடுகிறேன், இல்லையென்றால் வேண்டாம், விட்டுவிடுங்கள்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒளிவுமறைவு இன்றி ஒப்பந்தப்புள்ளி கோருகின்ற சட்டமுன்வடிவை நான் வரவேற்கிறேன். அதிலே சில விளக்கங்களை மட்டும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒப்பந்தப்புள்ளி கோரக்கூடியவர்கள் பலபேர் ஒப்பந்தத்திற்காக அவர்களுடைய மனுக்களைத் தாக்கல் செய்கிறார்கள். அந்த டெண்டர்களைப் பார்த்து, இவர்கள்தான் ஒப்பந்தத்திற்குத் தகுதியானவர்கள் என்று அலுவலர்கள் அறிவிப்பு வெளியிடுகின்றபோது மற்றவர்கள் அதிலே சந்தேகம் இருக்கிறது, தாங்கள் போட்ட ஒப்பந்தப்புள்ளி தங்களுக்குக் கிடைக்கவில்லை என்று புகார் செய்ய முன்வருவார்கள். சிலர் ஒப்பந்தப்புள்ளி கிடைத்தவுடன் தங்களுடைய பணிகளை, வேலைகளைத் தொடங்கிவிடுவார்கள். கிடைக்காதவர்கள், நியாயமாகத் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய வேலை கிடைக்கவில்லை, ஒப்பந்தத்தில் போட்டியின் காரணமாக வேலை கிடைக்கவில்லை என்பதற்காக மேல்முறையீடு செய்வதற்கு இந்தச் சட்டத்திலே வகை செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக ஒரு மாத கால அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஒரு மாத கால அவகாசம் என்பது தேவைதானா? இதை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும். மேலும் அவற்றைப் பரிசீலனை செய்வதற்கு ஒரு மாத கால அவகாசம் கொடுக்கப்படுகிறது. அதிலேயுள்ள ஆதாரங்களைத் திரட்டுவதற்கு இன்னொரு மாத கால அவகாசம் கொடுக்கப்படுகிறது. இப்படி இரண்டு மாத கால அவகாசம் தேவைதானா? நாம் நினைக்கின்றபடி இந்த ஒப்பந்தங்கள், வேலைகள், திட்டங்கள் நிறைவேற்றப்படுமா? அடுத்து ஒர்க் ஆர்டர் கொடுப்பதற்கு ஒரு மாதம் இப்படி இதிலேயே மூன்று மாத காலங்கள் கடந்துவிடுகின்றன. மாதந்தோறும் பொருள்களுடைய விலை கூடுகின்ற, குறைகின்ற இந்த நேரத்தில், இதுபோன்று செய்கிறபோது, அந்த வேலை, திட்டம் என்பது குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றப்பட முடியாத அளவுக்கு ஒரு சிக்கல் இருக்கிற காரணத்தினால் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, இதை உடனடியாக, 10 அல்லது 15 நாட்கள் என்று வரைமுறைக்குள் கொண்டு வர வேண்டும்.

அதேபோல, இந்த ஒப்பந்தங்களைப் பெறக்கூடிய அதிகாரிகள் ஒரு கால நிர்ணயத்திற்குள்ளாக அந்தப் பணிகளை முடிக்க வேண்டுமென்று சொல்ல வேண்டும். வேலையை முடிப்பதற்கு ஒப்பந்தகாரர்கள் அரசாங்கத்திடமிருந்து கம்பி, சிமெண்ட் போன்ற பொருள்களை அதிகமாக எடுத்துச் செல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதற்குப் பின்னால், வேலை செய்யவில்லை என்பதற்காகப் பல்வேறு நோட்டீஸ்கள், அபராத நோட்டீஸ், கண்டன அறிக்கைகள் விடுகிற முறை தற்போதுள்ள சட்டத்திலே இருக்கிறது. அதை மாற்றுகின்ற வகையில் இந்தச் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டமுன்வடிவின் ஆய்வில் கலந்துகொண்டு மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திரு. மணி அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. தீரன் அவர்கள், மாண்புமிகு பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் திரு. மணி அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. நிஜாமுதீன் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் ஆகியோர் தங்கள் கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள்.

*முற்பகல் 11-25*

மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இப்படிப்பட்ட ஒரு சட்டம் கிடையாது. அப்படிப்பட்ட ஒரு சட்டத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். 'செயற்கரிய செய்வார் பெரியோர்' என்பதைப்போல மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதைச் செய்தாலும், அது செயற்கரிய காரியமாகத்தான் இருக்கும். உங்களுக்குத் தெரியும், ஆகஸ்ட் 15-லே, கோட்டையிலே கொடியேற்றுகிற உரிமையை இந்தியாவிற்கே வழிகாட்டியாக அவர்கள் பெற்றுக்கொடுத்தார்கள். அதேபோல், மே தினத்திற்கு, சம்பளத்துடன் விடுமுறை விடுகிற செய்கையிலும்





நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இந்தியாவிற்கு வழிகாட்டியாக இருந்தார்கள். இந்தியாவிலே முதன்முதலாக விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை வழங்கியவரும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், பெண்களுக்குச் சொத்திலே சமபங்கு உண்டு என்ற சட்டத்தை இயற்றியும், குடிசை மாற்று வாரியம் அமைத்தும், கைரிக்ஷாக்களை முழுக்கமுழுக்க ஒழித்தும்-- இப்படிப்பட்ட அரிய, பெரிய காரியங்களையெல்லாம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட சாதனைகளிலே ஒன்றாக, இன்றைக்கு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். காரணம், சென்ற ஆட்சிக்காலத்தில் ஒப்பந்தம் என்பது, ஒப்பந்தப்புள்ளி கோருவது என்பது ஒரு சடங்காகப் போய்விட்டது. கோட்டைக்கு வருவார்கள், இருக்கிற இரண்டு முத்துக்களைப் பார்ப்பார்கள். அவர்களிடத்திலே தரவேண்டியது தரப்படும். பிறகு, கீழே இருக்கின்றவர்கள், ஷெட்யூலைத் தருவதற்கு, 'கே'-க்கு தரலாமா என்று கேட்டால், 'கே' ஒருவர்தான் ஷெட்யூலே வாங்குவார். அவருக்குப் பினாமியாக இன்னொருவர் வாங்கிக்கொள்வார். ஆக, 45 பர்சன்ட், 50 பர்சன்ட், 65, 70 பர்சன்ட்கூட அதிகமாகப் போட்டுக் கொள்ளை அடித்தார்கள். ஆனால், வேலையே நடக்கவில்லை. அப்படி வேலை நடக்காததைப் பற்றி எதிர்த்துக் கேட்ட இன்ஜினியர் புலிப்பாண்டியனைக் கொன்றே விட்டார்கள். இவ்வகையில் கிட்டத்தட்ட 20 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட தொகை குறித்து இன்றைக்கு விஜிலென்ஸ்-லே வழக்கு நடந்துகொண்டிருக்கிறது. இது, அங்கெங்கெனாதபடி எங்கும் நீக்கமற எல்லாத் துறைகளிலேயும் நிறைந்து போய், புரையோடிப் போயிருந்த ஒன்று.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய தலைமையிலே ஏற்பட்டபோது, அவர்கள் எப்படியும் இவற்றை மாற்றியமைக்க வேண்டும் என்று சொன்னார்கள். சொல்வதைச் செய்யக்கூடியவர்; செய்யக் கூடியதையும் சொல்லக் கூடியவர். இதுதான் மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய அரசியல் தாரக மந்திரம். (மேசையைத் தட்டும் ஒலி)

1997-98 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் படிக்கிறபோது சொன்னார்கள், "ஒப்பந்தப்புள்ளி (டெண்டர்) நடைமுறையில் நிர்வாகம் தலையிட்டு

[திரு. துரைமுருகன்] [1998 மே 29

அதன் அடிப்படை செயலமைப்பையே சட்டமன்றத்தின் ஒப்புதலின்றி மாற்றிய முந்தைய ஆட்சியின் முறைகேடுகள் இனி நடைபெறாமலிருக்க, ஒப்பந்தப்புள்ளி வழங்குவதில் ஒளிவு மறைவில்லாத, நேர்மையான வழிமுறைகளைக் கையாளுவதற்கு ஒரு சட்டமியற்றப்படும். கடந்தகால நிகழ்ச்சிகளால் அரசின் ஒப்பந்த நடைமுறையின்மீதே நம்பிக்கை இழந்திருந்த மக்களிடையே, இச்சட்டத்தால் மீண்டும் நம்பிக்கை உதயமாகும்'' என்று சொன்னார்கள். இதைக் குறிப்பிட்டுவிட்டதோடு மட்டுமல்லாமல் அதைத் தொடர வேண்டும் என்பதுதான் மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய சித்தாந்தங்கள். எனவேதான், உடனடியாக இந்தச் சட்டத்தை, நம்முடைய மத்திய அரசுக்கு அனுப்பி, அவர்களுடைய ஒப்புதலையும் பெற்று, இன்றைக்கு இந்தச் சட்டம் நிறைவேறுவதற்காக இந்த மாமன்றத்திற்கு வந்திருக்கிறது. இந்தச் சட்டம் இயற்றுவதற்கான முக்கிய காரணங்களைப்பற்றி நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். என்ன சுட்டிக் காட்டினார்கள் என்றால், யாருக்கு இந்த ஒப்பந்தபுள்ளி, என்றைக்கு வழங்கப்படுகிறது என்ன வேலைக்கு வழங்கப்படுகிறது, என்ற விவரமே யாருக்கும் தெரியாது. யாரோ இரண்டொருவருக்கு மட்டும்தான், 'வல்லவன் வகுத்ததே வாய்க்கால்' என்பதைப்போல், கொடுத்தவனுக்கு மட்டும்தான் டெண்டர் கிடைக்கும் என்ற நிலைமை ஒரு காலத்திலே இருந்தது. அவற்றை இது மாற்றியமைக்கிறது. ஒப்பந்தப்புள்ளிகளை கடைசியிலே ஆய்வு செய்து, முடிவு செய்வதிலேயும் பலவிதமான முறைகேடுகள் இருந்தன. அவற்றையும் மாற்றியமைப்பதற்காகவும் இந்தச் சட்டத்திலே வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தினுடைய நோக்கங்கள், அரசு கொள்முதல் தொடர்பான ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரங்கள் அனைத்தையும் தெரிந்துகொள்ளும் வகையில், பகிரங்கமாக விளம்பரங்கள் செய்தல், கொள்முதல் ஒப்பந்தப் புள்ளிகளில் அதிக அளவில் ஒப்பந்தப்புள்ளியார்களைப் பங்கேற்கச்செய்து, குறைந்த விலையில் தரமான பொருட்களை மற்றும் பணிகளைப் பெற வழிவகை செய்தல். ஒப்பந்தப்புள்ளியாளர்கள் அனைவரையும் நேர்மையாகவும், நியாயமாகவும், பாகுபாடின்றி நடத்த வழிவகை செய்தல், ஒப்பந்தப்புள்ளிகளைப் பரிசீலனை செய்வதில் வெளிப்படையான நடவடிக்கைக்கு வகை செய்வதன் மூலமாக, முறைகேடுகள், குறுக்கீடுகள், ஊழல் ஆகியவற்றைத் தடுக்க இது வகை செய்கிறது. இந்தச் சட்டத்தினுடைய நோக்கம் இதுதான். எனவே, யார்



1998 மே 29] [திரு. துரைமுருகன்]

வேண்டுமானாலும்--தகுதி உடையவர்கள்-ஒப்பந்தப்புள்ளியைப் போட்டாலும் நியாயமாக அவர்களுக்குக் கிடைக்க வேண்டியது கிடைக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய முக்கியமான குறிக்கோள். இதை இன்றைக்கு மக்கள் வரவேற்றிருக்கிறார்கள்.

காலையிலே வந்துள்ள 'இந்து' பத்திரிகையிலே இந்தச் சட்டத்தைப் பற்றி ஒரு 'write-up' வந்திருக்கிறது. "Many attractive proposals in Bill for transparency in tenders"-- என்று இதைப்பற்றி எழுதியிருக்கிறார்கள். எனவே, நாட்டு மக்களால் வரவேற்கப்படுகிற ஒரு சட்டத்தைப்பற்றி இந்த அவையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் விவாதத்தின்போது சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தீரன் அவர்களும், திரு. பழனிசாமி அவர்களும் ஒரு கருத்தைச் சொன்னார்கள். சில நேரங்களில் காலதாமதம் ஏற்பட்டு விடுகிறது, அவற்றையெல்லாம் குறைக்க வேண்டும், விரைவாக ஒப்பந்தப் புள்ளிகளை விட்டு, விரைவாகப் பணிகளை நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். இதிலே எனக்கு மாறுபட்ட கருத்து கிடையாது. மாண்புமிகு முதலமைச்சருடைய நிதிநிலை உரையை நீங்கள் படித்துப் பார்த்தால், எந்த ஒரு திட்டத்தை அவர் அறிவித்திருந்தாலும், அந்தத் திட்டத்தை அறிவிக்கிறபோதே, அதன் உடனேயே ஒரு வரியைச் சேர்த்திருப்பார்கள். இது 3 ஆண்டு காலத்திற்குள் முடிக்கப்படும் என்று தெரிவித்திருப்பார்கள். இந்தக் காலத்திற்குள் முடிக்கப்படும் என்று தெரிவித்திருப்பார்கள். அதற்கான நடவடிக்கைகளைக் குறித்த காலத்திற்குள் அந்தத் துறை எடுக்க வேண்டுமென்பதற்காகத்தான். இந்தச் சட்டத்திலேகூட ஒருவர் தனக்கு அநீதி இழைக்கப்பட்டதாகக் கருதினால், அவர் மேல்முறையீடாக 30 நாட்களுக்குள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரலாம் என்று விதி இருக்கிறது. அதைத்தான் காலதாமதம் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். தன்னுடைய உரிமையைக் கோரி மேல்முறையீட்டில் வருகிறவர்களுக்கு மேலும் ஒரு 30 நாட்கள் தரலாம் என்ற விதி இருந்தது. இவற்றையெல்லாம் நீக்க வேண்டுமென்று கேட்டார்கள். மாண்புமிகு திரு. தீரன் அவர்களும், திரு. பழனிசாமி அவர்களும் கேட்டார்கள். மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. மணி அவர்களும் கேட்டார்கள். நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறன். நியாயமான கோரிக்கைகள் எந்தத்

திக்கிலிருந்து வந்தாலும், யார் சொன்னாலும் அதை ஏற்றுக்கொள்கிற அரசுதான் கலைஞர் அரசு என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே ஒரு சின்ன திருத்தத்தினை நான் கொண்டு வர விரும்புகிறேன். பிரிவு 11(1)-ஐக் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கலாம் என்ற திருத்தத்தினை மொழிகிறேன்....

*முற்பகல் 11–30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டமுன்வடிவைப் பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும்போது திருத்தத்தினை மொழியலாம்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்து இங்கே எல்லோரும் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்த டெண்டர் அமைப்பிலே சிண்டிகேட் அமைப்பதாகச் சொன்னார்கள். . இதிலே ஒரு வித்தியாசத்தை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். முந்தைய ஆட்சியில் டெண்டர்களே கொடுக்க மாட்டார்கள். ஆனால், இப்போது ஒவ்வொரு திட்டத்திற்கும் 10, 11 அல்லது 20 பேர் டெண்டர் ஷெட்யூல் வாங்குகிறார்கள். அரசினுடைய பணி அதுதான். டெண்டர் ஷெட்யூல்களை வாங்கிப் போகிறவர்கள் தெருக்கோடியிலே, முச்சந்தியிலே, சத்திரத்திலே உட்கார்ந்து கொண்டு இவ்வளவு, அவ்வளவு ப்ணம் என்று பேசிக்கொண்டு, நீ போடாதே, நான் போடாதே என்று ஒரு சிண்டிகேட் அமைத்துச் செய்கிறார்கள். இதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும்? நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். டெண்டர் ஷெட்யூல் கொடுத்த உடன், வாங்கியவர் என்ன செய்கிறார் என்று ஓடிப் போயா பார்க்க முடியும். ஆனால் ஒன்று செய்கிறோம். அவர்கள் சிண்டிகேட் அமைத்து 'ஏ' அல்லது 'பி' டெண்டர் போடலாம், மற்றவர்களெல்லாம் டெண்டர் கொடுக்கக்கூடாது என்று முடிவு செய்தால்--அப்படிச் செய்பவர்கள் 30 சதவீதம், 40 சதவீதம் அதிகமாக டெண்டர் போடுவார்கள்-அதை நாங்கள் ஒத்துக்கொள்வோம் என்று நினைப்பார்கள். ஆனால், அப்படி சிண்டிகேட் அமைத்து யார் அதிகமாக டெண்டர் போட்டாலும், அந்த டெண்ட்ர்களெல்லாம் கேன்சல் செய்யப்பட்டு மறு டெண்டர் வைக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த மன்றத்திற்கு நான்



தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அப்போதுதான் டெண்டர் போட்டவன் அடிவாங்குவான். ஏனென்றால் இவன் மட்டும் டெண்டர் போடுவதற்காக வாங்கியிருப்பான், மற்றவாகளுக்கு எல்லாம் பணத்தைக் கொடுத்து, டெண்டர் போட வேண்டாம் என்று சொல்லியிருப்பான். டெண்டர் கேன்சல் என்று சொன்னவுடன்--இவனிடம் பணம் வாங்கியவன் ஊருக்குப் போய் விடுவான்--இவன் பாதிக்கப்படுவான். உடும்பு பிடிக்கப்போனவன் கையை விட்டு, உடும்பு கிடைக்காவிட்டாலும் கையை விட்டால் போதும் என்ற நிலைமைக்கு இவனும் வந்துவிடுவான்.

சில இடங்களில் நாங்கள் போலீஸ் பாதுகாப்பு தருகிறோம். காவிரி தூர் வாருகிற பணிக்கான டெண்டர் போடும்போது ஒரு பெரிய சதிக் கூட்டமே இப்படிச் செய்தது. மாண்புமிகு அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் இதிலே தலையிட்டு போலீஸ்காரர்களை வைத்துக்கொண்டு, யார் டெண்டர் போட விரும்பினார்களோ அவர்களெல்லாம் பயமின்றி டெண்டர் போட்டார்கள். அவ்வளவு சிறப்பாக யாரும், எந்தக் குறையும் சொல்ல முடியாத அளவுக்கு டெண்டர் முறை செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, ஒரு சட்டம் என்று போடுகிறபோது, அந்தச் சட்டத்தின் இடுக்கிலே சில சமூகவிரோதிகள் நுழைந்துவிடுவார்கள். அதைக் கண்டுபிடித்து மீண்டும் ஒரு சட்டத்தைப் போட வேண்டும். இது வாழையடி வாழையாக வந்து கொண்டிருக்கிறது. ஒரு சட்டத்தின் மூலமாகவே உலகத்தைத் திருத்திவிடலாம் என்றால் அடுத்தடுத்து அமென்ட்மென்ட்ஸ் வராமல் போயிருக்கும். ஆகவே, வரலாற்றுச் சிறப்புமிக்க, இந்த ஒப்பந்தபுள்ளி ஒளிவின்மைச் சட்டத்தை மாண்புமிகு உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் ஆதரித்திருக்கிறார்கள். உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைச் சட்டமாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 10 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 10 முடிய, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 11

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பிரிவு 11, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

**"11 (1) Any tenderer aggrieved by the order passed by the Tender Accepting Authority under Section 10 may appeal to the Government within ten days from the date of receipt of order and the Government shall dispose the appeal within 15 days from the date of receipt,"** என்றும் திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

பிரிவு 11 திருத்தப்பெற்றபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவுகள் 12 முதல் 23 முடிய மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 12 முதல் 23 முடிய மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

**மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.**

[*1998 மே 29*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

*"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/1998) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்"* எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு திருத்தப்பெற்றபடி ஏற்கப்பட்டது.

## (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/1998), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

*"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/1998) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"* எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்தச் சட்டமுன்வடிவும், அடுத்து வரும் 6 சட்டமுன்வடிவுகளும் வரி தொடர்பானவை. எனவே, கருத்துக்களைக் கூற விரும்பும் உறுப்பினர்கள் தங்கள்

@27-5-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



*1998 மே 29*] [பேரவைத் துணைத் தலைவர்]

கருத்துக்களை அவை அனைத்திற்கும் சேர்த்துக் கூறலாம். அதன்பின் சட்டமுன்வடிவுகள் தனித்தனியாக ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்படும். முதலில் திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

முற்பகல் 11-40

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது விற்பனை வரி குறித்த சட்டமுன்வடிவுகளிலே பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக, மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். வருகின்ற ஜூன் 3 ஆம் தேதி, 75-வது வயதை எட்டுகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாகவும், இந்த மாமன்றத்தின் சார்பாகவும், எனது தொகுதி மக்கள் சார்பாகவும், அவர் நீண்ட ஆயுளோடும், எல்லா நலன்களையும் பெற்று, உடல் நலத்தோடு பல்லாண்டு பல்லாண்டு வாழ்க என வாழ்த்தி, இறைவனை வேண்டி, எனது உரையைத் தொடங்குகிறேன்.

குறிப்பாக, இன்றைக்கு இந்தச் சட்டமுன்வடிவிலே பேசக்கூடிய சூழ்நிலையைக் கண்டிப்பாக ஏற்படுத்த வேண்டும் என்று எங்களுடைய கொறடாவை நான் வற்புறுத்திக் கேட்டதற்குக் காரணம், நிதிநிலை அறிக்கையிலேயும், சட்டமுன்வடிவுகள் மூலமாகவும், ஜனநாயகத்தினுடைய பிரதிநிதிகளான சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்கக்கூடிய அத்தனைக்கும் இசைந்து கொடுத்து, வரிகளை எதற்கெல்லாம் நீக்க வேண்டுமென்று கோரிக்கை கொடுத்தார்களோ, அதற்கெல்லாம் முழுமையாக நீக்கி, பொருள்களுக்கு வரிகளை எந்த அளவுக்குக் குறைக்க முடியுமோ, அந்த அளவுக்குக் குறைத்து ரூ. 18 ஆயிரம் கோடியிலே இருந்து, வராத கணக்கிலே ரூ. 4 ஆயிரம் கோடி, ஆக ரூ. 22 ஆயிரம் கோடியை எப்படி ஈடுகட்டப் போகிறார்கள் என்ற சந்தேகம் எங்களைப் போன்றவர்களுக்கு இருந்தாலும்கூட, அதற்கெல்லாம் விளக்கம் அளித்தும், சிறு சேமிப்பு மூலமாகவும், கடந்த காலத்திலே 55 கோடிக்கு ரூபாய்க்கு மேலாக மதுபானத்திலே வராத சூழ்நிலையை மாற்றியமைத்து, அதன்மூலம் பெறக்கூடிய வாய்ப்பு என்று இப்படிப் பல்வேறு சூழ்நிலைகளிலே அந்தச் செலவை ஈடுகட்டக்கூடிய அளவிலே நிலைமைகளை உருவாக்கியிருக்கிறார்கள். இந்த வரிவிலக்கை முழுமையாக இந்த அளவுக்கு மக்களுக்குக் கொடுக்கக்கூடிய இந்தக் காலகட்டத்தில், வியாபாரிகளும், பொதுமக்கள் அத்தனைப் பேரும், இதனைப்

பயன்படுத்தி, அரசு என்ன நினைக்கிறதோ அதை முழுமனதோடு ஏற்று, அதை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு, அது வெற்றி பெறுவதற்கு உறுதுணையாக இருந்தால்தான், அதிலே முழுமையான வெற்றி அடைய முடியும். இந்த மன்றத்தின் சார்பாக நான் கேட்டுக் கொள்வதெல்லாம், ரூ. 75 ஆயிரத்திலிருந்து ரூ. 1½ இலட்சம் வரை பதிவு செய்யாத சூழ்நிலை, அதுபோல கூடுதலான வரியாக ரூ. 25 கோடியிலிருந்து ரூ. 50 கோடி, அதேபோல ரூ. 50 கோடியிலிருந்து ரூ. 100 கோடி, ரூ. 100 கோடியிலிருந்து ரூ. 300 கோடி, ரூ. 300 கோடிக்கு மேலாக 3% என்று பல்வேறு சூழ்நிலைகளில், எந்தெந்த அளவுக்குச் செய்ய முடியுமோ, அந்த அளவுக்குச் சிறப்பாக, வரி விதிப்பிலேயும், கூடுதல் வரி விதிப்பிலேயும் செய்திருக்கிறார்கள். ஒவ்வோர் அங்கமாகப் பேசுவதற்கு நேரம் இல்லை என்றாலும்கூட, தமிழகத்திலே மற்ற மாநிலங்களிலேயிருந்து வருகின்ற வாகனங்களுக்கு விதிக்கப்படுகின்ற வாகன வரியைக் கொண்டு ஈடுகட்டுகின்ற அளவிலேயும், அன்றாடம் மக்களால் உபயோகப்படுத்தும் பொருள்களுக்கு எந்த அளவுக்கு முழுமையாக வரியை நீக்க வேண்டுமோ அந்த அளவுக்கு நீக்கியும், எந்த அளவுக்குக் குறைக்க வேண்டுமோ, அந்த அளவுக்குக் குறைத்தும், சிறப்பாக செய்திருக்கக்கூடிய இந்த விற்பனை வரி சட்டமுன்வடிவின்மீது பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு என்னுடைய மகிழ்ச்சியையும் நன்றியையும் மீண்டும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வரித் திட்டங்களை, இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பாக வரவேற்று, அதிலே என்னுடைய கருத்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். வரி விலக்கு அளித்தும், வரிகளைக் குறைத்தும், வருவாயைப் பெருக்குகின்ற இந்த அரசின் நிலையைப் பாராட்டி, இதில் மேலும் சில சீர்திருத்தங்களைச் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்

பொதுவாக, எல்லா மக்களாலும் பயன்படுத்தக்கூடிய தங்கத்திற்கு நம் மாநிலத்திலே ஒரு வரியும், நமது அண்டை மாநிலங்களான கேரளா, ஆந்திரா, கர்நாடகா, பாண்டி போன்ற மாநிலங்களில் மிகவும் குறைவான வரியும் இருக்கிறது. குறிப்பாக, பாண்டிச்சேரியிலும், ஆந்திராவிலும், கர்நாடகாவிலும் ½ சதவிகித வரிதான் தங்கத்திற்கு விதிக்கிறார்கள். ஆனால், தமிழகத்திலே, 2



சதவிகித வரி விதிக்கப்படுகிறது. இதனால், பெரிய வியாபாரிகள் பக்கத்து மாநிலங்களுக்குச் சென்று தங்கத்தை வாங்கிப் பயன்படுத்துவதனால், நமது மாநிலத்திற்கு வரவேண்டிய வரி, இழப்பு ஏற்படுகிறது. ஆகவே, மற்ற மாநிலங்களில் உள்ளதைப்போல, இங்கேயும் அதே விகிதமான ½ சதவிகித வரியை விதிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, காகிதத் துறையிலே, பிரின்ட் செய்யப்பட்ட 'கிரீட்டிங்ஸ்'-களுக்கு ஒருவித வரியும், பிரின்ட் செய்யப்படாத 'கிரீட்டிங்ஸ்'-களுக்கு ஒருவித வரியும் இருக்கிறது. இதன் காரணமாக, அனைத்துமே பிரின்ட் செய்யப்பட்ட பொருள்கள்தான் என்று வியாபாரிகள் மக்களை ஏமாற்றி விற்பனை செய்கிறார்கள். இந்த முரண்பாடுகளை நீக்கினால், முறையான வரி அரசுக்கு வந்து சேரும். ஆகவே, இரண்டுக்கும் ஒரேவிதமான வரியை விதிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று அழைப்பிதழ்கள். அழைப்பிதழ்கள் என்றாலே, 'கவர்' இல்லாமல் அழைப்பிதழ்கள் இல்லை. ஆனால், கவருக்கு ஒருவித வரியும், அழைப்பிதழுக்கு ஒருவித வரியும் இருக்கிறது. அதை வாங்கும்போது கவருக்கு ஒருவித வரி, அழைப்பிதழுக்கு ஒருவித வரி என்று இருப்பதால் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எனவே, கவருக்கும், அழைப்பிதழுக்கும் ஒரே மாதிரியான வரியை விதிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-45

அதேபோல, தருமபுரி மாவட்டத்தில் விளைகின்ற மாவள்ளிக் கிழங்கிற்கு 1 சதவிகிதம் செஸ் வரி விதிக்கப்படுகிறது. ஆனால், மற்ற மாவட்டங்களிலே அந்த வரி விதிப்பு இல்லை. எனவே, தருமபுரியிலும் அந்த செஸ் வரி விதிக்கப்படுவதை நிறுத்த வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம், பொது விற்பனை வரிச் சட்டத்தில் நான்கு திருத்தங்களும், தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தில் ஒரு திருத்தமும், தமிழ்நாடு கேளிக்கை வரிச்

சட்டத்தில் இரண்டு திருத்தங்களும் இந்த அவையிலே அறிமுகம் செய்யப்பட்டு, இன்றைக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, இறுதியிலே நிறைவேற்றுகின்ற கட்டத்திலே நாம் இருக்கிறோம். இதிலே, அதிக உறுப்பினர்கள் கலந்து கொள்ளாததிலிருந்து, நம்முடைய வரிவிதிப்புக் கொள்கை வெற்றிகரமாக இருக்கிறது, வரவேற்கத்தக்கதாக இருக்கிறது, எல்லோருக்கும் மனநிறைவு அளிப்பதாக இருக்கிறது என்பதற்கு இது அடையாளம் என்று எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த அரசாங்கம், அதாவது டாக்டர் கலைஞர் அவர்கள் Long Term Taxation Policy, நீண்ட கால வரி விதிப்புக் கொள்கைகளை அறிமுகப்படுத்தி, அதன் அடிப்படையில் வாணிபம் பெருக வேண்டும், தொழில்கள் பெருக வேண்டும், வரிகள் ஏய்க்கப்படுவது தடுக்கப்பட வேண்டும், தாங்குபவர்களுக்கு மட்டுமே வரி விதிக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் வரியிலே நல்ல கொள்கையைப் பின்பற்றி ஒரு வரலாற்றைப் படைத்திருக்கிறார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளில் வணிகப் பெருங்குடி மக்கள் எல்லாம் பெருமிதமும், மகிழ்ச்சியும் கொள்ளத்தக்க அளவுக்குச் சலுகைகளை முதல்வர் அவர்கள் அளித்திருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றம் நல்ல முறையிலே அறியும்.

1996-97-ல் வரிச் சலுகையாக 306 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டது. 1997-98-ல் 67 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டது. 1998-99-ல் 38 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் வணிக்ப் பெருங்குடி மக்களுக்கு வரிச் சலுகையாக கிட்டத்தட்ட 411 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அளவுக்கு இரண்டு ஆண்டுகளுக்குள் 400 கோடி ரூபாய்க்கு மேல் வரிச் சலுகை கொடுத்து வரலாறு படைத்த ஒரே தலைவர், ஒப்பற்றத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நம் முதல்வர் எப்படி ஒவ்வொரு துறையிலும் முத்திரையைப் பதிக்கிறார், வரலாற்றிலே புதிய அத்தியாயத்தை இணைக்கிறார் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

வணிகப் பெருங்குடி மக்கள் எல்லாம் பலமுனை விற்பனை வரி இருக்கக்கூடாது, ஒருமுனை விற்பனை வரிதான் இருக்க வேண்டும், பலமுனை விற்பனை வரி இருப்பதாலே அதிகாரிகள் வணிகப் பெருங்குடி மக்களை நெருக்கடி செய்கிறார்கள், ஊழலுக்கு இடம்



அளிக்கிறது, எனவே, பல பொருட்களுக்கு ஒருமுனை விற்பனை வரிதான் இருக்க வேண்டும் என்று நீண்டகாலமாக வாதாடினார்கள், போராடினார்கள். பல சங்கங்களிலே தீர்மானங்களை நிறைவேற்றினார்கள். வணிக, வர்த்தகக் கழகங்களின் சார்பிலே பேரணி நடத்தப்பட்டது. Chamber of Commerce-ல் எல்லாம் இதுபற்றிக் கருத்தரங்குகள் எல்லாம் நடைபெற்றன. ஆனால், 1989 வரை அதன்மேல் யாருக்கும் முடிவெடுப்பதற்குத் தைரியம் வரவில்லை. பலமுனை வரியை நீக்கிவிட்டால் எங்கே அரசுக்குக் கிடைக்கின்ற வருமானம் போய்விடுமோ, நாம் எதிர்பார்க்கின்ற நிதிநிலைக்கு எதிராக அது அமைந்துவிடுமோ என்ற அச்சத்தால், பயத்தால் கடந்த காலத்தில் முதலமைச்சர்கள் ஒருமுனை விற்பனை வரியைக் கொண்டு வரப் பயந்தார்கள். ஒருமுனை விற்பனை வரியைக் கொண்டு வருவதன் மூலம் வணிகர்களுக்கும் நன்மை செய்ய முடியும், அதேநேரத்தில் அவற்றை ஒழுங்காகச் சீர் செய்ய முடியும், ஊழலைக் களைய முடியும், அதிகாரிகளின் நெருக்கடி, நிர்பந்தங்களிலிருந்து வணிகர்களைக் காப்பாற்ற முடியும் என்ற நோக்கத்தோடு துணிந்து 1989-லே ஒருமுனை விற்பனை வரியைக் கொண்டு வந்து வரலாறு படைத்தவர் கலைஞர்தான் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த ஆட்சிக் காலத்தில் விற்பனை வரிக்கு ஓர் இலட்சம் ரூபாய் வரைதான் உச்சவரம்பு இருந்தது. அந்த ஓர் இலட்சம் இப்போது மூன்று இலட்சமாக மாற்றப்பட்டிருக்கிறது. இதன் மூலமாக தமிழ்நாட்டில் மட்டும் 1,43,767 வணிகப் பெருங்குடி மக்கள் பயனடைந்திருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். தாங்களாகவே முன்வந்து கணக்கு அளித்தல் என்ற அடிப்படையில் இருந்த உச்சவரம்பு 5 இலட்சத்திலிருந்து 10 இலட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதன்மூலம் 99,437 வணிகப் பெருங்குடி மக்கள் பயனடைவார்கள் என்பதை நினைவுறுத்த வேண்டியது என்னுடைய தலையாய கடமையாகும்.

முற்பகல் 11-50

மேலும், சில பொருட்களுக்கு வரியை உயர்த்தியிருக்கிறோம், சில பொருட்களுக்கு வரியை மாற்றியிருக்கிறோம், சில பொருட்களுக்கு திருத்தியிருக்கிறோம். புதிய இலக்கணம் அமைத்திருக்கிறோம்,

D V21,31'N98 N98.58.2 219401

சிலவற்றிலே குறைத்திருக்கிறோம். சிலவற்றிலே பளு இருக்கக்கூடாது என்பதற்காக அடியோடு அகற்றியிருக்கிறோம். 'கம்ப்யூட்டர் சாப்ட்வேர்'-க்கு வரி கிடையாது, மாணவர்களுக்குக் கொடுக்கக்கூடிய நோட்டுப் புத்தகங்களுக்கு வரி கிடையாது, பழைய நகைகளுக்கு வரி கிடையாது, 'பிக்சர் வார்னிஷிங்-க்கு' வரி கிடையாது, சிறிய ரொட்டிக்கடைகளுக்கு வரி கிடையாது, லென்சுக்கு வரி கிடையாது, எண்ணெய் எடுக்கப்பட்ட தவிட்டுக்கு வரி கிடையாது. வணிக முத்திரை இல்லாத வெண்ணெய்க்கு வரி கிடையாது. இத்தனைக்கும் மேலாக, நாம் சமையலுக்குப் பயன்படுத்துகின்ற எந்த எண்ணெயாக இருந்தாலும் அதற்கு வரி கிடையாது என்று டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்றால், நான் பெருமிதத்தோடு தோள் தட்டிச் சொல்லுவேன், இந்தியாவிலேயே சமையல் எண்ணெய் எதுவாயினும் அதற்கு வரி இல்லை என்று சொல்லியிருக்கிற ஒரே மாநில அரசு கலைஞர் அவர்களுடைய அரசுதான் என்பதை நான் உங்களுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இது, எனக்கு எதை நினைவுபடுத்துகிறது என்றால், அண்ணல் காந்தியார் உப்பு சத்தியாகிரகப் போரை நடத்தினார். உப்பு வரி விதிக்கக்கூடாது என்று சொன்னார். எதற்காக அதைச் சொன்னார்? உப்புக்கு வரி விதித்ததினாலே அரசாங்கத்திற்கு கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் வந்துவிடவில்லை. ஆனால், மனிதன் பயன்படுத்துகின்ற உணவுப் பொருளில் உப்பு கலக்கிறது, உப்பு இல்லாத பண்டத்தைக் குப்பையில் போடு-எனவே உப்புக்கு வரியை எடுத்துவிட்டால் சுதந்திரத்தின் பெருமையை, நம்முடைய இயக்கத்தின் சாதனையை பொதுமக்கள் உணர்வார்கள் என்ற உயர்ந்த நோக்கத்தோடு போராடி அந்தப் போராட்டத்திலே வெற்றி பெற்றார்கள்.

உப்புக்கு அடுத்தபடியாக நமது உணவுப் பண்டங்களில் நாம் பயன்படுத்துகின்ற பொருள் எது என்று சொன்னால் அது எண்ணெய்தான். எண்ணெய் இல்லாத பதார்த்தங்களே கிடையாது, உணவு வகைகளே கிடையாது. எப்படி உப்புள்ள உணவுப் பண்டங்களைச் சாப்பிடும்போது உத்தமர் காந்தியார் நினைவுக்கு வருகிறாரோ, அதேபோல எண்ணெய் பலகாரங்களைச் சாப்பிடும்போது டாக்டர் கலைஞர் நம்முடைய நினைவுக்கு வருகிறார். அந்த அளவுக்கு ஒரு புதிய வரலாற்றை நாம் படைத்திருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



சில பொருட்களுக்கு நாம் அறவே வரியை எடுத்திருக்கிறோம், சில பொருட்களுக்கு வரியைக் குறைத்திருக்கிறோம். குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், சிறிய ரொட்டிக் கடைகளுக்கெல்லாம் 8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகவும், சிமெண்ட் கற்களுக்கு 16 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகவும், மசாலாப் பொடிகளுக்கு 16 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகவும், கையால் தயாரிக்கப்படும் நார் மற்றும் நூல் வகைகளுக்கெல்லாம் 8 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகவும், கையால் தயாரிக்கப்படும் சொட்டு நீலத்திற்கு 16 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகவும் வரியைக் குறைத்திருக்கிறோம். எனவே, வரி விதிப்பில் 100 சதவிகிதம், 200 சதவிகிதம், 300 சதவிகிதம், 400 சதவிகிதம் என்று குறைத்திருக்கிறோம் என்றால் வணிகப் பெருங்குடி மக்களிடத்தில் இந்த அரசுக்கு எவ்வளவு கனிவு, கருணை இருக்கிறது என்பதற்கு இவை எல்லாம் ஆதாரங்களாக விளங்குகின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் அரசின் வருமானத்தைப் பெருக்க இந்த அரசு கடமைப்பட்டிருக்கிறது. யாருக்கு வரி விதித்தால் எதிர்ப்பு இருக்காதோ, யாருக்கு வரி விதித்தால் மக்கள் ஆதரிப்பார்களோ அந்த அளவுக்கு வரி உயர்வு செய்யப்பட்டிருக்கிறது. இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுபானங்களுக்கு 30 சதவிகிதத்திலிருந்து 40 சதவிகிதமாக வரியை உயர்த்தி இருக்கிறோம். வெளிநாட்டு மதுபானங்களுக்கு 60 சதவிகிதத்திலிருந்து 70 சதவிகிதமாக வரியை உயர்த்தியிருக்கிறோம். பான் மசாலாவுக்கு 20 சதவிகிதத்திலிருந்து 30 சதவிகிதமாக வரியை உயர்த்தியிருக்கிறோம். இந்த வரி விதிப்பை யாரும் எதிர்க்கவில்லை, வரவேற்கிறார்கள். இதுபோன்ற கொள்கையைத்தான் எதிர்காலத்தில் பின்பற்ற வேண்டுமென்று மக்கள் விரும்புகிறார்கள்.

இந்த மாமன்றத்தில் ஏறத்தாழ 7 மசோதாக்கள், திருத்தச் சட்ட முன்வடிவுகள் முன்மொழியப்பட்டும் எல்லோரும் அமைதியாக அவற்றை வரவேற்கிறார்கள் என்றால், அது இந்த நல்ல கொள்கையை டாக்டர் கலைஞர் அவர்கள் கடைபிடித்ததன் காரணமாகத்தான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ஆலடி அருணா] [1998 மே 29

அதேபோல, கூடுதல் விற்பனை வரியிலே சில மாற்றங்களை நாம் செய்திருக்கிறோம். 25 கோடி வரையில் யாரும் கூடுதல் விற்பனை வரி செலுத்த வேண்டியதில்லை. ஆனால், மொத்த விற்பனை 25 கோடியிலிருந்து 50 கோடியாக இருந்தால் 1½ சதவிகிதம் என்றும், 50 கோடியிலிருந்து 100 கோடியாக இருந்தால் 2 சதவிகிதம் என்றும், 100 கோடியிலிருந்து 300 கோடியாக இருந்தால் 2½ சதவிகிதம் என்றும், 300 கோடிக்கு மேல் 3 சதவிகிதம் என்றும் வரி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதைத் தாங்கக்கூடியவர்கள் தாங்கித் தீரவேண்டும், நாட்டு மக்களுக்காகக் கொடுக்க வேண்டும்.

முற்பகல் 11-55

அடுத்து, வளர்ந்து வருகின்ற இந்த நாகரீக உலகத்திலே பொழுது போக்கிற்காகவும், வேடிக்கைக்காகவும் பல 'அம்யூஸ்மென்ட் சென்டர்ஸ்' அமைக்கப்படுகின்றன. இவற்றுக்கெல்லாம் அவர்கள் கட்டணத்தை வசூலிக்கிறார்கள். அந்தக் கட்டணத்தில் உள்ளாட்சிகளுக்குப் பங்கு இருக்க வேண்டும் என்பதற்காக 20 சதவிகித வரியை விதித்து, அதிலே 90 சதவிகிதத்தை உள்ளாட்சிகளுக்குக் கொடுக்கிறோம் என்பதைப் பெருமையோடு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால், இவ்வளவு வரிச் சலுகையை நாங்கள் செய்வதன் நோக்கம் இதன்மூலம் வாணிபம் பெருக வேண்டும், தொழில் பெருக வேண்டும் என்றும், அதனால் அரசாங்கத்திற்கு வருமானம் வர வேண்டும் என்ற அடிப்படையிலேதான் செய்கிறோம் என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது. ஓர் ஏமாற்றத்தை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுவதைத் தவறாக யாரும் எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்று நான் கருதுகின்றேன். நாங்கள் வரியைச் சீர்படுத்துவதன் மூலம், ஒழுங்குபடுத்துவதன்மூலம், எதிர்பார்த்த வருமானம் அரசாங்கத்திற்கு வரவில்லை என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். 1994-95-ல் விற்பனை வரி மூலம் 4164 கோடி ரூபாய் கிடைத்தது. 1995-96-ல் 5023 கோடி ரூபாய் கிடைத்தது. ஏறத்தாழ 900 கோடி ரூபாய் அதிகமாகக் கிடைத்தது. ஆனால், 1996-97-ல் 5751 கோடி ரூபாய் கிடைத்தது. 1997-98-ல் 6062 கோடி ரூபாய் கிடைத்தது. அதாவது வெறும் 300 கோடி ரூபாய்தான் அதிகரித்திருக்கிறது. நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால் வரிச் சலுகையைப் பயன்படுத்தி அரசாங்கத்தின் வருமானத்திற்கு முடம் ஏற்படக்கூடிய அளவிற்கு, குறை



1998 மே 29] [திரு. ஆலடி அருணா]

ஏற்படக்கூடிய அளவிற்கு யாரும் நடந்துகொள்ளக்கூடாது என்பதுதான் என்னுடைய கனிவான வேண்டுகோளாகும். எனவே, இன்றைக்கு முன்மொழியப்பட்டிருக்கின்ற இந்தத் திருத்தங்களை எல்லாம் நாட்டின் நன்மையைக் கருதியும், வணிக மக்களுடைய நன்மையைக் கருதியும் சமுதாயத்தின் நன்மையைக் கருதியும் ஒரு தொலைநோக்கத்தோடு இந்தத் திருத்தங்கள் மொழியப் பட்டிருக்கின்றன. எனவே, இந்தத் திருத்தங்களை ஒருமனதாக நிறைவேற்றித் தரும்படி மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரையும் பணிவன்புடன் வேண்டுகிறேன்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பல பொருள்களுக்கு விற்பனை வரி விதித்திருப்பதையும் மற்றும் அதனைக் குறைத்திருப்பது பற்றியும் இங்கு சொன்னார்கள். அழுகும் பொருட்களான திராட்சைப் பழம், வாழைப்பழம், மாம்பழம் மற்றும் தக்காளிப் பழம் ஆகியவைகளைப்பற்றி எங்கள் பகுதியிலுள்ளவர்கள் என்னிடம் தொலைபேசியில் பேசும்போது, 'நாங்கள் இங்கே விற்கும்போது ரூ. 100/-க்கு விற்றால் ஒரு ரூபாய் வரி கொடுக்கிறோம், எங்கு கொண்டு வந்து போடுகிறோமோ அங்கேயும் அந்த மாதிரி வரியை விதிக்கின்றார்களே, நீங்கள் இதைப்பற்றிப் பேசவில்லையா என்றும், மேலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேங்காய்க்கு முழுமையாக வரி விலக்கு அளித்திருக்கின்றார்களே, அதுபோல இதற்கும் நீங்கள் ஏன் சொல்லவில்லை' என்றும் கேட்டார்கள். எனவே, அப்படி ஏதாவது வரி விதிக்கப்பட்டிருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அழுகும் பொருட்கள் எதற்குமே வரி கிடையாது.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்நாட்டில் கையால் தயாரிக்கப்படுகின்ற செங்கல் ஓடு போன்றவற்றுக்கு கடந்த காலங்களில் வரி இல்லை. நம்முடைய

ஆட்சி பொறுப்பேற்ற பின்பு 4 சதவிகித வரி விதிக்கப்பட்டது. ஆனால், களிமண்ணால் செய்யப்படுகின்றவற்றிற்கு 4 சதவிகித வரி என்றும், சிமெண்டால் செய்யப்படுகின்றவற்றிற்கு 8 சதவிகித வரி என்றும் இருக்கிறது. ஆனால், துறை அதிகாரிகள் இந்த ஆண்டு முதல் கையால் செய்யப்படுகின்ற, களிமண்ணால் செய்யப்படுகின்ற ஓடுகளுக்கும் 8 சதவிகித வரி விதிக்க வேண்டுமென்று, அறிவித்திருக்கின்றார்கள். ஆகவே, அரசு வரியைக் கூட்டாத பட்சத்தில் அவர்கள் 8 சதவிகித வரி என்று வசூலிப்பதை நான் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். ஆகவே, அது 4 சதவிகிதமாக இருக்க வேண்டுமென்று தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதலில் இந்தச் சட்டமுன்வடிவிலே யார் பேசினார்களோ, அவர்களுக்குத்தான் வாய்ப்பினைத் தர முடியும். இருந்தாலும் நீங்கள் . கேட்டீர்கள், அனுமதி கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கட்டுமானப் பணிகள் நாடெங்கிலும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. அரசின் வருமானத்தைப் பெருக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். ஏதாவது தொழில் முன்னேறி வருமானால், அதில் ஆதாயம் வரும் என்று அரசு கருதுமானால், அதிலே வரி விதிப்பதற்கு அரசாங்கம் அக்கறை காட்டக் கடமைப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஓடு பற்றிச் சொன்னார்கள். அதுபற்றிய விவரங்கள் என்னிடத்திலே இல்லை. இருந்தாலும் ஒரு தொழில் முன்னேறி வரும்போது, அந்தத் தொழிலிலே ஆதாயம் இருக்கும்போது, அதற்கு வரி போடுவதற்கு அரசாங்கம் கடமைப்பட்டிருக்கின்றது. அந்த முறையிலேதான் நாம் கொள்கையை அணுகுகின்றோம்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்கள் சொன்ன கருத்திலே, களிமண்ணால் செய்யக்கூடிய ஓடுகள், தரை ஓடுகள் மற்றும் கூரை ஓடுகளுக்கு 4 சதவிகிதம் என்று தெளிவாக இருக்கிறது. சிமெண்டால் செய்யக்கூடிய தரை கற்களுக்கு 8 சதவிகிதம் என்றும் தெளிவாக இருக்கிறது. ஆனால், வணிகத் துறை ஆணையர் கொடுத்திருக்கின்ற விளக்கத்தில் இயந்திரத்தால் அது





செய்யப்படுவதாக இருந்தால் 8 சதவிகிதம் என்ற விளக்கத்தினைக் கொடுத்திருக்கின்றார்கள். எதுவாக இருந்தாலும், இயந்திரத்தால் செய்யக்கூடிய, களிமண்ணால் செய்யக்கூடிய ஓடாக இருந்தாலும் 8 சதவிகிதம் என்று கொடுத்து இருக்கிறார்கள். ஆனால், நம்முடைய 'ஆக்டிலே', நம்முடைய 'ஷெட்யூலிலே' whether it is hand-made or machine-made என்பதெல்லாம் இல்லை. களிமண்ணால் செய்யக்கூடிய தரை ஓட்டிற்கும், கூரை ஓட்டிற்கும் 4 சதவிகிதம் என்றுதான் புத்தகத்தில் இருக்கிறது. அப்படித்தான் ஒரு வருடமாக வரி போட்டுக் கொண்டிருந்தார்கள். கணக்கு முடித்துக் கொண்டிருந்தார்கள். இப்போது, சமீபத்திலே கொடுத்திருக்கக்கூடிய 'கிளாரிபிகேஷனிலே', 8 சதவிகிதம் என்று சொல்லிவிட்டதால், பழைய கணக்கிலே இருந்தபடி நீங்கள் 8 சதவிகிதம் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே, இந்த விஷயத்தை ஆய்வு செய்து, நியாயம் வழங்கிட வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12–00

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொக்கர் கூறியவாறு அந்த வித்தியாசமான நிலைமை இருக்குமேயானால், அதைப் பற்றி ஆய்வு செய்து, தேவைப்பட்டால் அதற்கு ஒரு பிரத்தியேக அறிவிப்பை அரசு வெளியிடும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

[பேரவைத் துணைத் தலைவர்] [1998 மே 29

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



1998 மே 29]

## (இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்த சட்டமுன்வடிவு, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/1998), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/1998) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 முடிய, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 முடிய, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@ 27-5-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[பேரவைத் துணைத் தலைவர்] [1998 மே 29

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ச) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/1998), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.



1998 மே 29]

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/1998) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 27-5-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (உ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (தனி வகைமுறைகள் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (தனி வகைமுறைகள் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1998), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,





"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (தனி வகைமுறைகள் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1998) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிற்பகல் 12-05

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 27-5-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

*"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (தனி வகைமுறைகள் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்"*
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஊ) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/1998), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,



*"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/1998) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"*
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

---

@ 27-5-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஏ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/1998), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/1998) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

---

@ 27-5-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 8 முடிய, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 8 முடிய, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஏ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (தனிவகைமுறை) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்த 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (தனிவகைமுறை) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/1998), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (தனிவகைமுறை) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/1998) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

---

@ 27-5-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (தனிவகைமுறை) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைசசர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஐ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்த சட்டமுன்வடிவு. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/1998), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/1998) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேணடும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்தச் சட்டமுன்வடிவு மற்றும் அடுத்து எடுக்கவுள்ள இரண்டு சட்டமுன்வடிவுகள், ஊராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தொடர்புடையதாக இருக்கின்றன. எனவே, கருத்துக்களைக் கூற விரும்பும் உறுப்பினர்கள் இந்த மூன்று சட்டமுன்வடிவுகளுக்கும் சேர்த்து தங்கள் கருத்துக்களைக் கூறலாம். முதலில், திரு. ஆர். சொக்கர்.

@ 19-5-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



பிற்பகல் 12-10

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவுகளைக் கொண்டுவரக்கூடிய நோக்கத்தை நாங்கள் வரவேற்கிறோம், பாராட்டுகின்றோம். மூன்றாம் திருத்தச் சட்டமுன்வடிவு எண் 14/1998-ல் ஒரு கிராம சபையினுடைய கோரம் 3-ல் ஒரு பங்கு இருக்க வேண்டும் என்று இருப்பதை தற்போது மாற்றுகிறோம். அது தேவையானதுதான். அதேபோன்று, பிரதிநிதிகளுக்கு நாள்படி, பயணப்படி, அமர்வுக் கட்டணம், மாதாந்திர பயணப்படி, இவை எல்லாம் தேவைதான். அதற்காக கொண்டுவரக்கூடிய சட்டத் திருத்தத்தையும் முழுமையாக வரவேற்கின்றோம். ஆனால், அதில் ஒரே ஒரு கருத்து, நான் சொல்ல விரும்புவது, ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவர்கள், டிஸ்ட்ரிக்ட் பஞ்சாயத்தினுடைய தலைவர்களை நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலமாகப் பணி நீக்கம் செய்வதற்கு பஞ்சாயத்து சட்டத்தினுடைய 212, 213 ஆகிய பிரிவுகளில் இந்தத் திருத்தத்தைக் கொண்டுவர இப்போது உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே இருக்கக்கூடிய சட்டத்தில் பிரிவு 207-ன்கீழ் ஓர் ஒன்றியத் தலைவர் தவறு செய்வாரேயானால், அவரை அரசு நேரடியாகவோ அல்லது அந்த உறுப்பினர்களில் 3-ல் 2 பங்கு பேர் கையெழுத்து போட்டுக் கொடுத்தாலோ அவர்களை பதவி நீக்கம் செய்வதற்கான ஒரு சட்டம் இருக்கின்றது. ஆகவே, அந்தச் சட்டம் இருக்கும்பொழுது, பிரிவு 212-க்கும் 213-க்கும் திருத்தம் கொண்டுவரத் தேவையில்லை என்பது எங்களுடைய பணிவான கருத்து. எங்களுடைய தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக அந்த 2 பிரிவுகளில் உள்ள திருத்தத்தை மட்டும் அருள்கூர்ந்து கொண்டுவராமல் அதை நீக்கி அமைத்து, மற்ற எல்லா ஷரத்துக்களுக்கும் நீங்கள் திருத்தம் கொண்டு வருவதை முழுமனதோடு நாங்கள் ஆதரிக்கின்றோம், வரவேற்கின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த உள்ளாட்சித் துறையில் சட்டத் திருத்தம் கொண்டு வருவதிலே, ஊராட்சியின் மகாசபையைக் கூட்டுவதற்கு அந்த ஊராட்சி மன்றத்தினுடைய தலைவருக்கு அதிகாரம் வழங்கக்கூடிய அதேநேரத்திலே ஆண்டுக்கு 3 முறை என்பதை, 2 முறையாக

[திரு. ஜி.கே. மணி] [1998 மே 29

மாற்றி அமைத்து. அதிலே அந்த ஊராட்சி மன்றத் தலைவர், முழுமையாக அந்த ஊராட்சிக்கு உட்பட்ட எல்லா கிராமங்களுக்கும் அறிவிக்காமலேகூட, ஏதோ பெயரளவில் அறிவிப்பைக் கொடுத்துவிட்டு, மகாசபையைக் கூட்டாமல் இருப்பதற்குக்கூட வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, முறையாக தண்டோரா மூலமாக அந்த ஊராட்சிக்கு உட்பட்ட அனைத்து மக்களுக்கும் அறிவிப்பு வழங்கக்கூடிய வகையிலே அந்தத் திருத்தம் இருக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு, அதேநேரத்தில் 3-ல் 2 பங்கு மெஜாரிட்டி வருகின்றபோது ஊராட்சி ஒன்றியத்தினுடைய குழுத் தலைவர் மீதோ அல்லது மாவட்ட ஊராட்சி ஒன்றியத்தின் குழுத் தலைவர் மீதோ நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து அவரைப் பதவி நீக்கம் செய்வதற்கு வழிவகை செய்யக்கூடிய வகையிலே இந்த சட்டமுன்வடிவு இருக்கின்ற காரணத்தாலே, இதைத் திருத்தம் செய்து இப்படிப்பட்ட வாய்ப்பு திடீரென்றுகூட, வேண்டா வெறுப்பாக, ஆள் பிடிக்கும் வகையில் ஆட்களை எல்லாம் சேர்த்துக்கொண்டு பதவி நீக்கம் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, இதை மாற்றி அமைக்கக்கூடிய வகையிலே சட்டமுன்வடிவு இருக்க வேண்டுமென்று எங்களது கட்சியின் சார்பிலே சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்டத் திருத்தங்களை வரவேற்று, இதன்மூலம் ஒருசில ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் எதேச்சையாக நடந்துகொள்கின்ற வாய்ப்பைத் தடுப்பதற்குரிய வழி அமைந்து இருக்கிறது என்பதால் இதை ஆதரித்து, இதில் மேலும் சில சட்டத் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டுமென்று என்னுடைய கருத்தை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக ஊராட்சி ஒன்றியக் கூட்டங்களிலே சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்க முடியாத ஒரு நிலை இருக்கின்றது. ஆகவே, ஊராட்சி ஒன்றியக் கூட்டங்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்களை அழைக்க வேண்டுமென்றும், அவர்களும் பங்கேற்க இந்தச் சட்டத்தில் வழிவகை செய்ய வேண்டுமென்றும் இந்த மாமன்றத்தின் சார்பாக அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். அதைப்போல நகராட்சிக் கூட்டங்களிலும், ஊராட்சி ஒன்றியக் கூட்டங்களிலும் சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கும்போது, அவர்களுக்கு ஓட்டுரிமை வழங்க வேண்டும். ஏனென்றால்



1998 மே 29] [திரு. ஜி. நிஜாமுதீன்]

சட்டமன்ற உறுப்பினர்களும் பெரும்பான்மையான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள்தான். ஆகவே நகராட்சிகளின் மன்றக் கூட்டங்களில் பங்கேற்கிற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியக் கூட்டங்களிலும் பங்கேற்பதற்கான சட்டத் திருத்தத்தையும் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சிச் சட்டம் சம்பந்தமாக ஒரு வார்த்தை. அவர்கள்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கான வாய்ப்பைத் தருகின்ற ஒரு சட்டம் இது. ஆனால் சில ஊராட்சி மன்றங்கள் எதேச்சாதிகாரமான போக்கில் மெஜாரிட்டி 9 பேர் இருந்தாலும்கூட, அந்த 9 பேர் சொல்வதை அவர்கள் கேட்டுக்கொள்வதே இல்லை. அதை ரிக்கார்டு கூட பண்ணுவது இல்லை. குறிப்பாக, நான் இரண்டு பஞ்சாயத்துக்களைப் பற்றிச் சொல்லத் தயாராக இருக்கிறேன். ஒன்று, மருதங்கோடு கிராமப் பஞ்சாயத்து; இன்னொன்று களியல் கிராமத்தில் இருக்கிற மாங்காடு பஞ்சாயத்து. அங்கே மெஜாரிட்டி உறுப்பினர்கள் பூராவும் இதர கட்சிகளைச் சார்ந்தவர்கள். அவர்கள், சொல்வதை ரிக்கார்டு பண்ணுவதில்லை. அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வதுமில்லை. எனவே, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்த சட்டத் திருத்தம் அதற்கு இடம் தருகிற வகையில், அப்படி எதேச்சாதிகாரமாகச் செயல்படுகிறவர்கள்மீது நடவடிக்கை எடுக்கிற வகையில் இருக்கும் இந்தத் தீர்மானத்தை நான் வரவேற்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்டப் பஞ்சாயத்துகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றினுடைய தலைவர்களைப் பதவி நீக்கம் செய்யக்கூடிய இந்தச் சட்டமுன்வடிவை--அவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர முடியும் என்பதால்--இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இதை வரவேற்கிறது. ஆனால், அதேநேரத்தில் மேலே சொல்லக்கூடிய அந்தப் பிரதிநிதிகளுக்கானச் சலுகைகள் என்பதையெல்லாம் நாம் ஏற்றுக்கொண்டாலும், இந்தச் சட்டம்

என்பது ஒரு ஜனநாயகபூர்வமாக வரவேற்புக்குரியது என்பது சரியாக அமையும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. ஆகவேதான் இந்தச் சட்டத்தை வரவேற்கிறபோது, இந்தச் சட்டத்தினுடைய பல்வேறு பிரிவுகளை இங்கே கொண்டு வந்திருந்தாலும் ஒன்றை நடைமுறைப்படுத்துவது சரியாக இருக்கும். ஒரு தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருமுன், அவரைத் தேர்ந்தெடுக்கும்போது ஓர் ஆண்டுகாலம் அவகாசம் என்பதைக்கூட இரண்டாண்டு காலமாக ஆக்கலாம். அந்த அளவில் இந்தச் சட்டம் அமையலாம் என்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்தினைத் தொடங்கி வைத்த திரு. சொக்கர் அவர்கள், பிறகு பேசிய திரு. பழனிசாமி, அடுத்துப் பேசிய திரு. மணி, மற்ற உறுப்பினர்கள் எல்லாம் சொல்லும்போது, இது வரவேற்கத்தக்கது என்று பழனிசாமி அவர்களும், வேண்டாத குழப்பங்களை உருவாக்கும் என்று திரு. சொக்கர் அவர்களும் குறிப்பிட்டார்கள். அதைப்போல எதேச்சாதிகாரமாக நடந்துகொள்கிற சில ஊராட்சிகளையும் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மணி அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் இது ஒரு புதியக் குழப்பத்தை உண்டாக்கும் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் ஒன்றியப் பெருந்தலைவர்களும் எதிர்வரிசையில் இருக்கின்ற தோழமைக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் மற்றவர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, ஒருமுறை தவறினால் உள்ளபடியே மறுபடியும் இங்கே கொண்டு வருகின்ற வாய்ப்பு இருக்கிற காரணத்தால், இதை ஒரு முறை ஏற்று, அதற்குப் பிறகு அவசியம் இருந்தால், மீண்டும் கொண்டு வருகிற வாய்ப்பு இந்த அரசுக்கு இருக்கிற காரணத்தால், தவறு செய்கிறவர்களைத் தண்டிப்பதற்கும், அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து நீக்குவதற்கும் அரசாங்கத்திற்கு வழிவகை இருக்கிறது என்பதையும் மனதில் வைத்து, இந்தக் கோரிக்கையை ஏற்று 11-வது, 12-வது பிரிவுகளை நீக்கிவிட்டு, இந்தச் சட்டத்தை ஏற்றுக் கொள்ளுமாறு மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களை வேண்டி நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

*பிற்பகல் 12-20*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு ஓர் ஆச்சரியமான சந்தேகம் இருக்கிறது. என்னவென்றால், ஊராட்சி ஒன்றியங்களுக்கு, உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரம் தர வேண்டுமென்று தொடர்ந்து ஒரு கோஷம் எழுப்பப்பட்டு, என்னென்ன அதிகாரங்கள் வேண்டும் என்பதை எல்லாம் வகைப்படுத்தித் தர வேண்டும் என்பதற்காக ஒரு குழு, உள்ளாட்சி அமைச்சருடைய தலைமையிலே அமைக்கப்பட்டு, அந்தக் குழு இயங்கிக் கொண்டிருக்கின்றது. அது சரியாக இயங்காமல் சில நேரங்களில் ஏங்கிக் கொண்டிருக்கிறது. அதிலே எனக்குக் கொஞ்சம் வருத்தம்தான். ஏனென்றால், குழு உறுப்பினர்கள் பல பேர் அந்தக் கூட்டங்களுக்கு வருவதில்லை. அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்டவர்களேகூட அந்தக் கூட்டங்களுக்கு வருவதில்லை என்பதிலே எனக்கு மிகுந்த வருத்தம் உண்டு. இருந்தாலும், இப்பொழுது பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்ற தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய கோரிக்கை-- அவர்கள் என்னிடத்திலே நேற்றைக்கே ஒரு கடிதம் கொடுத்தார்கள். கடிதம் கொடுத்த விஷயத்தை, பத்திரிகைகளிலும் இன்றைக்கு விளம்பரப்படுத்தி இருக்கின்றார்கள். இவைகளுக்குப் பிறகும், பிடிவாதமாக அரசு இருந்தது என்ற நிலை வேண்டாம் என்பதற்காக நம்முடைய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் முதலமைச்சரையும் பலியிட்டு, இங்கே பேசும்பொழுது, 'இப்பொழுதே வற்புறுத்தவில்லை, பிறகு கொண்டு வருவோம்' என்று அதை ஒத்திவைத்திருக்கின்றார்கள். நான் தெரிந்துகொள்ள விரும்புவது, இப்பொழுது, இந்த 2 வகைகளில் என்ன உங்களுக்குப் பெரிய வேறுபாடு இருக்கிறது என்பதைத் தெரிவித்தால் நலமாக இருக்கும். இப்பொழுது இருப்பது, இப்பொழுது ஏற்றுக்கொண்டது, அரசாங்கத்திற்கு எல்லா அதிகாரங்களும் இருக்கின்றன. two-third மூன்றிலே இரண்டு பங்கு உறுப்பினர்கள் ஓர் ஒன்றியத் தலைவர் மீது, ஓர் உள்ளாட்சி அமைப்பிலே இருக்கின்ற தலைவர் மீது நம்பிக்கையில்லை என்று எழுதி, அரசுக்குக் கொடுத்துவிட்டால் அரசாங்கம் அந்தத் தலைவரை நீக்குவதற்கு முறைப்படி நடவடிக்கை எடுத்து நீக்கிவிடுகிறது. ஆக, அரசின்*

கையிலே அதிகாரம் இருக்கிறது இப்பொழுது. இது நான் விரும்புவதுதான். அதை நீங்கள் இப்பொழுது ஏற்றுக்கொண்டு, நீங்களே இந்த அதிகாரத்தை வைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லி இருக்கின்றீர்கள். ஆனால், நாங்கள் கொண்டு வந்த அந்த 212 ஆவது பிரிவின்படிப் பார்த்தால், உறுப்பினர்கள் அதிகாரம் படைத்தவர்களாக ஆகிறார்கள். ஒரு தலைவர் நேர்மையாக நடந்துகொண்டால் அவரை நீடிக்க விடுவதற்கும், நேர்மையற்ற முறையிலே அல்லது ஜனநாயக விரோதப் போக்கிலே நடந்துகொண்டால், அந்த அமைப்பிலேயிருந்து அவரை நீக்குவதற்கும் சுதந்திரம் படைத்த அந்த நிலை உறுப்பினர்களுக்கு இருக்கிறது. அவர்கள் பார்த்து, மூன்றிலே இரண்டு பங்கு, மொத்தத்திலே 50 சதவிகிதத்தினர் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வேண்டுமென்று சொன்னால், உடனடியாகக் கூட்டம் கூட்டப்பட்டு, அந்தக் கூட்டத்தில் two-third உறுப்பினர்கள் நம்பிக்கையில்லை என்று சொன்னால், அவர் அந்தப் பதவியை இழக்கிறார். இது உள்ளாட்சி மன்றங்களுக்குத் தரப்பட்ட அதிக அதிகாரமா? அல்லது அரசாங்கமே அதை வைத்துக்கொள்வது என்பது உள்ளாட்சி மன்றங்களுக்குத் தரப்பட்ட அதிகாரமா என்பதை திரு. ஆர். சொக்கர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதில் இவ்வளவு நீண்ட விவாதம் வரும் என்று நான் முதலில் பேசும்போது கருதவில்லை. ஆகவேதான் பேசும்போது மிகச் சுருக்கமாகச் சொல்லிவிட்டேன். இது தேவையில்லை என்பதற்கான காரணங்களை விளக்குவதற்காக முதலமைச்சர் அவர்களே எனக்கு வாய்ப்பு கொடுத்ததற்காக முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிரிவு 207-ல் என்ன இருக்கின்றது என்றால், ஒரு பஞ்சாயத்து யூனியன் தலைவர் தவறு செய்வாரேயானால், அரசாங்கமே Suo-motu-ஆக, நேரடியாகவே அவர் மீது நடவடிக்கை எடுத்துப் பணி நீக்கம் செய்யலாம். அல்லது மூன்றில் இரண்டு பங்குக்கு அதிகமானவர்கள் two-third plus one; not less than two-third, உறுப்பினர்களிடமிருந்து புகார் வந்தால் தலைவரிடம் எழுதிக் கேட்பார்கள். யார், ஆர்.டி.ஓ. அவர்கள். 'உங்கள் மேலே இந்த மாதிரி ஒரு புகார் வந்திருக்கிறது, என்ன செய்யலாம்' என்று கேட்பார்கள். அந்தப் புகாருக்கு ஆதாரம் இல்லை, தனிப்பட்ட





காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவோ அல்லது அரசியல் காரணங்களுக்காகவோ எழுதிய புகார் என்று சொல்லும் பட்சத்தில், ஆர்.டி.ஓ. அதை விசாரித்து நிராகரித்து விடலாம். இல்லையென்றால், கவுன்சில் கூட்டத்தைக் கூட்டி கவின்சிலினுடைய views-ஐ நேரடியாகத் தெரிந்துகொண்டு அரசுக்கு அறிக்கை அனுப்ப வேண்டும். அரசு, அதைப் பரிசீலனை செய்து, அந்தத் தலைவர் செய்தது உண்மையிலேயே தவறான காரியம், அரசியல் காரணங்களுக்காக இதைச் செய்யவில்லை, தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சிக்காகவும் செய்யவில்லை என்று அரசு கருதுமேயானால், அதற்குப் பிறகுதான் அந்தத் தலைவரை நீக்க முடியும். இது அந்தத் தலைமைப் பொறுப்பிலே இருக்கக் கூடியவர்களுக்கு வழங்கக்கூடிய முழுமையான பாதுகாப்பு.

பிரிவு 212-லேயும், 213-லேயும் துணைத் தலைவரை நீக்கக் கூடிய அதிகாரம் இப்பொழுது வரைமுறைப்படுத்தப்பட்டு சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் திருத்தத்திலே தலைவரையும் சேர்த்துப் பண்ணுகிறோம். இதைப் பண்ணும்போது என்னவாகும் என்றால் half plus one members முதலில் எழுதிக் கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னால், கவுன்சில் கூட்டத்தைக் கூட்டி, 3-ல் 2 பங்குக்குக் குறையாமல் இருக்கக்கூடிய உறுப்பினர்களால் அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுமேயானால், அந்தத் தலைவருடைய பதவி அப்போதே போய் விடுகிறது. அரசு கண்டிப்பாக ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்று பிரிவுகள் 212-லேயும், 213-லேயும் சொல்லியிருக்கிறது. இதை ஏன் எதிர்க்கிறோம் என்று சொன்னால், இன்று பாராளுமன்ற உறுப்பினர்களும், பல சட்டமன்றங்களிலே இருக்கக்கூடிய உறுப்பினர்களும்கூட சில சந்தர்ப்பங்களில் பல்வேறு காரணங்களுக்காக தங்களுடைய நிலையை மாற்றிக்கொள்ளக்கூடிய சூழ்நிலையை இந்த இந்திய ஜனநாயகத்திலே நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அங்கேயே அப்படி நடக்கிறபோது, ஒரு கிராமப் பஞ்சாயத்து லெவலிலே, யூனியன் லெவலிலே அந்தச் சட்டத்தை நாம் போட்டு விடுவோம் என்று சொன்னால் இருக்கக்கூடிய 15, 20 உறுப்பினர்களை என்னென்ன காரணம் சொல்லியோ மாற்றிவிட முடியும். ஆகவே அங்கே கிராம நிலையிலே இருக்கக்கூடிய மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்குள் தேவையில்லாத ஒரு குழப்பத்தை உண்டாக்கக்கூடிய ஒரு சூழ்நிலை வரும், இது ஒன்று.

[திரு. ஆர். சொக்கர்] [1998 மே 29

பிற்பகல் 12-25

இரண்டாவது, பஞ்சாயத்துகளுக்கு என்னென்ன அதிகாரங்கள் கொடுக்கலாம் என்பதற்காக சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய, பல்வேறு அரசியல் கட்சிகளை, தலைவர்களை அல்லது பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழுவினை இப்போது நீங்கள் நியமித்து இருக்கிறீர்கள். அந்தமாதிரி 'முனிசிபல் ஆக்ட்' பற்றியும் விரிவாகப் பேசுவதற்காக, 'செலக்ட் கமிட்டி' என்று போட்டு, அந்த ஆய்வுக் குழுவிலே நாங்கள் பேசிக் கொண்டு இருக்கிறோம். அதிலேயும் தலைவர்களை எப்படி பணி நீக்கம் செய்வது என்பது பற்றியும் நாங்கள் பேசியிருக்கிறோம். இந்தக் குழுக்களை அமைத்துவிட்டு, அந்தக் குழுக்கள் தங்களுடைய முடிவான அறிக்கையை கொடுப்பதற்கு முன்னாலே, இதை இன்று கொண்டுவர வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது என்பது இரண்டாவது கேள்வி. ஆகவே, தவறு செய்யக்கூடிய தலைவர்களை உறுப்பினர்களே நீக்கக்கூடிய அதிகாரம், பிரிவு 207-லே கொடுக்கப்பட்டு--பிரிவு 207 என்பது அருமையான பிரிவு, "Checks & Balances"-க்கான அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறது, அந்த அதிகாரத்தை 'மிஸ்-யூஸ்' பண்ணாதபடி தடுக்கக்கூடிய அதிகாரமும் அரசுக்கு இருக்கிறது. இந்த அரசு என்பது என்ன? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு சபைதான் இது. ஏதாவது ஒரு தலைவரை வேண்டுமென்றே அரசு நீக்கிவிட்டால்கூட, இங்கு வந்து பேச முடியும். ஆகவே கீழே இருக்கக்கூடிய மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட ஓர் அமைப்பில் தவறு நேர்ந்து விடாமல் தடுப்பதற்காக உள்ள ஓர் அதிகாரத்தை மேலே இருக்கக்கூடிய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு பாதுகாக்கும் என்ற அடிப்படையிலே இருக்கக்கூடிய சட்டம். ஆகவேதான், இதை இப்போது அவசரப்பட்டு கொண்டுவர வேண்டாம் என்று என்னுடைய விளக்கமாகக் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் அவர்கள் குறிப்பிட்ட அந்த வாதத்தில், இரண்டு குறிப்பிட்ட அம்சங்களை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஏற்கெனவே வேறு சில பிரச்சினைகளுக்காக 'செலக்ட் கமிட்டி' ஒன்று போடப்பட்டு இருக்கின்றது. அதிகாரங்களை எப்படிப் பரவலாக்குவது என்பதற்காகக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டும் தங்களுடைய முடிவுகளை, பரிந்துரைகளைத் தராத



1998 மே 29] [கலைஞர் மு. கருணாநிதி]

இந்த நேரத்தில், இந்தத் திருத்தம் தேவையில்லை என்பது அவருடைய வாதம். அதை நான் ஏற்றுக்கொண்ட காரணத்தால்தான், நேற்றையதினம் இதுபற்றி ஒரு கடிதம் கொடுத்தவுடன், அதுகுறித்து நாங்கள் விவாதித்து, இன்றைக்கு அதைக் கொண்டு வர வேண்டாம், ஒத்திவைத்து விடலாம் என்றவொரு நிலை எடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே எந்த மாற்றமும் இல்லை; அதனால் நீங்கள் கை தட்டியது வீணாகப் போகாது. ஆனால் நான் தெரிந்துகொள்ள விரும்புவது, பாதுகாப்புத் தருகின்ற அதிகாரம் அரசுக்குத்தான் உண்டு என்ற வாதத்தை நான் ஏற்றுக்கொள்வதாக இல்லை. அதற்கு விளக்கம் தேவை இல்லை. ஜனநாயகத்தில் ஒவ்வொரு அமைப்பிலும் வருகின்ற உறுப்பினர்களுடைய பெரும்பான்மையைப் பொறுத்துத்தான் ஒரு தலைவரோ, மற்ற நிர்வாகிகளோ அங்கே அமைய முடியும். அப்படியில்லாமல் சட்டமன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்களுடைய பெரும்பான்மைக்கு ஏற்பத்தான், அங்கே சட்டமன்றக் கட்சிகளுடைய தலைவர் ஒருவர் இருக்க முடியும். பாராளுமன்றத்திலே வருகின்ற பெரும்பான்மைக்கு ஏற்பத்தான் பாராளுமன்றத்திலே ஒரு பிரதமர் அல்லது ஒரு தலைவர் வர இயலும். அதைப்போலத்தான், அதுவேதான் ஒரு 'மினி பாராளுமன்றம்', ஒரு 'மினி சட்டமன்றம்' என்ற அளவில் ஒன்றியங்களில் உள்ள தலைவர்களை வைத்திருக்கிற அல்லது விலக்குகிற, பாதுகாக்கிற அல்லது 'உன்னைப் பாதுகாக்க முடியாது, வெளியே போ' என்று விரட்டுகிற இந்த அதிகாரங்களை அங்கே தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கிற அந்த உறுப்பினர்கள்தான் வைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் நாளைக்குப் பேசக்கூடும், "அதிகாரங்களைப் பரவலாக்குவதாகச் சொன்னார்கள், குழுக்கள் எல்லாம் போட்டார்கள், ஆனால் அதிகாரங்களை அரசே வைத்துக்கொண்டு இருக்கிறது" என்று சொல்லக்கூடும். எல்லா அரசுகளும் இப்போது இருக்கின்ற அரசைப் போல இருக்கும் என்று எண்ணக்கூடாது. அடுத்து வருகின்ற ஓர் அரசு வேறு ஒருவிதமான அரசாக இருந்தால், ஆர்.டி.ஓ. என்ன, டி.ஆர்.ஓ. என்ன, யாரை வேண்டுமானாலும், என்ன அவர்கள் சொன்னாலும் அதைப்பற்றிக் கேட்காமல், two-third கையெழுத்து வாங்கி அனுப்பப்பட்டவுடனேயே ஆர்.டி.ஓ. போய் விசாரித்ததாக எழுதிக்கொண்டு அவர்களைத் தலைவர் பதவியிலிருந்து விலக்கி விடக்கூடும்.

அதனால்தான் கொஞ்சம் பாதுகாப்பாக இருக்கட்டும் என்று இது சிந்திக்கப்பட்டது. இப்போது தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. திரு. சொக்கர், டி.எம்.சி.- தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 மே 29

கடிதத்தை ஏற்று, இங்கே பேசப்பட்ட கருத்துக்களை ஏற்று, அது தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 12-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 10 முடிய, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 10 முடிய, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

**பிரிவுகள் 11 மற்றும் 12**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொக்கர் அவர்களும் மற்றவர்களும் குறிப்பிட்டதையொட்டி, இந்தச் சட்டமுன்வடிவின் மீது எடுத்துச் சொன்ன கருத்துக்களை அரசு ஏற்றுக்கொள்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப்போல, பிரிவுகள் 11 மற்றும்



1998 மே 29] [திரு. கோ.சி. மணி]

12 ஆகியவற்றை இந்தச் சட்டமுன்வடிவிலிருந்து நீக்கிவிடலாம் என அரசு கருதுகிறது. இதனை அவையின் ஒப்புதலுக்காக வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பிரிவுகள் 11 மற்றும் 12. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவிலிருந்து (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/1998) பிரிவுகள் 11 மற்றும் 12 ஆகியவற்றை நீக்கிவிடலாம்" என்னும் திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

பிரிவுகள் 11 மற்றும் 12 ஆகியவை சட்டமுன்வடிவிலிருந்து நீக்கப்படுகின்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/1998) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு திருத்தப்பெற்றபடி ஏற்கப்பட்டது.

### (ஏ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/1998), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/1998)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

---

@ 27-5-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஏ) தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/1998). மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/1998)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

@ 25-5-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீரமானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.**

[1998 மே 29

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 12-35

## (ஔ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்றுதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1998 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்றுதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/1998), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்றுதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/1998)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

@ 28-5-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1998 மே 29]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவின் மூலமாக அச்சம் ஏற்படுவதற்கான ஒரு சிறிய வாய்ப்பு இருப்பதாக நான் கருதுகிறேன். தற்போது தண்ணீர் வரி 7 சதவிகிதம் என்று இருக்கிறது. பழைய சட்டத்திலே அதிகபட்சமாக தண்ணீர் வரி 20 சதவிகிதம் என்றும், கழிவு நீரகற்றுவதற்கான வரி 10 சதவிகிதம் என்றும் 34-வது பிரிவிலே குறிப்பிட்டிருப்பதை மாற்றுவதற்காக இப்போது இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது. குறிப்பாக இதிலே தண்ணீர் வரி 35 சதவிகிதம் என்றும், கழிவு நீரகற்றும் வரி 15 சதவிகிதம் என்றும் திருத்த வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. முன்னாலே 20 சதவிகிதம், 10 சதவிகிதம் என்று இருக்கிறபோதே தண்ணீர் வரி 7 சதவிகிதம்தான் வசூலிக்கப்படுகிறது. ஆகவே, இதிலே கூடுதலாக 35 சதவிகிதம், 15 சதவிகிதம் என்று சொல்வது என்பது மேலும் உயர்வுக்கான வழி வகுக்குமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. ஆகவே இதைப்பற்றி விளக்க வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வரி உயர்வு தொடர்ந்து மக்களை நிச்சயமாகப் பாதிக்கக்கூடிய ஒன்று. ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இதைக் கொஞ்சம் மறுபரிசீலனை செய்து, இந்த அளவிற்கு, 35 சதவிகிதம், 15 சதவிகிதம் என்று நாம் கூட்ட வேண்டுமா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டுமென்று நான் தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு கொடுப்பதில் இப்போது தடை இருக்கிறது. அதையும் அமைச்சர் அவர்கள் கொஞ்சம் கருணை கூர்ந்து கவனித்து அந்த மாவட்ட ஆட்சித் தலைவரோ, அல்லது குடிநீர் வடிகால் வாரியமோ அதைச் செய்து கொடுக்க--கிராமப்புறங்களிலே உள்ள வீடுகளுக்குகூட குடிநீர் குழாய்கள் இணைப்பு கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டது ஏற்கெனவே 7 சதவிகிதம் இருந்ததை, 10 சதவிகிதம் இருந்ததை, 35 சதவிகிதம், 15 சதவிகிதம் என்று குறிப்பிடுகிறார்கள். பயமாக இருக்கிறது, அதிகமான தொகை வரும் என்று சொல்கிறார்கள். ஏற்கெனவே அப்படியெல்லாம் இருந்த காரணத்தினால்-ஏற்கெனவே குடிதண்ணீருக்கும் அப்படி இருந்தது. இங்கே இருக்கின்ற நீங்கள் அத்தனைபேரும் வைக்கின்ற கேள்வியாக இருந்தாலும், ஒத்திவைப்புத் தீர்மானமாக இருந்தாலும், குடிதண்ணீரை பொறுத்துத்தான் இங்கே பேசப்படுகிறது, எழுப்பப்படுகிறது, பிரச்சினைகள் உருவாக்கப் படுகின்றன. எனவே, இவைகளையெல்லாம் நிறைவேற்றித்தர வேண்டுமானால், இன்றைக்கு பொருளாதார அடிப்படையில் கணக்குப் பார்த்து-ஏற்கெனவே இருந்த சட்டத்தின்படி வரி விதித்தது வேறு முறையில். அப்போது வரி விதித்தது-அவர்கள் கொடுத்திருக்கிற வாடகையின் அடிப்படையில் வரியை விதித்து, அந்த வரியின் அடிப்படையில் சதவிகித கணக்கிட்டு, ஏற்கெனவே வரி வசூலிக்கப்பட்டது. இப்போது அப்படியல்ல, சதுரஅடி கணக்கில் வரி விதிக்கப்பட்டு, அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டு, அது உண்மையா, நீங்கள் சொல்கிற கணக்கு சரிதானா என்று சொல்லபபட்டு நீங்களே வரி செலுத்தலாம் என்ற அளவிற்கு சட்டம் எளிதாக்கப்படுகிறது. இது அங்கே பேசப்பட்டு, செலக்ட் கமிட்டியிலே பேசின உறுப்பினர்கள் அங்கே தெரிவித்த கருத்தையொட்டித்தான் இந்தச் சட்டமே கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதிலே மிக முக்கியமானது இப்போது அக்டோபர் 1-க்குப் பிறகு இது அவசரமாகக் கொண்டுவரப்படுகிற காரணத்தால் அதிலிருந்து எடுத்து, இதை நாம் இப்போது இங்கே நிறைவேற்றுகின்ற வாய்ப்பு வந்திருக்கிறது. ஆகையினால் எந்தவிதமான அச்சமும் தேவையில்லை. பொருளாதார நிலைக்கு ஏற்பத்தான் சதவிகிதக் கணக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. நம்முடைய செலவினமும் கூடிக்கொண்டு போகிறது. எனவே தயவுசெய்து, சட்டமுன்வடிவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 7 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 7 முடிய, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

[திரு. கோ.சி. மணி] [1998 மே 29

"1998 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்றுதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

*பிற்பகல் 12-40*

## (க) தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/1998), மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/1998) @ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

@ 27-5-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1998 மே 29]

***திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மோட்டார் வாகனங்கள் வரி விதிப்பு திருத்தச் சட்டத்தை வரவேற்கிறேன். ஏற்கெனவே இரண்டு சக்கர வண்டிகளுக்கும் ஆயுட்கால வரி விதிப்பு உள்ளது. மீண்டும் அதை விரிவுபடுத்தி மினி பஸ் வரையிலே, 3000 கிலோ கிராம் எடையுள்ள வாகனங்களுக்கு நீங்கள் லைஃப் டாக்ஸ் போட்டு இருக்கிறீர்கள். அதுமட்டுமல்லாமல் 5 ஆண்டுகால லைஃப் உள்ள அனைத்து வாகனங்களுக்கும் லைஃப் டாக்ஸ் கட்டலாம், ஆயுட்கால வரி கட்டலாம் என்ற நிலை உள்ளது. அதைக் குறைந்தது ஒரு 10 ஆண்டுகாலமாவது உயர்த்தித்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். யார், யார் விருப்பம் உள்ளவர்களோ, அவர்கள் செலுத்தலாம் என்பதையும்--நேஷனல் பர்மிட் உள்ள வண்டிகளுக்கு, 9 ஆண்டு காலம், 10 ஆண்டு காலம் லைஃப் உள்ள வாகனங்களுக்கெல்லாம் நேஷனல் பர்மிட் எடுத்துக்கொள்ளலாம் என்ற ஒரு நிலையிருக்கிறது. அதைப்போல இதையும் ஏற்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு, மீன்பாடி வண்டிகள், 3 சக்கர வண்டிகளுக்கு புல்லட் என்ஜினை....

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு ஆரம்பத்திலேயே நான் தெளிவாகக் கூறினேன். இன்றுகூட 'இந்து' பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. கமர்ஷியல் வெகிக்கிள்ஸ், இதுபோன்ற லாரிகள், மீன்பாடி வண்டிகள், மினி பஸ் போன்றவைகளுக்கு எல்லாம் இந்த வரிச் சலுகை செல்லாது. கார்களுக்கும், ஜீப்புகளுக்கும் மட்டும்தான் இந்த ஆயுட்கால வரி விதிப்பு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்..

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் வரி விதிப்பைப் பற்றிச் சொல்லவில்லை. இந்த வண்டிகள் எல்லாம் லைசென்ஸ் இல்லாமல் ஓடுகின்றன. 10, 15 பேரை ஏற்றிக்கொண்டு செல்கிறார்கள். அவ்வாறு ஏற்றிச் செல்கிறபோது அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதிகாரிகள் இங்கேயிருக்கிறார்கள். இதை ஒழுங்குபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, இப்போது வாகனங்கள் பெருகிவரும் நிலையில் ஆறு ஆர்.டி.ஓ. வட்டார அலுவலகங்கள்

என்று இருப்பதை ஏறக்குறைய எட்டு அல்லது பத்தாக நீங்கள் உயர்த்தித் தர வேண்டும். கடந்த ஆண்டு பெரம்பூரில் ஒரு ஆர்.டி.ஓ. அலுவலகத்தை அமைச்சரே திறந்து வைத்தார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்வதோடு, அங்கே ஆர்.சி. புக், ரெஜிஸ்டிரேஷன் சர்டிபிகேட் வழங்குவதற்கான கம்ப்யூட்டர் இல்லை. அடிக்கடி அண்ணாநகர், திருமங்கலம் செல்வதால் காலதாமதம் ஏற்படுகிறது என்ற நிலையை நீங்கள் கருத்திலே கொண்டு, அங்கே ஒரு கம்ப்யூட்டர் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆர்.டி.ஓ. அலுவலகங்களில் இன்றைக்கு பர்மிட் ஆனாலும், டாக்ஸ் ஆனாலும், புரோக்கர் தொல்லை இருக்கிறது. கடந்த ஆண்டுகூட நீங்கள் தெரிவித்தீர்கள், இந்த புரோக்கர் முறையை நீங்கள் ஒழிக்க வேண்டும். ஒழித்து, ஏஜென்சி லைசென்ஸ்--ஸ்டாம்ப் வெண்டாரைப் போல சப்-ரெஜிஸ்டிரார் ஆபீசில் உள்ள ஸ்டாம்ப் வெண்டாரைப் போல-ஏஜென்சி லைசென்ஸ் முறையைக் கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக ஒன்றே ஒன்று. தமிழகத்திலே இருக்கிற நேஷனல் பர்மிட் வண்டிகள் அனைத்திற்கும் நேஷனல் பர்மிட்டிற்கான வரிகளை நீங்கள் வசூல் செய்து அண்டை மாநிலங்களுக்குத் தவறாமல் அனுப்புகிறீர்கள். ஆனால், வெளி மாநிலங்களிலிருந்து வரும் தமிழகத்திற்கான அந்த நேஷனல் பர்மிட்டிற்கான டாக்ஸ் பல ஆண்டு காலமாக இருந்தாலும் கூட நமக்கு வருவதில்லை. ஆகவே, அதைத் தவிர்க்கின்ற வகையில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மோட்டார் வாகனங்களுக்கான புதிய பதிவுகள் செய்வதற்கான தொகையை இங்கே அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, 3,000 கிலோ கிராம் எடையுள்ள வாகனங்களுக்கு 51,340 ரூபாய் வாகன வரியாகச் செலுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தொகை மிகவும் அதிகமாக இருப்பதாக பல தரப்பிலிருந்தும் செய்திகள் வந்திருக்கின்றன. குறிப்பாக, இதற்கு முன்பு எவ்வளவு இதற்குச் செலுத்தியிருக்கிறார்கள் என்கின்ற விவரம் இதிலே இல்லை. எனவே, அவைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டாவதாக, போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரை சில சீர்திருத்தங்களை





அங்கே செய்வோமேயானால், மக்களுக்கு நல்ல பலன் கிடைக்கக்கூடும். உதாரணமாக, ஆண்டுக்கு 100, 200 கோடி ரூபாய் இன்றைக்கு நட்டம் ஏற்பட்டுக் கொண்டு வருகிறது. ஆனால், ஒரு சேவை வசதி அதிலே இல்லை. அரசாங்கத்தினுடைய போக்குவரத்துக் கழகங்கள் மிகவும் சிறப்பாகச் செயல்படுகின்றன; மக்களுக்கு அதனால் பல வசதிகள் கிடைக்கின்றன என்று சொல்லக்கூடிய வகையில் நிர்வாக முறை இல்லை. எனவே, இவைகளை எல்லாம் நாம் கணக்கிலே எடுத்துக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக தனியார் வசம் இதனை ஒப்படைத்தால் என்ன என்பதைப் பற்றி அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

உதாரணமாக, 500 கோடி ரூபாய், ஆயிரம் கோடி ரூபாய் மூலதனம் உடைய தேசிய நெடுஞ்சாலைகளை தனியார் வசம் கொடுக்கிறோம். 5 ஆயிரம் கோடி ரூபாய் மூலதனம் உடைய அனல் மின் நிலையங்களை தனியார் வசம் கொடுத்துச் செய்கிறோம். 5 லட்சம் ரூபாய், 10 லட்சம் ரூபாய் மதிப்புள்ள பேருந்துகளை தனியாருக்குக் கொடுத்து அதன் மூலமாக அரசு லாபம் ஈட்டுவதிலே என்ன தவறு இருக்கிறது என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இது ஒரு பழைய கான்செப்ட்.. அரசாங்கம்தான் நடத்த வேண்டும், அரசாங்கம் நடத்தினால் முற்போக்கு, இடதுசாரித்தனம் என்பது ஒரு பழைய கான்செப்ட். மேற்கு வங்கத்திலேயேகூட, அரசாங்கம் நடத்துவதைவிட தனியார் நடத்துகிற போக்குவரத்துக்கள்தான் அதிகமாக இருக்கின்றன. ஆண்டுக்கு 200 கோடி ரூபாய், 300 கோடி ரூபாய் நஷ்டத்தை வைத்துக்கொண்டு மக்களுடைய வரிப் பணத்தை எடுத்துக்கொண்டு நிர்வாகம் முடங்கி இருப்பதற்குப் பதிலாக அரசாங்கமே கொஞ்சம் கொஞ்சமாக தனியாருக்குக் கொடுப்பதன் மூலமாக நிதிச் சுமையிலிருந்து விடுபடலாம் என்ற ஒரு கருத்தை நான் சொல்லுகிறேன்.

உதாரணமாக, ஒரு மாவட்டத்தைக்கூட எடுத்துக் கொள்ளலாம். ஒரு மாவட்டத்தை முழுமையாக நீங்கள் எடுத்துக்கொண்டு பரிட்சார்த்தமாக அந்த மாவட்டத்தில் இருக்கின்ற பேருந்துகளுடைய எல்லா வழித் தடங்களையும் ஓர் உயர்நீதிமன்ற நீதிபதியினுடைய ஆலோசனையின் பேரில் டெண்டர் விடலாம். குறைந்தபட்சம் 10 லட்சம் ரூபாய் என்று சொல்லி அதற்கு மேலே யார் எடுக்கிறார்களோ அவர்கள் அந்த டெண்டரைப் பெற்றுக்கொள்ளலாம். *அப்படிச் செய்வோமேயானல் குறைந்தபட்சம் 100 கோடி ரூபாய் ஒரு

மாவட்டத்திற்குக் கிடைக்கும். 100 கோடி ரூபாய் கிடைத்தால் அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு பொதுச் சுகாதாரம், ஆரம்பப் பள்ளிகளுக்கான வசதிகள், கிராமச் சாலைகள் இந்த மூன்றுக்கு மட்டுமே அந்தத் தொகையை செலவு செய்வோமானால், ஒரு குட்டி ஜப்பானைப்போல் தமிழகத்தை நாம் கொண்டுவர முடியும். ஆனால் இன்றைக்கு நிலைமை எப்படி இருக்கிறது என்றால், அதற்குப் பதிலாக அரசாங்கம் ஆண்டுதோறும் 100 கோடி ரூபாய், 200 கோடி ரூபாய் என்று போக்குவரத்துக் கழகங்களுக்குக் கொடுத்து ஒரு முறையற்ற பேருந்துகளை, மக்களுக்கு எந்த வகையிலும் வசதி ஏற்படுத்தாத பேருந்துகளை, தடத்திலே இப்போது நாம் ஓட்டிக்கொண்டிருக்கிறோம். எனவே, அதில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வரலாம் என்று நான் கருதுகிறேன். அரசாங்கம் அதைச் சிந்திக்குமா என்றும் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் மாணவர்களுக்கு இலவசமாகப் பேருந்துகளில் செல்வதற்கு ஒரு வாய்ப்பை நாம் கொடுத்திருக்கிறோம். அதிலே காலை நேரங்களிலும், மாலை நேரங்களிலும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் அந்த வழித் தடங்களிலே ஏறுகிறார்கள். ஆனால் அதற்கு ஏற்ற வகையில் அந்த நேரங்களில் பேருந்துகளை அதிகமாக நாம் விட்டு இருக்கிறோமா என்றால் கிராமப்புறங்களில் இல்லை, ஓரளவுக்கு நீங்கள் நகரங்களில் செய்து இருக்கலாம். ஆனால் கிராமங்களில் இது பெரிய பிரச்சினையாக இருக்கிறது. காலை நேரங்களிலும், மாலை நேரங்களிலும் மாணவர்கள் வந்து செல்வதற்கான வாய்ப்புகள் அதிலே இல்லை. எனவே, அதற்கும் ஒரு வழியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு--தொடர்ச்சி

### (ஆ) சென்னைக் கடற்கரையிலுள்ள காமராஜர் சிலை அருகில் மின்விளக்குப் பொருத்தல்--தொடர்ச்சி

**திரு. ச. அழகிரி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். உதாரணமாக நம்முடைய நண்பர் திரு. ஞானசேகரன் அவர்கள் பேசுகிறபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள், ஆர்வம் மிகுதியிலே அவர் ஒரு கருத்தைச் சொன்னார். காமராஜர் சிலைக்கு ஒளிவிளக்கு அமைப்பது என்பதை ஓர் ஆர்வம் மிகுதியால் அவர் சொன்னார்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதற்கும், இந்த பில்லுக்கும் என்ன சம்பந்தம்?

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் ஆர்வம் மிகுதியால் அதைச் சொன்னார். எப்போதும் திரு. ஞானசேகரன் அவர்கள் ஆர்வம் மிகுதியால் சொல்லுவார்கள். அதனை அரசுத் தரப்பிலே நீங்கள் விரயமாகத்தான் எடுத்துக்கொள்வீர்கள், வேடிக்கையாக எடுத்துக்கொள்வீர்கள். ஆனால் இதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொஞ்சம் வருத்தப்பட்டார்கள். எங்களுக்கும் அது மனதிற்கு சங்கடத்தைத்தான் கொடுத்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வருத்தம் இல்லாமல் வைத்துக்கொள்ள வேண்டும் என்றுதான் நாங்களும் விரும்புகிறோம். (சிரிப்பு) எங்களுக்கு அதிலே மாற்றுக் கருத்து கிடையாது. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு பதில் சொல்கிறபோது 'வைரவனுக்கு உதவி செய்கிற நாதி கூட காங்கிரஸ் கட்சிக்கு இல்லை' என்று சொன்னார்கள். அந்த வார்த்தைகள் எங்களை மிகவும் புண்படுத்தியிருக்கிறது என்பதை மட்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வைரவனுக்கு நீங்கள் உதவி செய்தால் உங்களுக்கு அது ஒரு செய்தி. வைரவனுக்கு நாங்கள் செய்திருக்கிற உதவி என்பது செய்தி அல்ல. நாங்கள் அதை வெளியிலே சொல்ல முடியாது. உதாரணமாக வைரவனுடைய மகனுக்கு ஒரு டாக்டர் சீட் வேண்டும் என்று அவர் கேட்டபோது, தமிழகத்திலே 15 லட்சம் ரூபாய்க்கு அப்போது மருத்துவ சீட் விற்கப்பட்டுக், கொண்டிருந்த நேரம். தலைவர் அவர்கள் அந்தத் தொகையைக் கொடுத்து....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பில்லுக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? (குறுக்கீடு) அதுதான் சொல்லிவிட்டீர்களே?

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொகை கொடுத்து அதைச் செய்து கொடுத்தார்கள். எதற்குச் சொல்லுகிறேன் என்றால் சில உதவிகள் சொல்லக்கூடிய நிலையில் இல்லை. சில உதவிகள் செய்கிறோம் என்றால் அதனைச் சொல்ல முடியாது. வேண்டுமானால் ஆளுகிற அரசாங்கத்திற்கு அது செய்தியாக இருக்கலாம். ஓர் உதவி செய்வது என்பது அவர்களுக்கு ஒரு செய்தியாக இருக்கலாம். அது ஒரு விளம்பரமாக இருக்கலாம். ஆனால், அந்தச் சூழ்நிலையிலே நாங்கள் இல்லை. முதலமைச்சரவர்கள் வருத்தப்படக் கூடாது என்பதற்காக நான் இதனைச் சொல்கிறேன்.

[திரு. ச. அழகிரி] [1998 மே 29

பிற்பகல் 12.50

'கல்கி' படித்ததிலேயிருந்தே முதலமைச்சர் வருத்தமாக இருக்கிறார் என்று நான் கருதுகிறேன். நேற்றுகூட கொஞ்சம் வருத்தமாகத்தான் இருந்தார். எனவே, இதை வருத்தமாக எடுத்துக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொண்டு, வைரவன் குடும்பத்தைப் பொறுத்தவரை பெருந்தலைவர் காமராஜருக்காக மட்டுமல்ல; காங்கிரஸ் இயக்கத்திலே யார் யாரெல்லாம் உழைத்தார்களோ அவர்களுக்கெல்லாம் எங்களுடைய-வலது கரம் கொடுப்பது இடது கரத்திற்குத் தெரியாத அளவிற்கு-அதனை நல்லமுறையிலே பெருந்தலைவர் மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்கள் செய்து வருகிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சரவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, ஒரு கவன ஈர்ப்புப் பிரச்சினை என்றால், அந்தப் பிரச்சினையினுடைய வாசகத்தை மாத்திரம் படித்து விட்டு, "இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்" என்று சொல்வதுதான் இந்த அவையினுடைய பழைய கால மரபு. அந்த மரபுகளெல்லாம் உடைந்து, சுக்குநூறாக ஆக்கப்பட்டுவிட்ட ஒரு சூழ்நிலையில், இன்று நம்முடைய ஞானசேகரன் அவர்கள், கவன ஈர்ப்பு என்ற பெயரால் கொண்டு வந்த அந்தச் சூழ்நிலையில்-- அவர் பெருந்தலைவர் காமராஜருடைய-கடற்கரைச் சாலையிலே உள்ள-காமராஜர் சாலையிலே உள்ள அந்தச் சிலைக்கு ஒளி மிகுந்த விளக்குப் போட வேண்டுமென்று இங்கே இந்தக் கவன ஈர்ப்பைக் கொண்டு வந்திருந்தால் போதுமானது.

அது என்ன, இன்றைக்குத் தமிழ்நாட்டிலே அவ்வளவு பெரிய ஒரு பிரச்சினையா என்பதை உள்ளபடியே எண்ணிப் பார்க்க வேண்டும். நான காமராஜரைக் குறைத்து மதிப்பிடுபவன் அல்ல. அந்தச் சிலையைக் குறைத்து மதிப்பிடுகின்ற அளவிற்கு அற்ப புத்தி படைத்தவனும் அல்ல. ஆனால், ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்துதான் அங்கே விளக்குப் போட வேண்டுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.



998 மே 29] [கலைஞர் மு. கருணாநிதி]

அது மாத்திரம் அல்ல. என்னிடத்திலே ஒரு கடிதத்தைக் கொடுத்தாலே அடுத்த நிமிடமே அங்கே விளக்குப் போடப்பட்டுவிடும். அதற்கான உத்தரவை நான் போட்டிருப்பேன். அது மாநகராட்சி மன்ற மேயர் போட வேண்டுமா அல்லது பொதுப்பணித் துறை அமைச்சர் போட வேண்டுமா, யார் போட வேண்டுமென்றாலும்கூட, நானே அக்கறை எடுத்துக்கொண்டு அதைச் செய்து முடித்திருப்பேன். அந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே அவர், "உங்களால் முடியாவிட்டால் சொல்லிவிடுங்கள். நாங்கள்-கட்சியே போட்டுக் கொள்கிறோம்" என்று சொன்னாரே, அது முறையா என்பதை மாத்திரம் அழகிரி விளக்கினால் போதுமானது. "அழகிரி" என்ற பெயருக்கு அப்பொழுதுதான் பொருத்தமாக இருக்கும்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஆரம்பத்திலேயே சொன்னேன், அவர் ஆர்வம் மிகுதியால் பேசுகிறார், அவருடைய ஆர்வ மிகுதியை வளர்த்து விட்டவர்களே நீங்கள்தான். (சிரிப்பு) எனவே, நீங்கள் இந்த அளவிற்கு-உங்களுடைய மனம் வருத்தப்படுகிற அளவிற்கு அதை எடுத்துக் கொள்ள வேண்டாம் என்பதுதான் என்னுடைய கருத்தேயொழிய...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான்கூட காலையிலே என் அறையிலே கேட்டபோது சொன்னேன். இதை நேரடியாக அமைச்சரிடத்திலே கொடுத்து விடுங்கள், உடனடியாக அவர் செய்து கொடுத்து விடுவார் என்று. "இல்லை, இல்லை, நான் பேசியாக வேண்டும்" என்று வலுக்கட்டாயமாகச் சொன்னார்.

நான் தினந்தோறும் அந்தப் பக்கமாகத்தான் போகிறேன், வருகிறேன், லைட் எல்லாம் எரிகிறது என்று சொன்னபோது "இல்லை, நான் காலையிலே வாக்கிங் போகும்போது பார்த்தேன்" என்றார். காலையிலே எப்படி லைட் எரியும்?

**திரு. மு. அப்பாவு:** ஐயா,....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள்.

## 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)--தொடர்ச்சி

### (க) தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998--தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இங்கு இந்தச் சட்டத் திருத்தத்தின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் செங்கை சிவம் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்களும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் பேசுகிறபொழுது, இந்தப் போக்குவரத்துக் கழகங்களையெல்லாம் தனியார்மயமாக்கி விட வேண்டுமென்ற கோரிக்கையைக்கூட வைத்திருக்கிறார்கள்.

நான் தமிழ் மாநில காங்கிரஸினுடைய தொழிலாளர் பிரிவினுடைய கூட்டத்திலே கலந்து கொள்கிறபோது அந்தக் கூட்டத்திலே ஒரு தீர்மானத்தையே கொடுத்தார்கள், அவர்களையெல்லாம் அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்று.

அங்கே ஒரு தீர்மானம், இங்கே போக்குவரத்துக் கழகங்களையெல்லாம் தனியார்மயமாக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் சொல்கிறார்கள், இது அவருடைய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கையா? இருந்தால், வெளியிட்டால் அதைக்கூட பரிசீலிக்கலாம் அல்லது தனிப்பட்ட நபருடைய கருத்தா என்பதையும் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

ஏனென்றால் அங்கே பேசுகிறபொழுது அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்று, அவருடைய சங்கத்தைச் சார்ந்தவர்களே பேசுகிறார்கள். இங்கே வந்து பேசுகிறபொழுது இவைகளையும்-போக்குவரத்துக் கழகங்களையும் தனியார்மயமாக்க வேண்டுமென்று பேசிக்கொண்டு இருக்கிறார்கள்.



இந்த வேறுபட்ட கருத்துகளுக்கு, அருள்கூர்ந்து மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஒரு தெளிவான கருத்தைச் சொன்னால் அந்தக் கருத்தை இந்தத் துறையிலே பின்பற்றுவதற்கும், பரிசீலிப்பதற்கும் வாய்ப்பாக அமையும்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் சொல்கிற பொழுது, 3 ஆயிரம் கிலோ கிராமிற்கு அதிகமான வாகனங்களுக்கு ரூபாய் 50 ஆயிரத்திற்கு மேல் என்று குறிப்பிட்டார்கள். குறிப்பாக 700 கிலோ கிராம் வரை உள்ள வண்டிகளுக்கு 8210 ரூபாயும், 3000 கிலோ கிராமுக்கு அதிகமாக உள்ள வண்டிகளுக்கு 15 ஆயிரத்து 60 ரூபாய். இது தனியார் வாகனங்களுக்கு.

பிற்பகல் 12-55

அதுபோல, வாகனங்களுடைய மதிப்பு அதிகரிக்குமானால்-10 இலட்சம் ரூபாய்க்கு மேல் அதிகமாகச் செல்லுமானால், 3 ஆயிரம் கிலோகிராம் வரை உள்ள வண்டிகளுக்குத் தனி நபர் வைத்திருந்தால் 30,120 ரூபாய். அவைகளை கம்பெனிகள் வைத்திருக்கிறபொழுது 60 ஆயிரத்துச் சொச்சம் ரூபாய் வாங்குகிறோம்--60 ஆயிரத்து 240 ரூபாய் வாங்குகிறோம். இதையே 15 ஆண்டுகளுக்கு, இப்போது அவர்கள் கட்டுகின்ற வரியோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, 15 ஆண்டுகள் கட்ட வேண்டுமென்று சொன்னால், 75 ஆயிரம் ரூபாய் ஆகிறது. ஆனால், இப்போது, அது ஆயுள் வரியாக மாற்றப்படுகிறபோது 51,340 ரூபாய்தான் ஆகிறது. ஆகவே, ஆயுள் வரியாகக் கட்டுகின்றபோது-அது குறைவாக மதிப்பிடப்பட்டுத்தான் அந்த வரி விகிதத்தைக் கொடுத்திருக்கிறோம். ஆகவே, இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் அனைத்து உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்கிறேன். இதன்மூலமாக ஒவ்வோர் ஆண்டும் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சென்று அதிகாரிகளைச் சந்திக்க வேண்டுமென்ற அவசியமெல்லாம் இல்லாமல், கார் வைத்திருப்பவர்கள் பலர் விரும்புகிற அடிப்படையிலேதான் இந்த ஆயுள் வரி தொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் இதை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 முடிய, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 முடிய, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பிரிவு 1, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"In clause (1) *for* sub-clause (2) *substitute* the following sub-clause namely:-

"Section 4 shall be deemed to have come into force on the 1st day of April 1998 and Sections 2, 3 and 5 shall come into force with effect from 1-7-1998"

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

பிரிவு 1 திருத்தப்பெற்றபடி, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/1998) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு திருத்தப்பெற்றபடி ஏற்கப்பட்டது.

### (ஆ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/1998), மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/1998)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

---

@ 21-5-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.





**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான சட்டமுன்வடிவை நான் வரவேற்கிறேன். அறங்காவலர் குழுவில் நியமிக்கப்படுகின்ற non-officials என்று சொல்லப்படுகிற அதிகாரிகள் அல்லாத நபர்கள் எடுக்கின்ற முடிவோ அல்லது செயல் அலுவலர் எடுக்கின்ற முடிவோ இறுதியானது அல்ல அரசுக்கு அதிகாரம் உண்டு என்று நிலைநாட்டுகின்ற இந்தச் சட்டமுன்வடிவை நான் வரவேற்கிறேன்.

பொதுவாக, அறநிலையத் துறையிலே ஒரு முக்கியமான சட்டமுன்வடிவை இந்த ஆண்டு எதிர்பார்த்தோம். ஒரு மருத்துவர் மருத்துவமனை தொடங்க வேண்டுமென்றால், ஒரு விதிமுறை வேண்டுமென்று இந்த அரசு நினைத்து, தனியார் மருத்துவமனை சட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறது. அதேபோல, ஒவ்வொரு வேலைக்கும், பணிகளுக்கும், ஒரு வரைமுறை இருக்க வேண்டும் என்பதிலே அரசு குறிப்பாக இருப்பது வரவேற்கத்தக்க மனப்பாங்குதான். ஆனால், சமயத் துறையைப் பொறுத்தவரையில், ஆசிரமங்கள் என்ற பெயரிலே, குறிப்பாக, இருக்கின்ற பக்தி உணர்வைப் பயன்படுத்தி செய்கின்ற அட்டூழியங்களைக் கட்டுப்படுத்துகின்ற, தவறான நோக்கத்திலே செய்கின்ற செயல்களைக் கட்டுப்படுத்தக்கூடிய ஒரு சட்டமுன்வடிவை அரசு அறிமுகப்படுத்த வேண்டுமென்று நான் கோருகிறேன். ஏனென்று சொன்னால், சமீபத்தில் பிரபலமாகியிருக்கின்ற கல்கி ஆசிரமம், பிரேமானந்தா ஆசிரமம் போன்ற பல்வேறு ஆசிரமங்களிலே பக்தி என்ற பெயரில், சன்மார்க்க நெறிகள் என்ற பெயரில், பல்வேறு பெயர்களிலே செய்கின்ற நெறிமுறைக்கு மாறான செயல்களைக் கட்டுப்படுத்துகின்ற ஒரு சட்டம் இயற்றப்பட வேண்டுமென்று அறநிலையத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் இந்த ஆன்மீகம் தொடர்பான காரியங்களிலே ஈடுபடுகின்ற பொதுமக்கள், ஈர்க்கப்படுகின்ற பொதுமக்கள் சிறந்தமுறையிலே தங்களைச் செம்மைப்படுத்திக்கொள்வதற்கு ஏதுவாக அமையும் என்று நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நல்ல செயல்களைச் செய்கின்ற, அறப்பணிகளைச் செய்கின்ற ஆசிரமங்கள், அறக்கட்டளைகள் இருக்கின்றன. இவற்றைக் குறை கூறவில்லை, ஆனால், ஆசிரமம் என்ற பெயராலே அது கொடியவர்களுடைய கூடாரமாக ஆகிவிடக்கூடாது என்ற நோக்கத்தில் சிறந்த ஒரு

சட்டத்தை, சட்டமுன்வடிவினை நம்முடைய தமிழக அரசு அறிமுகப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

*பிற்பகல் 1–00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே, தமிழகத்தைப் பொறுத்தவரை, பிற நாடுகளில் இல்லாத அளவிற்கு, தமிழ்நாட்டிற்கு ஒரு தனி அணுகுமுறை உண்டு என்று தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, தந்தை பெரியாரின் வடிவமாகவும், அறிஞர் அண்ணாவின் வடிவமாகவும் விளங்குகிற மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களைப் போன்ற அனைத்து திராவிட இயக்கப் பெருமக்களும் ஒரு கருத்தைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். வேறு சில நாடுகள் முதலில் அரசியல் விடுதலை தேவை. இரண்டாவதாக அதையொட்டிப் பொருளாதார விடுதலை தேவை என்ற அளவோடுதான் வேறு சில நாடுகள் இருக்கின்றன. ஆனால், இந்தியாவைப் பொறுத்தவரை, அதுவும் குறிப்பாகத் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இந்த நூற்றாண்டுகாலத்தில் இந்த இரண்டும் வருவதற்கு முன்னால் சமுதாயச் சீர்திருத்தம் தேவை. அந்தச் சமூக விடுதலை வந்த பிறகுதான் பொருளாதாரமும் செழிக்கும்; அரசியல் விடுதலையும் நிலைக்கும் என்ற அளவிற்கு இந்தக் கருத்தோட்டம் இருப்பது தாங்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில்தான். அதனால்தான் கடந்த காலத்திலே ஆன்மீகத்தின் பெயரால் தவறு செய்கின்றவர்கள் சுட்டிக்காட்டப்பட்டு அவர்கள் சிறுகதைகளில், புதினங்களில் எடுத்துக்காட்டப்பட்டு, சமூக மேடைகளில் அலசி ஆராயப்பட்டு, இன்றைக்கு நிறைய சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இப்போதும்கூட அதேநிலையில் பல பேர் இருப்பார்கள் என்று சொன்னால் அதனைக் கட்டுப்படுத்துவதற்குச் சட்டம் என்பதைவிட பொதுமக்கள் அவற்றைப் புரிந்துகொண்டு, அவற்றைப் புறக்கணிப்பது அல்லது புறந்தள்ளிவைப்பது என்பதுதான் பொருத்தமாக இருக்கும். எனினும் அதுகுறித்து இந்த அரசு சிந்திக்கும்.



அதே நேரத்தில், அறங்காவலர்கள் என்று பொறுப்பேற்றுக் கொண்டவர்களிடத்திலே தவறுகள் நேர்ந்துவிடக்கூடாது. அதேநேரத்தில் திருமடங்கள் என்று வைத்துக்கொண்டால்கூட இந்த அரசுக்கு ஒரு கடமை இருக்கிறது. அவர்களுடைய உடைமைகளை முற்றுமாக இந்த அரசு எடுத்துக்கொள்வதில்லை. அவர்களே அதைப் பேணுகிறார்கள், கட்டிக்காக்கிறார்கள். தண்டல், செலவினங்கள் அனைத்துமே அவர்களுடைய கட்டுக்கோப்புக்குள் வருகின்றன. ஆனால், அரசு விதிக்கின்ற விதிமுறைகளுக்கு மாறாக அவர்கள் நடந்தால் அரசு உடனே தலையிடுகிறது அல்லது அரசினுடைய ஒப்புதல் பெறாமலோ, ஆணை பெறாமலோ அவர்கள் தங்களுடைய நிலங்களைக் கிரயம் செய்தாலோ அல்லது வேறு வகையில் அது வழிமாறிப்போனாலோ அரசு தலையிடுகிறது, அதை ஒழுங்குபடுத்துகிறது. அந்த அளவிற்குத்தான் திருமடங்களை நாம் கட்டுப்படுத்த முடியும்; கட்டுப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் பெரிய அளவிலே அந்த மடங்களுடைய சொத்துக்கள் அனைத்தும் அரசுக்கு வந்து, இரண்டாவதாக அது வேறு சில சூழ்நிலைகளையும் உண்டாக்கிவிடும் என்பதையும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இந்தத் திருத்தம் என்பது ஒரேயொரு நிலையில் அமைகிறது, அதைமட்டும் நான் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். இப்போது அறங்காவலர்கள் ஏராளமான அளவிலே பல கோவில்களுக்கு அமர்த்தப்படுகிறார்கள். குறிப்பாக, 5 பேர் என்று சொன்னால், அதிலே ஒருவர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவராகக் கட்டாயம் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் ஏற்கெனவே இதற்குச் சட்டம் இருக்கிறது. அதேநேரத்தில், ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுகிற அறங்காவலர்கள், கடந்த காலங்களில் பல தவறுகளைச் செய்திருக்கிறார்கள். யாரும் அவர்களைக் கட்டுப்படுத்த முடியாது என்பதுபோல், அரசினுடைய நடைமுறைக்கு மாறாகத் தீர்மானத்தைப் போட்டுச் செயல்பட்டிருக்கிறார்கள். ஆணையருடைய ஒப்புதல் பெறாமலேயே, பல, பல கோடி ரூபாய் கணக்கில், பல இலட்ச ரூபாய்க் கணக்கில் நிலங்கள் விற்கப்பட்டிருக்கின்றன. எனவே, இவற்றையெல்லாம் கட்டுப்படுத்துவதற்குரிய திருத்தம்தான் இது. எனவே, அறங்காவலர்கள் எந்தத் தீர்மானத்தைப் போட்டாலும் அந்தத் தீர்மானம் அரசுக்கு வருவாய் இழப்பை உண்டாக்குமானால் அல்லது அரசினுடைய சட்ட திட்ட விதிகளுக்குப் புறம்பாக இருக்குமானால் அல்லது ஏற்கெனவே கோவில்களுக்கு என்று நிறுவப்பட்டிருக்கிற,

ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிற ஆகம விதிகளுக்கு மாறாக இருக்குமானால் அந்த ஓவியங்களிலோ, சிற்பங்களிலோ இந்த விதிமுறைக்கு மாறாக அவர்கள் கை வைப்பார்களேயானால் அந்தத் தீர்மானங்களை ஏற்றுக்கொள்ளாமல் தள்ளிவிடுகின்ற அதிகாரம் ஆணையருக்கும், அரசுக்கும் இருக்கிறது என்பதுதான் இந்தத் திருத்தம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

*பிற்பகல் 1-05*

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"*1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/1998)* நிறைவேற்றப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஈ) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகச் (திருத்த) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகச் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/1998),* மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998-ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகச் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/1998)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

**பிரிவு 1**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பிரிவு 1, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தம் திருத்தத்தினை முன்மொழியலாம்.

---

@7-4-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"In Clause 1, *for* sub-clause (2) *substitute* the following:

'2(a), Sections 3, 4 and 6 shall be deemed to have come into force on 8th August, 1997.

(b) Section 5 shall be deemed to have come into force on 17th March 1998.

(c) Section 2 shall come into force at once'."
என்னும் திருத்தத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

பிரிவு 1, திருத்தப்பெற்றபடி, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

*"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகச் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/1998) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்"*
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு திருத்தப்பெற்றபடி ஏற்கப்பட்டது.

**(ரு) தமிழ்நாடு வன (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு வன (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/1998), மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,





*"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு வன (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/1998)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"*
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக வரவேற்கிறேன். இதில் தனியார், சந்தன மரம் போன்ற விலையுயர்ந்த மரங்களை வளர்ப்பதற்கான அனுமதியைத் தருகிறீர்கள். மரம் வளர்க்க அனுமதியைத் தந்து, அந்த மரங்களை அரசுக்குத்தான் விற்க வேண்டுமென்ற விதியையும் இதில் சேர்த்திருக்கிறீர்கள். பொதுவாக ஒருவர் கஷ்டப்பட்டு மரங்களை வளர்த்த பிறகு நீங்கள் உரிய நேரத்தில் மரத்தினை வாங்காமல் விட்டால், அந்த மரத்தை நட்டு, கஷ்டப்பட்டு வளர்த்தவர்கள் பெருத்த நஷ்டத்திற்கு ஆளாகிவிடுவார்கள். இப்போது வனத் துறை பஞ்சாயத்து ஏரியாக்களிலே கருவேலமரம் என்ற மரத்தை பல கிராமங்களிலே வளர்த்துவிட்டு அந்த மரங்கள் எல்லாம் 10 ஆண்டுகள் வயதாகியும், ஏலம் விடாத காரணத்தால் யார், யாரோ அதை எடுத்துச் சென்று விடுகிறார்கள். சந்தன மரம் அதைவிட விலை உயர்ந்தது. விலை உயர்ந்த மரம் என்று சொன்னால் கடத்தல்காரர்கள் அதையும் கடத்திக்கொண்டு போய்விடக் கூடிய நிலைமை நிறைய இருக்கிறது. ஆகவே, அரசு மார்க்கெட் ரேட் எவ்வளவு இருக்கிறது என்பதை அறிந்து, அந்த மரத்தை வளர்த்தவர்கள் எப்போதெல்லாம் மனு கொடுக்கின்றார்களோ அப்பொழுது அந்த ரேட்டிற்கு உடனடியாக எடுத்துக்கொள்வதற்குத் தயாராக இருக்க வேண்டும். அதிலே காலம் கடத்தினால், அந்த மரத்தை யாராவது வெட்டி எடுத்துக் கொண்டு போய்விடுவார்கள். அதேபோல, சந்தன மரக் கடத்தல்காரர்கள், இப்பொழுது நாம் Forester, Ranger என்றெல்லாம் வைத்திருந்தாலும், அரசாங்க சொத்தையே கடத்துகின்றபோது, தனியார் மரத்தை மிக எளிதாகக் கடத்திக் கொண்டு போய்விடுவார்கள். எனவே, அதற்கும் தக்க பாதுகாப்பை, அவற்றை வளர்க்கக்கூடிய விவசாயிகளுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டு அமைகின்றேன்.

---

@19-5-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

பிற்பகல் 1-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சந்தன மரங்களை வளர்த்தால் அது உடனடியாகப் பலனுக்கு வருவதில்லை. ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்குப் பின்னால்தான் பலனுக்கு வரும். எனவே, இப்போது அதுபற்றி உறுப்பினர் கவலைப்படுவது ஆச்சரியமாக இருக்கிறது. இருந்தாலும், அரசுக் காடுகளில் இன்றைக்கு ஏராளமான சந்தன மரங்கள் இருக்கின்றன. அதை வெட்டுவதற்கு தனியாருக்கு இப்பொழுதே அனுமதி கொடுத்துவிட்டால், அது கடத்தல் குற்றங்களுக்கு ஏதுவாக அமைந்துவிடும். ஆகவே, இதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு வன (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[1998 மே 29

### (ட) இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *அடுத்து, 1998 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/1998). மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.*

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/1998)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.*

*பிரிவுகள் 2 முதல் 5 முடிய, திருத்தங்கள் இல்லை.*

*பிரிவுகள் 2 முதல் 5 முடிய, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

---

@ 27-5-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1998 மே 29] [பேரவைத் துணைத் தலைவர்]

*பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.*

## 7. அறிவிப்புகள்-தொடர்ச்சி

### (ஆ) முதல்வர் அளிக்கும் விருந்திற்குச் செல்ல சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பேருந்து வசதி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இன்று இரவு*

7-30 மணிக்கு 'பார்க் ஷெரட்டன்' ஹோட்டலில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு விருந்து அளிக்க உள்ளார்கள். அதற்கான அழைப்பிதழ் உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர்கள் விருந்தில் கலந்து கொள்வதற்கு ஏதுவாக சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலிருந்து 'பார்க் ஷெரட்டனுக்கு'ச் இன்று மாலை 6-15 மணி முதல் 6-30 மணி வரையிலும் செல்வதற்கும், விருந்து முடிந்து, மீண்டும் சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்கு வந்து சேருவதற்கும் பேருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 9. அரசினர் தீர்மானம்

### பேரவை விதி 32-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். 30-5-1998 அன்று வினா நேரம் தள்ளி வைத்தல் குறித்து. மாண்புமிகு பேரவை முன்னவர்.

பிற்பகல் 1-15

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 30-5-1998 அன்று தளர்த்தி, அந்நேரத்தை, அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"
என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.





பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (30-5-1998) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-16 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

172. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 13-1-1998ஆம் நாளிட்ட 2ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1937ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

173. 1996-97-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஆண்டுக் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை [1948ஆம் ஆண்டு மின்சாரம் (விநியோகம்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948, 69(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

252. பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்து நான்காவது அறிக்கை, 1997-98.

253. பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்து ஐந்தாவது அறிக்கை, 1997-98.

254. சட்டமன்றப் பேரவை உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள் எழுப்பிய உரிமை மீறல் பிரச்சினை மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை.

D
V211,31'N98
N98.58.2-1
219401